அத்துடன் மாணவர்களுடன் நட்புடனான உறவைக் கொண்டு மாணவர் மத்தியில் ஒழுக்கத்தை பேணுவதுடன் மாணவ முதல்வர் சபைக்கும் ஆசிரியர்களுக்குமான இடைத்தாக்கங்களை சிறப்பாக இற்றைவரை பேணி, தமது செயற்பாட்டை செவ்வனே மேற்கொண்டுவருகின்றன. அந்த வகையில் எமது பாடசாலை மாணவ முதல்வர்களும் எம்பாடசாலை ஒழுக்கத்தை நிலைநாட்டுவதிலும் பாடசாலை நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற உறுதுணையாக இருந்து வருகின்றனர்.

எம் பாடசாலை மாணவ முதல்வர் சபையானது பாடசாலையின் உள்ளக சமூகத்தில் தமது செயற்பாடுகளை செய்வதுடன் நின்றுவிடாமல் சமுதாயத்திலும் பல்வேறு மாவட்டங்களில் பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டு சமுதாயத்தில் தனக்கென ஒரு தனித்துவத்தை பதிவு செய்துள்ளது.

**பாடசாலைகள் மட்டத்தில் எமது செயற்பாடுகள்.**

1. தினமும் காலையில் ஒழுங்கான மற்றும் ஒழுக்கமான முறையில் மாணவர் வருகையை உறுதி செய்தல்.
2. தினமும் காலையில் பாடசாலை வகுப்பறைச் சுத்தத்தை உறுதி செய்தல்.
3. காலை பிரார்த்தனையிலும், உடற்பயிற்சியின் போதும் மாணவர்களின் ஒழுங்கை உறுதி செய்தல்.
4. பாடசாலையில் ஏனைய கழகங்களினால் நடாத்தப்படும் விழாக்களிற்கு பங்களிப்பு செய்தல்.
5. பாடசாலை பரிசளிப்பு நிகழ்வின்போது மாணவ ஒழுக்க நெறிகளைப் பேணுதல்.
6. ஆசிரியர்தின நிகழ்வினை ஒழுங்கமைத்து ஆசிரியர்களை கௌரவிப்பதுடன் ஆசிரியருக்கு பழையமாணவர் சங்கத்தினரின் உதவியுடன் விருந்துபசாரமும் மேற்கொள்ளல்.
7. ஆசிரிய தினத்தின்போது ஆசிரியர்களிற்கும் மாணவ முதல்வர்களிற்கும் இடையில் சிநேகித பூர்வ துடுப்பாட்டப் போட்டி நடத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. வடக்கின் மாபெரும் போர் என வர்ணிக் கப்படும் சென்றல் - சென். ஜோன்ஸ் துடுப்பாட்டப் போட்டியின்போது ஒழுங்கு நெறிகளை பேணுதல்.

9. மற்றும் பாடசாலையின் இதர சங் கங்களின் செயற்பாட்டுக்கு பக்கபல மாக இருத்தல்.

வெளிமாவட்ட செயற்பாடுகள்.

1. அமரர்.பொன்.விபுலானந்தன் ஞாப கார்த்தமாக மாவட்ட மட்ட ரீதியில் பாடசாலை மாணவர்களுக்கிடையில் நுண்ணறிவுப் போட்டி நடத்துதல். அப்போட்டியில் முதல் மூன்று இடங் களைப் பெற்றவர்களுக்கு பாடசாலை ரீதியில் சான்றிதழ்களையும், மாவட்ட ரீதியில் சான்றிதழ் மற்றும் பதக்கங் களையும் வழங்குதல்.

2. அமரர்.பொன்.விபுலனாந்தன் ஞாப கார்த்த கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி மாவட்ட மட்ட ரீதியில் ஆண்கள் பெண்கள் என இருதரப் பினருக்கும் நடத்துதல். அப்போட்டி யின் இறுதிப் போட்டியை மின்னொ ளியில் ஒவ்வொரு வருடமும் ஒக்டோ பர் மாதம் 30 ஆம் திகதி நடத்தி வெற்றி பெற்ற அணிக்கு கேடயம் வழங்கி கௌரவித்தல் மற்றும் ஆட்ட நாயகன், தொடர் ஆட்ட நாயகனுக்கான கேடயங்களையும் வழங்குதல்.

3. பாடசாலைகளுக்கு இடையில் விவாதப் போட்டி நடத்துதல்.

இவ்வாறு பல செயற்பாடுகளை எமது பாடசாலை மாணவ முதல்வர் சபை மேற்கொண்டு வருவது வியத்தகு விடயமாகும்.

மேலும் நாம் ஒன்றிணைந்து கல்லூரிச் சமூகத்தினரின் இன்ப துன்ப நிகழ்வுகளிலும் கலந்து கொண்டு கல்லூரியின் வளர்ச்சிக்கு எமது மாணவ முதல்வர் சபையின் சேவை பல்வேறு வழிகளிலும் பெரும் பங்காற்றி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

பாடசாலையில் மகுட மகிமைக்கு பங்கம் விளைவிக்காத வகையில் சிறப்பாக செயற்பட்டு வரும் முதல்வர் சபை இனி வரும் காலங்களிலும் அதன் மகிமையை தாழ விடாது பேணிவரும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.



யாழ் மத்திய கல்லூரி மாணவர் முதல்வர் சபையினால் நடாத்தப்பட்ட அமரர்.பொன்.விபுலானந்தன் ஞாபகார்த்த மாவட்டரீதியிலான பொது அறிவுப் போட்டிப் பரீட்சையின் போது (2014)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# JAFFNA CENTRAL COLLEGE
# Board of Prefects

T.P: +(94) 21 222 2184
+(94) 21 222 3658
email: jccboardofprefect@gmail.com
Jaffna,
Srilankaa.

Principal
*Mr.S.K.Elilventhan*

Staff Adviser
*Mr.N.Ananthasayanan*

Senior Prefect
*Mas.S.Kajaruban*

Asst. Senior Prefect
*Mas. T.Abiraja*

Secretary
*Mas.V.Kavuthaman*

Treasurer
*Mas.Y.Thujeevan*

Editor
*Mas.S.Gobinath*

## கடந்த வருடச் செயற்பாடுகள்

2013 ஆம் ஆண்டுக்கான மாணவர் முதல்வர் சபை நிர்வாகக் குழுவானது பின்வருமாறு அமையப்பெற்றது. 2013 - 2014 ஆண்டுக் கான செயற்பாடுகளை சிரேஸ்ட மாணவ முதல்வன். ச. கஜரூபன், உதவி சிரேஸ்ட மாணவ முதல்வன் த. அபிராஜா, செயலாளர் வே.கவுதமன், பொருளாளர் யோ.துஜீவன், எழுத்தாளர் சூ.கோபிநாத் ஆகியோர் அடங்கிய நிர்வாகக் குழு செயற்படுத்தியது.

இவ் 2013 ஆம் ஆண்டிற்கான மாணவமுதல்வர் சபையானது சில செயற்றிட்டங்களை மேற்கொண்டது. அந்தவகையில் அமரர். பொன். விபுலானந்தன் ஞாபகார்த்த பொதுஅறிவுப்போட்டி, கூடைப்பந் தாட்ட சுற்றுப்போட்டி என்பன கல்லூரி மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் மாவட்ட ரீதியிலே வெற்றிகரமாக நடாத்தி முடிக்கப்பட்டது
.

அந்தவகையில் அமரர்.பொன்.விபுலானந்தன் ஞாபகார்த்த பொது அறிவுப்போட்டியினை 15.05.2013 அன்று மாவட்டரீதியாக வெற்றிகரமாக நடாத்தி முடித்ததுடன். எமது மாணவ முதல்வர் சபையின் ஆலோசகரின் மேற்பார்வையின் கீழ் வினாத்தாள்கள் திருத்தப்பட்டு பாடசாலை ரீதியில் முதல்மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக் கான சான்றிதழ்கள் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

15.10.2013 அன்று எமது கல்லூரியின் முக்கிய நிகழ்வான பரிசளிப்பு தின நிகழ்வில் எமது பங்களிப்பை மிகச் சிறப்பாக மேற் கொண்டு மாணவர்களின் ஒழுங்கை நிலைநாட்டினோம்.

அடுத்ததாக எமது முதல்வர் சபையின் முக்கியதொரு நிகழ்வான அமரர்.பொன்.விபுலானந்தன் ஞாபகார்த்த கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி 15.10.2013 இல் கல்லூரி முதல்வர் திரு.சி.க. எழில்வேந்தன் அவர்களினால் ஆரம்பிக்கப்பட்டு இறுதிப்போட்டி 30.10.2013 அன்று மிக விமரிசையாகவும் வெற்றிகரமாவும் நடாத்தி முடிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# JAFFNA CENTRAL COLLEGE
## Board of Prefects

T.P: +(94) 21 222 2184
+(94) 21 222 3658
email: jccboardofprefect@gmail.com
Jaffna,
Srilankaa.

Principal
***Mr.S.K.Elilventhan***

Staff Adviser
***Mr.N.Ananthasayanan***

Senior Prefect
***Mas.S.Kajaruban***

Asst. Senior Prefect
***Mas. T.Abiraja***

Secretary
***Mas.V.Kavuthaman***

Treasurer
***Mas.Y.Thujeevan***

Editor
***Mas.S.Gobinath***

கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் முடிவுகள்:

| | ஆண்கள் பிரிவு | பெண்கள் பிரிவு |
|---|---|---|
| முதலாம் இடம் | யாழ் இந்துக்கல்லூரி | யாழ்.இந்து மகளிர் கல்லூரி |
| இரண்டாம் இடம் | யாழ்.மத்திய கல்லூரி | யாழ்இராமநாதன் மகளிர் கல்லூரி |
| மூன்றாம் இடம் | புனித பத்திரிசியார் கல்லூரி | யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி |

இந்நிகழ்வில் வெற்றிபெற்ற அணிகளுக்கு வெற்றிக்கேடயங்கள் வழங்கப்பட்டதுடன் ஆட்டநாயகன், தொடர்ஆட்ட நாயகனுக்கான விருது களும் வழங்கி கௌரவிக்கப்பட்டன. இச்சுற்றுப்போட்டிக்கு Allianz காப்பு றுதி நிறுவனம் பூரண அனுசரணையை வழங்கிப் போட்டியை வெற்றிகர மாக நிறைவுசெய்ய உறுதுணையாக நின்றது.

எனினும் தவிர்க்க முடியாத சில காரணங்களால் ஆசிரியர் தினவிழா கொண்டாட இயலாமை வருத்தத்திற்குரிய விடயமாகும்.

ஆனால் எமது மாணவ முதல்வர் தினத்தை சிறப்புடன் முடித்ததோடு 108வது வடக்கின் போரிலே எமதுசபையின் பங்களிப்பு அளப்பரியதாக அமைந்தது.

இவ்வாறாக 2013-2014 ஆம் ஆண்டிற்கான முதல்வர் சபையின் கடந்த வருட செயற்பாடுகள் அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

| | | |
|---|---|---|
| *Senior Prefect* | S. K. ELILVENTHAN<br>PRINCIPAL<br>Central College<br>Jaffna.<br>*Principal* | *Staff Adiser* |

"Central's Flag Must never be lowered"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# JAFFNA CENTRAL COLLEGE
# BOARD OF PREFECTS

T.P: (+94)21 222 2184
(+94)21 222 3658
E-mail: jccboardofprefects@yahoo.com

Patron:
*Mr.S.K.Eliloventhan*
B.A(Hons), Dip. in. Edu, Dip. in. School Manegement, M.Ed, SLPS - I, SLEAS - III

Staff Adviser:
*Mr.N.Ananthasayanan*
B.Sc, Dip. in. Edu, M.Ed

Senior Prefect:
*Mas.T.Subesan*

Asst. Senior Prefect:
*Mas.K.Pakeerathan*

Secretary:
*Mas.T.Saranraj*

Treasurer:
*Mas.N.Shanmugarajah*

Editor:
*Mas.U.Sajeev*

## நடப்பு வருடச் செயற்பாடுகள்

2014 ஆம் ஆண்டுக்கான புதிய மாணவ முதல்வர்சபையின் நிர்வாகக்குழு பின் வருமாறு அமைந்தது. 2014 - 2015 ஆம் ஆண்டுக்கான சிரரேஸ்ட மாணவமுதல்வனாக த.சுபேசன், உதவி சிரேஸ்ட மாணவமுதல்வன் க.பகீரதன், செயலாளர் த.சரண்ராஜ், பொருளாளர் ந.சண்முகராசா, எழுத்தாளர் உ.சஜீவ் ஆகியோரடங்கிய நிர்வாக குழு தெரிவுசெய்யப்பட்டது.

இப்புதிய நிர்வாகக்குழுவால் செயற்படுத்தப்பட்ட செயற்பாடு கள் பின்வருமாறு

06.06.2014 அன்று மாவட்டரீதியாக அமரர் பொன்.விபுலானந்தன் ஞாபகார்த்த பொது அறிவுப் பரீட்சையை மாணவ முதல்வர்சபை ஆலோசகரின் மேற்பார்வையில் நடாத்தி விடைத்தாள்கள் திருத்தப்பட்டு முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்கள் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

04.07.2014 அன்று அவுஸ்திரேலிய விளையாட்டுக் கழகத்திற்கும் யாழ்மாவட்ட கிரிக்கற் அணிக்குமிடையில் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற கிரிக்கற் சுற்றுப்போட்டியின்போது விருந்தினர்களை வரவேற்றல் மாணவர்களின் ஒழுக்கத்தைக் கட்டியெழுப்பல் போன்ற விடயங்களில் எமது பணியைத் தொடர்ந்தோம்.

09.07.2014 அன்று எமது ஆரம்ப பாடசாலை சிறுவர் பூங்கா திறப்புவிழாவின்போது அலங்காரவேலைகள் உட்பட ஆரம்ப பாடசாலை களின் ஒழுக்காற்று நடவடிக்கைகளையும் சிறப்பாக முன்னோடுத்தோம். சிறுவர் பூங்கா கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவனாந்தா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

09.10.2014 - 12.10.2014 வரை மாத்தறையில் இடம்பெற்ற ஐக்கிய முகாம் - 07 இல் மாணவ முதல்வர் சபை சார்பின் ஐந்து மாணவ முதல்வர்கள் பங்குபற்றினார்.

15.10.2014 அன்று எமது கல்லூரியின் பரிசளிப்பு தினத்தில் எமது முழுப்பங்களிப்பையும் வழங்கி மாணவர்களின் ஒழுங்கை நிலை நாட்டினோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# JAFFNA CENTRAL COLLEGE
# BOARD OF PREFECTS

T.P: (+94)21 222 2184
(+94)21 222 3658
E-mail: jccboardofprefects@yahoo.com

Patron:
Mr.S.K.Elilventhan
B.A(Hons), Dip. in. Edu,
Dip. in. School Manegement,
M.Ed, SLPS - I, SLEAS - III

Staff Adviser:
Mr.N.Ananthasayanan
B.Sc, Dip. in. Edu, M.Ed

Senior Prefect:
Mas.T.Subesan

Asst. Senior Prefect:
Mas.K.Pakeerathan

Secretary:
Mas.T.Saranraj

Treasurer:
Mas.N.Shanmugarajah

Editor:
Mas.U.Sajeev

**கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி முடிவுகள்.**

**முதலாம் இடம்**

யாழ்.மத்திய கல்லூரி - ஆண்கள்
யாழ்.இந்து மகளிர் கல்லூரி - பெண்கள்

**இரண்டாம் இடம்**

கிளி.மல்லாவி மத்திய கல்லூரி - ஆண்கள்
யாழ்.இராமநாதன் கல்லூரி - பெண்கள்

**மூன்றாம் இடம்**

யாழ்.இந்துக்கல்லூரி - ஆண்கள்
யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை - பெண்கள்

இந்நிகழ்வில் வெற்றி பெற்ற அணிகளுக்கு வெற்றிக்கேடயமும், ஆட்டநாயகன், தொடர் ஆட்ட நாயகன் விருதுகளும் வழங்கப் பட்டன. இந்நிகழ்வில் 1997-1998 ஆண்டு காலப்பகுதியில் சிரேஸ்ட மாணவ முதல்வனாக இருந்து தற்போது சக்தி News 1st பிரிவில் பணிப்பாளராக கடமையாற்றுகின்ற திரு.கந்தவேள் மயூரன் அவர்கள் பிரதமவிருந்தினராக கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்தார்.

**எமது நிர்வாகக் குழவால் மேற்கொள்ளப்படவுள்ள செயற்பாடுகள்**

- Prefects day நடாத்தல்
- Central Leader மலர் வெளியீட்டை மேற்கொள்ளல்
- இல்ல மெய்வல்லுனர் விளையாட்டுப்போட்டி, பெருந்துடுப்பாட்டப்போட்டி களில் பங்களிப்பை வழங்கல்.

எமது செயற்பாடுகள் மென்மேலும் சிறக்க இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

| Senior Prefect | S.K. Elilventhan<br>Principal<br>Jaffna Central College<br>Jaffna. | Staff Adviser |
|---|---|---|

"Central's Flag must never be lowered"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Board of Prefects 2014 - 2015**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்தியின் மாணவ முதல்வர்களின் நெஞ்சங்களிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



200 வது ஆண்டு பாரம்பரியத்தினை எட்டவிருக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மாணவ முதல்வர் சபையின் 2014-2015 ஆம் ஆண்டிற்கான சிரேஸ்ட மாணவ முதல்வனாக என்னை தெரிவுசெய்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நீண்டகால இடைவெளியின் பின் தொடர்ச்சியாக மூன்றாவது முறையாக " " என்னும் இதழ் வெளிவருவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். இவ் இதழில் அடங்கியுள்ள ஆக்கங்கள் யாவும் மாணவ முதல்வர்களது சுய ஆக்கங்களாகவும், சுயதேடலினால் கிடைக்கப்பெற்றவையாகவும், அனைவருக்கும் பயன்தரும் வகையில் நடைமுறை விடயங்களை உள்ளடக்கியும் அமைந்துள்ளது.

மாணவ முதல்வர் சபையின் அழியாத நினைவுகளையும் கடந்தகால, நடப்பு வருட செயற்றிட்டங்களையும் சுமந்து வருகின்ற இந்நூல் வெளிவருவதற்கு சகல விதத்திலும் ஒத்துழைப்பு வழங்கிய கல்லூரி முதல்வர், பொறுப்பாசிரியர், இதழாசிரியர்கள் மற்றும் தோளோடு தோள்நின்று உழைத்த சகமாணவமுதல்வர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"மத்தியின் மணிக்கொடி நித்தியம் நிலைக்கும்"

த.சுபேசன்
சிரேஷ்ட மாணவ முதல்வன் 2014-2015



"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து"

இதன் உண்மையை அனுபவ வாயிலாக சுவைத்தவன் என்ற வகையில் இத்தாயின் மடியில் தவழ்ந்து, செல்லப்பிள்ளையாகத் துளிர்த்து, கிளை பரப்பிய இப்பருவம் நெஞ்சை விட்டகலாத ஒன்று. எனது கல்வி வாழ்வின் அசைக்கமுடியாத அடித்தளம்.

200 ஆண்டுகளை அண்மிக்கின்ற நீடிய வரலாற்றை உடைய இக்கல்லூரியின் கடந்தகால பக்கங்கள் முழுவதையும் புரட்ட என்னால் முடியாது. ஆனால் எனது வயதிற்குத் தகுந்த ஆண்டுகளை மீட்டுப்பார்க்க முடியும். எனவே நெஞ்சுக்கு நேர்மையாக உண்மைக்குச் சான்றாக மத்திய தாய் பெற்றெடுத்த மாணவ முதல்வர் சபையின் வளர்ச்சியை எடுத்துரைக்க முடியும்.

ஆடம்பரமில்லாத அதீத அடக்கத்துடன் கல்வியிலும், கலைகளிலும், விளையாட்டிலும் தனக்கென ஒரு தனி முத்திரையை மத்திய அன்னை நிகழ்த்தியிருக்கிறாள். இதற்குப் பல சான்றுகளையும் நாம் கூறமுடியும். இக்கல்லூரியினுள் அடியெடுத்து வைக்கின்ற ஒவ்வொருவரும் சிந்திய, சிந்துகின்ற வியர்வைத்துளிகள் இரத்தமாக மாறி நிலத்தை நனைத்ததினால், தியாகம் என்கின்ற ஒருநிலையான பண்பினாலே இக்கல்லூரி வளம் பெறுகின்றது என்பது மறக்க முடியாத உண்மை.

இவ்வாறு சரித்திரச் சிறப்பும் பெருமையும் மிக்க ஓர் பாடசாலையில் நானும் பயின்று உதவி சிரேஷ்ட மாணவமுதல்வனாக கடமையாற்றுவதில் பேருவகையடைகின்றேன்.

"மத்தியின் மணிக்கொடி நித்தியம் நிலைக்கும்"

க.பகீரதன்
உதவி சிரேஷ்ட மாணவ முதல்வன் 2014-2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



200வது ஆண்டில் காலடிஎடுத்து வைக்க வீறுநடை போடும் மத்திய தாயின் மடியில், மாணவ முதல்வனாய் தவழ்வதையிட்டு பெருமையடைகின்றேன். மாணவ முதல்வர் சபையானது நூறாண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்டு மாணவர்களின் ஒழுக்காற்று நடவடிக்கைகளை சிறப்பாக முன்னெடுத்து வருகின்றது.

மாணவமுதல்வர் சபையில் இணையும் முதல்வர்களை நல்லொழுக்கமும், பண்பும் நிறைந்தவர்களாக மாற்றுகின்றது. 198 வது ஆண்டில் வீறுநடைபோடும் மத்தியின் மைந்தனாய், மாணவமுதல்வனாய் இருப்பதையிட்டு பெருமையடைந்தாலும் 200 வது ஆண்டு நிறைவில் பாடசாலையில் மாணவமுதல்வராய் இருக்க இயலாமையை நினைத்து கவலையடைகின்றேன்.

மாணவ முதல்வர் சபையின் செயற்பாடுகளில் ஒரு அங்கமாக "Central Leader" நூல் வெளியீடானது திகழ்கின்றது. இந்நூலானது எமது திறன்களை வெளிக்கொணர களமாக அமைகிறது.

அவ்வகையில் இந்நூல் வெளியீட்டுக்கு உதவிய அனைத்து சாராருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

"மத்தியின் மணிக்கொடி நித்தியம் நிலைக்கும்"

த.சரண்ராஜ்
மாணவமுதல்வன் 2014 – 2015
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி



"இறைவனின் அதி உன்னத மகிமைக்காக" என்ற மகுடவாசகத்தை தாங்கிக்கொண்டு 199 ஆவது ஆண்டில் கால்பதித்து தனது தடைக்கற்களை படிக்கற்களாக்கி எமது கல்லூரியானது வீறுநடைபோட்டுக்கொண்டு இருக்கின்றது. அந்த வகையில் கல்லூரியில் 2014 - 2015 மாணவ முதல்வனாக காணப்படுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். ஒரு சாதாரண மாணவனாய் இணைந்துகொண்ட என்னை தலைமைத்துவம் மிக்க ஒரு மாணவமுதல்வனாய் வளர்த்து வழிப்படுத்தி வாழக்கற்றுக் கொடுத்தது என் கல்லூரியே!

எமது மாணவர் முதல்வர் சபையானது வேதனைகளையும் சோதனைகளையும் சாதனைகளாக்கி பல வரலாற்றுப் பாரம்பரியங்களையும் பெருமைகளையும் வீழாது வாழவைத்துக் கொண்டு இருக்கின்றது. இங்கு மாணவ முதல்வர்களாக இருந்தவர்களில் பலர் வாழ்க்கையிலும் முதல்வர்களாக மிளிர்ந்து கொண்டு இருக்கின்றார்கள். ஏனெனில் எமது மாணவர் முதல்வர் சபையானது நாம் மாணவ முதல்வர்களாய் பதவி வகிக்கும் இரண்டு வருடங்களில் எமக்கு பல தலைமைத்துவப் பண்புகளையும் கற்றுத்தருகின்றது. அதன் ஒரு வெளிப்பாடே இந்த மத்திய தலைவன் என்ற நூலாக அமைகின்றது. எமது காலத்தில் இந்நூலை தொடர்ந்தும் வெளியிடுவதில் நான் பெருமையடைகின்றேன். எனது கருத்துக்களினை பகிர்வதற்கு சந்தர்ப்பம் வழங்கியமைக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

"மத்தியின் மணிக்கொடி நித்தியம் நிலைக்கும்"

ந.சண்முகராஜா
மாணவமுதல்வன் 2014 – 2015
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை வரலாற்றில் 199 வது ஆண்டை தாண்டி 200வது ஆண்டை கைப்பற்றவுள்ள எமது கல்லூரித்தாயை என் தாயிற்கு மேலாகப் போற்று கின்றேன். 2002 ஆம் ஆண்டு 1வது வகுப்பை கற்கவந்த என்னை 13 வருடங்களாக தாங்கி நல் லொழுக்கமுள்ள மாணவனாய் மாற்றி கற்பிக் கின்றாள். இக்கல்லூரித்தாயின் மடியில் தவழ் கின்ற மாணவர் முதல்வர் சபையில் என்னை இனைத்துக் கொண்டதை நினைத்துப் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். இச்சபையிலிருந்து "Central Leader" என்ற மலரை வெளியிடு வதை நினைத்து மனம் பூரிப்படைகின்றது. இக் கல்லூரியின் சிறப்புக்களையும் கல்வி, கலை, விளையாட்டு பெருமைகளையும், பாரம்பியங் களையும் வெளிக்கொணர இம்மலர் வெளியீடு ஒரு சிறந்த செயற்பாடாக அமையும். என்னை ஒரு மாணவமுதல்வனாக மாற்றி சேவை மனப்பாங்கு, பிறரைமதிக்கும் பண்பு உடையவனாகவும் எதிர்காலச் சவால்களை எதிர்கொண்டு பல்லின சமூகமொன்றில் வாழ்வதற்கு தகுதியுடைய நற்பிரஜையாகவும் மாற்றியமைக்கு இக் கல்லூரியை கரம் கூப்பி வணங்குகின்றேன்.

"மத்தியின் மணிக்கொடி நித்தியம் நிலைக்கும்"

உ.சஜீவ்
மாணவமுதல்வன் 2014 - 2015
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி



200 ஆவது ஆண்டைநோக்கி வீறு நடை போட்டுக்கொண்டு இருக்கும் எமது பாட சாலையில் படிப்பதை எண்ணி மிக பூரிப்படை கின்றேன். எனக்கு என் தாய் எவ்வாறு முக்கியமா கின்றாளோ அதேபோல் எனது கல்லூரித் தாயும் மிக முக்கியமானவளே. மாணவ முதல்வர் சபை யில் என்னை இணைத்துக் கொண்டதை எண்ணி மிக மகிழ்ச்சி அடைகின்றேன். இணைப்பாட விதானச் செயற்பாடுகள் பரியோவான் முதலுத விப்படை, சாரணர் இயக்கம் போன்றவற்றில் என்னை ஈடுபடவைத்து எனது தலைமைத்து வத்தை எனக்கு உணரவைத்தவளும் கல்லூரித் தாயே. அது மட்டுமால்லாது எங்களை வழிநடத் திய கல்லூரி முதல்வர், பிரதி அதிபர், உபஅதிபர், எமது சபை பொறுப்பாசிரியர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளை மனமாரத் தெரிவித்துக்கொள் கின்றேன்.

"மத்தியின் மணிக்கொடி நித்தியம் நிலைக்கும்"

த.தனுபதன்
மாணவமுதல்வன் 2014 - 2015
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எனது உள்ளத்தில் உள்ள கருத்துக் களை இந்நூலினூடாக பகிர்ந்து கொள்வதில் மனமகிழ்வடைகின்றேன். 200 ஆவது ஆண்டை பூர்த்தி செய்யும் தருவாயில் எமது கல்லூரியானது மாணவமணிகளிற்கு சிறந்த முறையில் கல்வி பயிற்றுவித்து சிறந்த எதிர்காலத்தையும் உருவாக் கியுள்ளது. அந்தவகையில் 2009 ஆம் ஆண்டில் இப்பாடசாலையில் இணைந்து 5 வருடங்களாக கல்வி பயின்று 2014-2015 ஆம் ஆண்டிற்கான மாணவ முதல்வனாக ஆகிக்கொண்டதில் மனப்பூரிப்படைகின்றேன். மேலும் 2014ஆம் ஆண்டிற்கான "*Centeral Leader*" வெளிவரு வதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன். தொடர்ந்தும் இந்நூல் வெளிவருவதற்கு வழிநடத் தும் பொறுப்பாசிரியர் அவர்கட்கும், கல்லூரி முதல்வருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

"மத்தியின் மணிக்கொடி நித்தியம் நிலைக்கும்"

சி.தாயாளன்
மாணவமுதல்வன் 2014 - 2015
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி



வணக்கத்திற்குரிய ஜேம்ஸ்லிஞ்ச் பாதிரியார் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை யிலே நானும் ஒரு மாணவனாக கற்பதில் மனப் பூரிப்படைகின்றேன். எங்கள் மத்திய தாயில் நான் தரம் 06 இலிருந்து கற்பதற்காக வந்து இணைந்து கொண்டேன். அன்றிலிருந்தே எனக்கு மாணவ முதல்வனாக வரவேண்டுமென்ற ஒரு ஆசை இருந்தது. அந்த ஆசையின் பிரதிபலனாக நானும் ஒரு சிறந்த மாணவ முதல்வனாக இந்த மத்திய தாயின் மடியிலே இருப்பதையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இம்மாணவ முதல்வர்சபையானது எனக்கு சிறந்த தலைமைத் துவ பண்பை வளர்த்தது மட்டுமல்லாது சகிப்புத் தன்மை, ஒழுக்கம், விழுமியப்பண்பு, நேரம் தவறாமை போன்றவற்றையும் கற்பித்துள்ளது. அது மட்டுமல்லாது எனது வாழ்க்கையில் வரும் எதிர்கால சாவால்களை முறியடிப்பதற்கும் எனக்கு கற்றுத்தந்துள்ளது. நான் இந்த கல்லூரித்தாயை விட்டு வெளியேறும்போது ஒரு சிறந்த மாணவ முதல்வனாக மட்டுமன்றி இலங்கை நாட்டிற்கு ஒரு சிறந்த நற்பிரஜையாக திகழுவேன் என உறுதி மொழி எடுத்து கொள்கின்றேன்.

"மத்தியின் மணிக்கொடி நித்தியம் நிலைக்கும்"

க.கபில்ராஜ்
மாணவ முதல்வன் 2014 -2015
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தனித்துவமான பாரம்பரியங்களையும், வரலாற்றுச் சிறப்புக்களையும் கொண்டு தனக் கென ஒரு முத்திரை பதித்து தலைநிமிர்ந்து நிற்கும் யா/மத்திய கல்லூரியின் மாணவர் முதல்வர் சபையில் நான் 2014 - 2015 ஆம் ஆண்டின் மாணவ முதல்வனாக இருப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

எமது மாணவர் முதல்வர் சபை தனக் கென சில முக்கிய செயற்றிட்டங்களை பாரம்பரிய மாக செயற்படுத்தி வருகிறது. அதாவது எமது முன்னாள் முதல்வர் அமரர். பொன்.விபுலானந் தன் ஞாபகார்த்த பொது அறிவுப் போட்டி, கூடைப் பந்தாட்ட சுற்றுப் போட்டி போன்றவற்றை வட மாகாண ரீதியில் நடாத்துதல், பெருந்துடுப்பாட்டம் மற்றும் "Central Leader" நூல்வெளியீடு போன்றவற்றையும் குறிப்பிடலாம். இவ்வாறான செயற்பாடுகளில் எனது பங்களிப்பு உள்ளதை நினைத்து பெருமிதம் அடைகிறேன். இச்செயற் பாடு இனிவரும் காலத்தில் மேலும் வளர்ச்சி அடைய வாழ்த்துவதோடு என்னை சிறந்த முறையில் வழிநடாத்தும் அதிபர், பொறுப்பாசிரி யர் மற்றும் ஏனைய ஆசிரியர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

"மத்தியின் மணிக்கொடி நித்தியம் நிலைக்கும்"

ந.நிலக்ஷன்
மாணவமுதல்வன் 2014 - 2015
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

198 ஆண்டுகளை வெற்றிகரமாக கடந்து 200வது ஆண்டை நோக்கி வீறுநடை போட்டுக் கொண்டிருக்கும், தன்னகத்தே தனித்துவமான பாரம்பரியங்களையும் வரலாற்று சிறப்புக்களை யும் கொண்ட யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலே சேர்ந்த என்னை நற்பண்புகள், தலைமைத்துவம் மிக்க மாணவனாக்கிய கல்லூரித்தாயை என்றும் சிரம்தாழ்த்தி வணங்குகின்றேன். கல்லூரியின் ஒழுக்கம், பாரம்பரியங்கள் அழியாது பாதுகாப்ப தில் மாணவர் முதல்வர் சபை அளப்பரிய பங் காற்றுகின்றது என்றால் அது மிகையாகாது. மாணவர் முதல்வர் சபையினால் யாழ்ப்பாண கல்லூரிச் சமூகத்திற்கான சேவை அளப்பரியது. அமரர். பொன்.விபுலானந்தன் ஞாபகார்த்தமாக நடாத்தப்படும் பொது அறிவுப்போட்டி, கூடைப் பந்தாட்ட சுற்றுப்போட்டி, "மத்தியதலைவன்" நூல் வெளியீடு என்பன சிறந்த சான்றுகளாகும். இதை நான் எனது கல்லூரித் தாய்க்கு பணிவிடை செய்வதற்கு கிடைத்த பாக்கியமாக கருதுகின் றேன். என் கருத்துக்களையும் இங்கே பகிர சந்தர்ப் பம் அளித்த எல்லா உள்ளங்களுக்கும் நன்றி களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

"மத்தியின் மணிக்கொடி நித்தியம் நிலைக்கும்"

க.நிமல்
மாணவமுதல்வன் 2014 - 2015
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அழகிய இலங்கைத் தீவிலுள்ள யாழ் பாடி நாமம் பெற்ற யாழ்ப்பாணத்திலே கம்பீரமாய் 200 ஆவது ஆண்டை நோக்கி வீறுநடை போட்டுக் கொண்டிருக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் மாண்புமிகு மாணவனாய் என்னை வளர்த்தெடுத்த கல்லூரித் தாயின் மடியில் நான் 02.01.2002 அன்று ஆரம்பக்கல்வியை கற்பதற் காக இணைந்துகொண்டேன். என்னை ஈன் றெடுத்த தாய் எவ்வாறு அன்புடனும் பாசத்துடனும் பராமரிப்பாளோ அந்த அளவிற்கு கல்லூரித் தாயானவள் 13 வருடங்களாக அறிவையும் ஆற்றலையும் எனக்கு போதித்திருந்தாள். மேலும் இக்கல்லூரியானது என்னையும் மாணவ முதல் வர் சபையில் இணைத்துகொண்டு ஆளுமையை யும் தலைமைத்துவத்தையும் மெருகூட்டி எனது வாழ்க்கையை சலனமின்றி மேற்கொள்ள உதவி செய்துள்ளது. என் உயிருள்ளவரை என் கல் லூரியை ஒருபோதும் மறக்க மாட்டேன்.

மத்தியின் மணிக்கொடி நித்தியம் நிலைக்கும்”

சி.சுசிகரன்

மாணவமுதல்வன் 2014 - 2015

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி



அன்று காற்றோடு வந்தது ஒரு இன்பச் செய்தி
உன்னை யாழ்ப்பாண பள்ளிக்கு சேர்ப்பதென்று!
மெல்ல நகர்ந்து வந்தேன் நகரத்திற்கு!!
நிமிர்ந்து பார்த்தேன்
அது மத்திய கல்லூரி!!!
முதல் காலடிவைத்தேன்
சாதாரண மாணவனாய்
கம்பீரமாய் நின்ற நீல, மண்ணிற கட்டிடங்கள்!
அன்றே தெரிந்து கொண்டேன்
வானும் மண்ணும் எங்கும்
பரந்துபட்டது மத்தியின் புகழ்என்று!!
நான் பிறந்து பதினெட்டு வருடங்கள்....
"அ" எழுதிப்பழகி பதினாறு வருடங்கள்...
மத்தியின் மடியில் எட்டு வருடங்கள்...
மத்தி எனக்குத் தந்தது பல!!
நான் மத்திக்கு செய்தவை சில!!
எத்தவம் எடுத்தாலும் தீராது என் கடன்
மேடை ஏற கூச்சப்பட்டவனாய்!
பிறருடன் பழக முரண்பட்டவனாய்!
தீர்மானம் எடுக்க முடியாதவனாய்!
தலைமை தாங்கி நடக்காதவனாய்!
பிரச்சினைகளை தீர்க்க முடியாதவனாய்!
பதுங்கி பதுங்கி திரிந்த என்னை
முதுகில் தட்டி எழுப்பியது
மத்திய மாணவர் முதல்வர் சபை
இன்று காலடி வைக்கிறேன்
வெளியுலகிற்கு
மத்தியதலைவனாய்!!!

மத்தியின் மணிக்கொடி நித்தியம் நிலைக்கும்”


தே.தனோஜன்

மாணவமுதல்வன் 2014 - 2015

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என்றும் எம் மனத்தைவிட்டு அகலாத நினைவுகளுடன்

# மத்தியின் மாணவ முதல்வன்

## அமரர்.பொன்.விபுலானந்தன்

ஒரு மனிதனின் வாழ்நாளில் மாணவப் பருவம் என்றும் மறக்க முடியாத மகத்தான காலம் என்பதனை மாணவப்பருவத்தை கடந்து வந்த அனைவரும் அறிந்ததே. அதிலும் அம்மாணவப் பருவத்தில் கல்லூரிக்காக சேவை செய்வது என்பது எப்பிறப்பிலும் மறக்க முடியாத மகத்தான செயற்பாடாகும். இவ்வாறு கல்லூரிக்காலத்தில் சேவை செய்வதென்பது அனைவருக்கும் கிடைக் காது அந்த வகையில் மத்தியின் வரலாற்றுப் பாதையில் கல்லூரிக்காய் மாணவ முதல்வனாக சேவை செய்து 1986.10.30 அன்று கடமையின் போது உயர்நீர்த்த அமரர்.பொன். விபுலானந்தன் அனைவராலும் மறக்க முடியாதவர்.

இலங்கையின் வடபகுதியான யாழ்ப் பாணத்தின் கன்னாதிட்டியில் பொன்னம்பலம் தம்பதியினரின் புதல்வனான செல்வன் விபுலானந்தன் 1976 ஆம் ஆண்டு மத்திய கல்லூரியில் ஆரம்பக் கல்விக்காக இணைந்து கொண்டார். கல்விப் புலத்தில் மட்டுமல்லாது சகல துறையிலும் மிளிர்ந்து சகல கலா வல்லவனாக விளங்கினார்.நல்லூர் இந்து இளைஞர் பேரவைத் தொண்டர் ,மிருதங்கம் வாசிப்பதில் கைதேர்ந்த வர். அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையே திருகோணமலையில் நடைபெற்ற மாவட்ட, மாகாணப் போட்டிகளில் பங்கு பற்றி பரிசில்களை பெற்றார். கல்லூரியில் நடைபெற்ற கலை நிகழ்ச்சி களில் மிருதங்கம் இசைத்து நிகழ்ச்சிக்கு மெரு கூட்டுவார். ஒளி விழா பாடகர்களுள் ஒருவர். நோத் ஸ்ரார் இசைக்குழுவின் ஒரு பிரதான அங்கத்தவர். சிறுவயதிலேயே குருளைச் சாரணன் ஆக இருந்து பின்னர் புனித பரியோவான் முதலுதவி படையணிப் பிரிவின் சிரேஸ்ட அங்கத்தவனாகி தன்னால் இயன்ற பணிகளை ஆற்றினார். கல்லூரியின் 17 வயதிற்குட்பட்ட கூடைப்பந்தாட்டக் குழுவின் தலைவராக இருந்து விளையாட்டிலும் பிரகாசித்தார்.

மத்திய கல்லூரி லியோக் கழகத்தில் 1983 முதல் 1986 வரை சேவை புரிந்து வந்த விபுலானந்தன் 1985 இல் யூலை தொடக்கம் 1986 யூலை வரை பொருளாளராக கடமையாற்றினார். மாணவ முதல்வனாக இருந்த இவர் அதிபரினதும் ஆசிரியர்களினதும் அன்பிற்குரிய மாணவனாக திகழ்ந்தார். 1986.10.30 திகதியன்று கல்லூரியில் பாடங்கள் நிறைவு பெற்றுக்கொண்டிருந்தவேளை யில் யாழ்.கோட்டை வாயில் பகுதியில் இருந்து கல்லூரியை நோக்கி சரமாரியாக துப்பாக்கிச் சன்னங்கள் வந்தன. அப்போது கல்லூரி CASH கட்டத்தில் மேல் தளத்தில் அழுது கொண்டு இருந்த மாணவர்களின் நலன் கருதி அவ்விடம் நோக்கி ஓடிச் சென்றார். அங்கு மாணவர் நலன் காத்த திருப்தியுடன் திரும்பும் வேளையில் சன்னம் விபுலானந்தனின் முதுகில் துளைத்தது. இரத்த வெள்ளத்தில் துடிதுடித்த விபுலை கண்ட கல்லூரிச் சமூகமே கலங்கியது. உடனே வைத்தியசாலை கொண்டு செல்லும் வேளையில் விபுலானந்தன் எம்மை விட்டு பிரிந்து சென்றார்.

அவரின் அளப்பெரிய சேவை என்றுமே அழியாவரமாக அமைகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐப்பசி 30,1986

# மத்தியின் வரலாற்றில்..

1986 [illegible] ந்தய உக்கிரம் அடைந்திருந்த காலப்பகுதி அது. மாணவ முதல்வர் சபையின் ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் சிரேஷ்ட மாணவ முதல்வரினால் இலக்கங்கள் வழங்கப்பட்டிருப்பது வழமை. அவ்வாறே அமரர்.பொன். விபுலானந்தன் அவர்களுக்கு அப் போதைய சிரேஸ்ட மாணவ தலை வன் ஜி.நந்தகுமார் அவர்களினால் இலக்கம் 27 வழங்கப்பட்டிருந்தது. 30.101986 அன்று காலை பாட சாலைக்கு வருகை தந்த அமரர். பொன்.விபுலானந்தன் மாணவ முதல்வர் சபையின் பதிவுப் புத்தகத் தில் தனது 27ஆம் இலக்கத்தினை இட்டு 7.44 என தனது வரவினை பதிவு செய்து விட்டு வழமை போல தனது கடமையில் ஈடுபட்டார். அன்று ாவழமைபோல பாடசாலை நடை பெற்றுக் கொண்டிருந்த வேளை திடீரென கோட்டைப் புறம் இருந்து எழுந்த பாரிய குண்டுச் சத்தங்களாலும் வேட்டொலிகளாலும் பிரதேசமே அதிர்ந்தது. மாணவர்கள் தமது உயிரைக் காத்துக்கொள்ள அங்கும் இங்கும் சிதறி ஓடிக்கொண்டிருந்தனர்.


30th [illegible] 1986

| Name | No | In |
|---|---|---|
| [illegible] | [illegible] | 7.31 |
| [illegible] Parthiban | 23 | 7.37 |
| K. [illegible] | 24 | 7.37 |
| K. Gnanakanthan | 20 | [illegible] |
| S. [illegible] | 21 | [illegible] |
| S. [illegible] | [illegible] | [illegible] |
| T. [illegible] | [illegible] | 7.40 |
| S. [illegible] | [illegible] | 7.42 |
| P. Vipulananthan | 27 | 7.44 |
| K. Vijai | [illegible] | 7.45 |
| A. [illegible] | 19 | 7.45 |
| K. [illegible] | 25 | 7.47 |
| S. [illegible] Vasikumar | 9 | 7.50 |
| S. [illegible] | 11 | 7.50 |
| M. [illegible] | 29 | 7.50 |
| [illegible] | 12 | 8.00 |
| [illegible] | [illegible] | 8.03 |
| A. Sivachandran | 30 | 8.07 |
| C. [illegible] | 13 | 8.07 |
| A. [illegible] | 16 | 8.11 |
| N. Jeyakanthan | 20 | 8.15 |
| G. Jeny Mohan | 15 | 9.25 |
| G. Nanthakumar SP | | |

P. Vipulananthan was shot dead (27)

[illegible] absent

அமரர்.பொன்.விபுலானந்தன் இறுதியாகக் கையொப்பம் இட்ட மாணவமுதல்வர் சபையின் பதிவுப்புத்தகத்தின் ஒரு பகுதி

உடனடியாக மாணவர்களை ஒழங்குபடுத்தும் பொருட்டு சிரேஸ்ட மாணவ முதல்வர் நந்தக்குமார் அவர்களினால் மாணவ முதல்வர்கள் அவசரமாக கடமைகளுக்கு அனுப்பப்பட்டனர். அமரர்.பொன். விபுலானந்தன் கடமைக்காக Rev.P.T Cash ஞாபகார்த்த கட்டத் தொகுதிக்கு சிரேஷ்ட மாணவ முதல்வரினால் அனுப்பப்பட்டார். அவர் கடமைக்காக சென்று மாணவர்களை ஒழுங்குபடுத்தி பாதுகாக்க முற்பட்ட பொழுது எங்கிருந்தோ வந்த துப்பாக்கி வேட்டுக்கள் அவரின் முதுகில் பாய்ந்தன. Cash Block இனது முதலாம் மாடியில் வெளிப்புற விறாந்தையில் குண்டடிபட்டு வீழ்ந்து இரத்த வெள்ளத்திலே துடித்துக் கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மாணவமுதல்வர் தின நிகழ்வுகளின் பதிவுகள் 2013




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JAFFNA CENTRAL COLLEGE

IN GLORIAM DEI OPTIMI MAXIMI

# மத்தியின் மகுடத்திற்கு பெருமை சேர்த்தோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மானுடம் போற்றும் மத்தியின் மைந்தன்



1834 ஆண்டு தனது 12 வது வயதில் "பீற்றர் பேர்சிவல்" அடிகாளர் தலைமையில் நடைபெற்ற வெஸ்லியன் ஆங்கிலப் பாடசாலையில் (இன்றைய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில்) மாணவனாக சேர்ந்து 1841 – 1848 வரை (தனது 26 வயதுவரை) எமது பாடசாலையில் ஆசிரியராக கடமையாற்றினார்.




இவர் எமக்கு ஆற்றிய தமிழ், சமய சேவைகளின் ஞாபகமாக 29.10.1971 இல் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலருக்கான ஞாபகார்த்த முத்திரை வெளியிடப்பட்டது.



நாவலரின் கையெழுத்து

**இவரது வரலாற்றுக் குறிப்புக்கள் Central Leader - Vol 2 இல் பிரசுரிக்கப்பட்டுள்ளது.**

**மாணவ முதல்வர் சபை**
**2014 - 2015**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகழ்பூத்த மத்தியின் சாதனையாளன்




## நாகலிங்கம் எதிர்வீரசிங்கம்




1958 இல் டோக்கியாவில் நடைபெற்ற ஆசியக் கிண்ண போட்டிகளில் திரு.நாகலிங்கம் எதிர்வீரசிங்கம் அவர்கள் 6'8" உயரத்தில் பாய்கின்ற பொழுது



உயரம் பாய்தலில் வெற்றி பெற்றமைக்காக பதக்கம், வெற்றிக்கிண்ணம் வழங்கப்பட்டபோது



வெற்றிக் கிண்ணங்களுடன் எமது பாடசாலையில்

**இவரது முழுவிபரங்கள் Central Leader - Vol 2 இல் பிரசுரிக்கப்பட்டுள்ளது.**

**மாணவ முதல்வர் சபை**
**2014 - 2015**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானுட நேய மக்கள் தலைவர் டக்ளஸ் தேவானந்தா

யாழ். மத்தியக் கல்லூரியின் வரலாற்றில் பழைய மாணவரான டக்ளஸ் தேவானந்தா அவர்கள், இன்று அக் கல்லூரியின் வளர்ச்சிக்கு மட்டும் அல்லாது பல கல்லூரிகளின் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருந்து செயற்பட்டு வருபவர்.

எமது சமுதாயம் பாழ்பட்டுப் போய் விடுமோ என்ற உணர்வில் கல்லூரியில் இருந்து பல்கலைக்கழகம் செல்லாமல் வெளியேறிய இவர், தமிழர் விடுதலைப் போராட்ட இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டார்.

தமிழர் விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பகால விடுதலைப் போராளியான இவர், ஈரோஸ் அமைப்பின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவராகச் செயற்பட்ட காலத்தில் முதன் முதலாக 1978ம் வருடம் பாலஸ்தீனம் சென்று ஆயுதப் பயிற்சி பெற்றார். பின்னர், ஈ.பி.ஆர்.எல். எப் இயக்கத்தின் களத் தளபதியாக செயற்பட்ட காலத்தில் 1984ம் வருடம் இரண்டாவது முறையாகவும் பாலஸ்தீனம் சென்று ஆயுதப் பயிற்சி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந் நிலையில் ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்தில் நிலவிய உள் இயக்க பிரச்சினைகள் மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்திற்க்கும் புலிகள் இயக்கத்திற்கும் இடையில் இருந்து வந்த பிரச்சினைகளையும் உரிய தலைமைகளுடன் கலந்துரையாடித் தீர்ப்பதற்காக 1986ம் வருட நடுப்பகுதியில் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் இந்தியாவிற்கு சென்றார்.

இதே வேளை தமிழர் விடுதலைப் போராட்டத்தின் விளைவாக 1987ம் வருடம் இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இவ் வேளை இந்தியாவில் தங்கி இருந்த டக்ளஸ் தேவானந்தா அவர்கள் இதனை ஒரு பொன்னான வாய்ப்பாகக் கருதினார்.

இந்த வாய்ப்பு முதலில் புலிகள் இயக்கத்தினருக்குக் கிடைத்தது. இவர்கள் தங்களது சுய இலாப அரசியல் காரணமாக அவ் வாய்ப்பை தட்டிக் கழித்தனர். இதனால் அவ் வாய்ப்பைப் பெற்ற ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கமானது அதனை துர்ப்பிரயோகம் செய்து விட்டது.

ஆரம்பிக்கப்பட்ட நோக்கம் மாறி தவறான திசையில் தமிழர் போராட்டம் செல்வது கண்டு மனவேதனை அடைந்த டக்ளஸ் தேவானந்தா அவர்கள், "இந்தப் போக்கு எமது மக்களை பாரிய அழிவுக்குள் தள்ளிவிடும்" என்று அன்று முதலே கூறி வந்தார்.



இலங்கை இந்திய ஒப்பந்தத்துடன் ஆயுதப் போராட்ட வழிமுறையைக் கைவிட்ட டக்ளஸ் தேவானந்தா அவர்கள் ஜனநாயக அரசியல் நீரோட்டத்திற்குள் பிரவேசித்ததுடன் 1987ம் ஆண்டு இறுதியில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியைத் தோற்றுவித்ததுடன் அதன் செயலாளர் நாயகமாக செயற்பட்டு வருகிறார்.

பின்னர் 1990களின் நடுப்பகுதியில் மீண்டும் இலங்கை வந்த டக்ளஸ் தேவானந்தா அவர்கள், இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கு முந்தைய தென்னிலங்கை அரசுகள் சிங்கள அரசுகளாகவே செயற்பட்டன எனினும் ஒப்பந்தத்திற்கு பின்னரான அரசுகள் இலங்கை அரசுகளாக செயற்படுவதை உணர்ந்ததுடன் அக்காலகட்டத்தில் இலங்கையின் ஜனாதிபதியாக இருந்த ரணசிங்க பிரேமதாஸ் அரசுடன் நல்லிணக்கப் போக்கினைக் கடைப்பிடித்து செயற்பட்டு வந்தார்.

1994ம் வருட பொதுத் தேர்தலில் ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி 9 பாராளுமன்ற உறுப்பினர்களைத் தன்னகத்தே கொண்டது. ஒரே ஒரு பெரும்பான்மை உறுப்பினரைக் கொண்டிருந்த அன்றைய ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரணதுங்க அவர்களது அரசிற்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் பங்களிப்பு இன்றியமையாததாக இருந்ததால் செல்வாக்கு மிக்க தமிழ் அரசியல் தலைவராக டக்ளஸ் தேவானந்தா அவர்கள் விளங்கியதுடன் இணக்க அரசியல் ஊடாக தான் சார்ந்த மக்களுக்கும் தனது தாயகப் பகுதிகளின் விருத்திக்கும் பல்வேறு பணிகளை ஆற்றியவர்.

பின்னர் 2000ம் வருடம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற இவர் அன்றைய அரசின் வடக்கின் அபிவிருத்தி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் இந்து சமய கலாசார தமிழ் விவகார அமைச்சராகப் பதவியேற்றார்.

வடக்கு மாகாணத்திற்குள் பல்வேறு உட்கட்டமைப்பு, அபிவிருத்தி, வாழ்வாதார முன்னேற்றங்களை அசுர பலத்தில் மேற்கொண்டிருந்த இவரது பணியானது மேற்படி அமைச்சு இவரிடம் ஒப்படைக்கப்பட்டதன் பின்னர் வடக்கு கிழக்கு மாகாணங்கள் உட்பட நாடளாவிய ரீதியில் பரவலாக்கப்பட்டது.

பின்னர், 2001ம் வருடம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் வெற்றி கொண்டு இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் கமத்தொழில்கள் சார்ந்த விற்பனைகள் அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, இந்து சமய கலாசாரம், கல்வி மற்றும் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

2005ம் வருடம் பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற இவர் இலங்கையின் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரானார். இக் காலகட்டத்தில் ஐக்கிய நாடுகள் சபை சென்று பொது இடங்களிலும் பொதுக் கட்டிடங்களிலும் மாற்று வலு உடையோர் இலகுவாக பிரவேசிக்கக் கூடியதான ஐ.நா. பிரகடனத்தில் கைச்சாத்திட்ட பெருமை இவரைச் சாரும்.

2010ம் வருடம் பொதுத் தேர்தலில் (வடக்கு கிழக்கில்) தமிழ்த் தலைவர்களிலேயே அதிக விருப்பு வாக்குகளைப் பெற்ற இவர், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சராகப் பொறுப்பேற்றார்.

தமிழர் விடுதலை இயக்கப் போராளியாக இருந்த காலந்தொட்டே மனிதநேய அடிப்படையில் எமது மக்களின் தேவைகள் உணர்ந்து அதற்கே முதலிடம் கொடுத்து அயராது உழைத்து வருபவர்.

அரசாங்கத்தை எதிர்த்து எதிர்ப்பு அரசியல் நடத்துவதால் எமது மக்களுக்கு எவ்வித பயனுமில்லை என்பதை நன்கு உணர்ந்து கொண்ட இவர், உரிமைக்குக் குரல் கொடுப்பதோடு, உறவுக்குக் கரம் கொடுக்கும் நோக்கில் அரசுகளோடு இணக்கமான செயற்பாடுகளை முன்னெடுப்பதே நடைமுறைசாத்தியமான யதார்த்த வழிமுறை என்பதை தனது கட்சிக் கொள்கையாக ஏற்று செயற்பட்டு வருவதால் - அவரது முயற்சியினால் இன்று யாழ் - கிளிநொச்சி மாவட்டங்கள் மட்டுமல்ல வடக்கு மாகாணமே அபிவிருத்தி முன்னேற்றங்களில் வீறுகொண்டு எழுந்து வருகின்றது.

மக்களின் குறிப்பாக வறிய மற்றும் உழைக்கும் மக்களின் வாழ்வாதார நிலைகளை உயர்த்தும் நோக்கிலும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களைப் பலப்படுத்தி, கிராமிய மட்டத்திலான பொருளாதாரத்துறையை மேம்படுத்தி, அதனூடாக நாட்டின் தேசிய பொருளாதார வளர்ச்சிக்கான பங்களிப்பை நல்கும் வகையில் இவர் வடக்கு கிழக்கு மாகாணங்களில் மட்டுமல்லாது நாடளாவிய ரீதியிலும் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

அதேநேரம், இதுகாலவரையிலான யாழ். மாவட்ட முன்னேற்றங்களை எடுத்துக் கொண்டால் கல்வி, சுகாதாரம், மின்சாரம், வீதிகள், பாடசாலைகள், புனரமைப்பு குடிநீர், விவசாயத்துறை, கடற்றொழில் காணி மற்றும் வீடமைப்பு போன்ற அனைத்துத் துறைசார்ந்த அதீத முன்னேற்றங்கள் இவரது முயற்சி மற்றும் நடவடிக்கைகளினாலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளதை வரலாற்றில் அறிந்து கொள்ள இயலும்.

இறுதி யுத்தத்தில் இடம்பெயர்ந்திருந்த எமது மக்கள் வவுனியா மற்றும் யாழ். நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டதிலிருந்து அவர்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக் குடியேற்றுவது மற்றும் மீளக்குடியேறிய நிலையில் அவர்களுக்கான அடிப்படை வசதிகளை வழங்குவது வரையில் இரவு பகலாக இவர் மேற்கொண்டிருந்த பணிகள் காலத்தால் மறக்க இயலாதவை.

யாழ்.மத்தியக் கல்லூரியின் பழைய மாணவர் என்ற ரீதியில் அக் கல்லூரியின் அனைத்து வள விருத்திகளிலும் இவரது பங்களிப்புக்கள் மிகவும் பாரியவையாகும்.

"யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்ற கொள்கை அடிப்படையில் அவர் செயற்பட்டு வருவதால் யாழ்.மத்திய கல்லூரிக்கு மட்டுமல்லாது அனைத்துப் பாடசாலைகளும் அனைத்து வள வசதிகளையும் பெற வேண்டும் என்ற நோக்கில் உழைத்து வருபவர்.

ஏனைய அரசியல் வாதிகளிலிருந்து மிகவும் வேறுபாடு கொண்ட இவர், தனது அரசியல் அதிகாரம் தனது மக்களுக்கான பணிகளை மேற்கொள்வதற்கு மட்டுமே என்ற நோக்கில் செயற்பட்டு வருபவர்.

மாணவ முதல்வர் சபை

2014 - 2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோன் டூயியின் பயன்கொள்வாதச் சிந்தனைகளும் சமகாலக் கல்வியில் அவற்றின் முக்கியத்துவமும்.

## அறிமுகம்.

பிளேட்டோ கல்விக்குரிய இலட்சியங்கள் பற்றிக் கூறினார், ரூசோ கல்விக்குரிய தத்துவங்களை விளக்கினார், ஹேபார்ட், புரோபல் போன்றோர் உளவியல் அடிப்படையில் கல்விக்கு விளக்கம் கொடுத்தனர் ஆனால் கல்விமுறை, தத்துவம், கல்விஉளவியல் மூன்றையும் ஒன்றிணைத்துக் கல்வியைச் செயன்முறை ஒழுக்கமாக்கித் தந்தவர் 20ஆம் நூற்றாண்டின் இணையற்ற கல்வி அறிஞர் எனப்போற்றப்படும் அமெரிக்க நாட்டுக் கல்விச் சிந்தனையாளரான ஜோன் டூயி என்பவராவர்.

இவர் 1859இல் பிறந்தார், 1879இல் Verment பல்கலைக்கழகத்தில் முதலாவது பட்டத்தைப் பெற்று ஆசிரியரானார். 1882 சித்திரை மாதம் தத்துவ சாஸ்திரத்தின் ஊகம் என்ற பத்திரிகையில் "பௌதீகவியலின் நியத்தினை ஏற்றுக் கொள்ளல்" என்ற தீர்ப்பைக் கொண்ட தனது முதலாவது ஆய்வுக் கட்டுரையை எழுதினார், அவர் 38 நூல்களும் 800 க்கும் மேற்பட்ட கட்டுரைகளும் எழுதியுள்ளார். பின்னர் மெய்யியல் துறையில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். ரோக்கியோவில் உள்ள இம்பிரியல், சீனாவில் உள்ள பீஜிங், நான்கின் மற்றும் சங்காய் பல்கலைக்கழகங்களில் விரிவுரையாற்றி பேராசிரியர் பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். சீனா, யப்பான், துருக்கி, போன்ற நாடுகளில் கல்வி ஆலோசகராகவும் இவர் பணிபுரிந்தார்.

1896இல் சிக்காக்கோ பல்கலைக்கழகத்தில் ஆய்வுகூடப் பாடசாலை ஒன்றை ஆரம்பித்தார். தன்னைக்கவர்ந்த சிந்தனைகள் எண்ணங்கள் ஆகியவற்றை எல்லாம் பரிசோதனையின் வழிநின்று முடிவுகளைத் தெரிவித்தார். டூயியினுடைய தத்து வங்களும், திட்டங்களும் ஆராய்ச்சிமயமானதும், கடமைமயமானதும் ,கருவிமயமானதும், செயன்முறை வடிவமுடையதும், அபிவிருத்தி மயமானதும், நடை முறைப்படுத்தக் கூடியதும், எல்லாவற்றுக்கும் மேலாக உண்மைக்குப் புறம்பின்மை மயமானதும், என அழைக்கப்படுகிறது. இவை அனைத்துமே அவர் அழுத்தமாகக் கூறுகின்ற சக்தியும் ஊக்கமும் கொண்ட வாழ்க்கைச் சவால்களையே சுட்டிக் காட்டுகின்றன.

அவருடைய கூற்றின்படி எது பிரயோசனமானதோ அதுதான் உண்மைக்குப் புறம்பின்மை மயமானது. எது நடைமுறைப்படுத்த சாத்தியமாகிறதோ அதுதான் உண்மை என்றும், சாத்தியமற்றவை அனைத்தும் பொய் என்றும் அவர் கருதினார். கல்வி நடவடிக்கை களிலே முக்கியமாக 5 விடயங்கள் தொடர்பாக அதிக அழுத்தம் கொடுத்தார்.

- ரசிப்புத்தன்மையுடனான உணர்ந்து அனுபவிக்கும் சக்தியின் கொள்ளளவு.
- ஏமாற்றும் நோக்கமின்மை.
- சாத்தியம்.
- விஞ்ஞானரீதியான உட்கருத்து.
- இணக்கப்பாட்டுடன் கூடிய சமூக நோக்கு.

இத்தகைய பண்புகள் கல்வி கற்றல் கற்பித்தல் செயற் பாடுகளிலே இருக்க வேண்டும். மாணவர்களின் எதிர் காலச் சவால்கள் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். நிகழ் கால அனுபவங்களை ஆக்கபூர்வமாகவும், பலன ளிக்கக் கூடியவகையிலும், தொடரக்கூடிய வகையிலும், கற்றுக் கொடுத்தல் வேண்டும் என்பது இங்கு புலனாகிறது.

## ஜோன் டூயியின் கல்விச் சிந்தனைகள்.

கல்வி என்பது அனுபவங்களை மீள்ஒழுங்குபடுத் தலும், மீள்கட்டுமானம் செய்தலுமாகும். கல்வியின் நோக்கம் மாணவரின் வலுவையும், திறனையும், விருத்திசெய்தலாகும். சமூக வினைத்திறனை கல்வியில் மாணவர்களிடத்து வளர்க்கவேண்டும். ஜன நாயக விழுமியங்களை, மாணவரிடத்தில் பதிவித்தல் வேண்டும். மாணவரிடத்துக் கூட்டுறவும் இசைவாக் கலும் உருவாக்கப்படல் வேண்டும். பாடசாலைச் செயற் பாடுகள் வழியாக மாணவரிடத்துப் பொறுப்பேற்கும் பாங்கும், அறப்பாங்கும் வளர்க்கப்படல் வேண்டும். பயன்கொள் கல்வி சம சந்தர்ப்பத்தை வழங்குதலையும் எதிர்கால வாழ்க்கைக்கு மாணவரைத் தயார்ப் படுத்தலையும் அடிப்படையாகக் கொண்டதாகும்.

கல்வி சமூகத் தேவையாகிறது. தனிமனிதன் பயன்பெறவும் சமூகம் பயன்பெறவும் கல்வி கருவி யாகிறது. இவ்வாறாக மேம்பாட்டுக்கான கல்வி, வாழ்க் கைக்கான கல்வி, சமூகத்துக்கான கல்வி, அனுபவங் களைச் செழுமைப்படுத்துவதற்கான கல்வி, என்ற பரிமாணங்கள் ஜோன் டூயியின் கல்விச் சிந்தனையில் மேல் எழுகின்றன.

ஜோன் டூயியின் கல்வி ஒழுங்கமைப்புக்கள் மூன்று நிலைகளைக் கொண்டிருந்தன.

- 4-8 வயது வரை விளையாட்டுப்பருவம்.
- 8-12 வயது வரை தன்விருப்பு மேல் ஓங்கற் பருவம்.
- 12 வயதில் ஆரம்பமாகிறது சிந்தனையும், கவனமும் இணைந்த பருவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பருவ நிலைகளைக் கருத்திற் கொண்டு பாடசாலைக் கலைத்திட்டங்கள் திட்டமிடப்படல் வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

கலைத்திட்டம் என்பது பின்வரும் நான்கு கோட்பாடுகளைக் கொண்டிருக்க வேண்டும் என டூயி கருதினார்.

- பயனுடைமை,
- நெகிழ்ச்சிப் பாங்கு,
- பரிசோதனைப் பாங்கு,
- வாழ்க்கை இணைப்பு.

இது மாணவரின் வளர்ச்சிப் படிநிலைக்கு ஏற்றவாறும் அவர்களது விருப்பங்களுக்கு ஏற்றவாறும் உருவாக்கப்பட்டு மாணவர்களின் உளமுதிர்வுக்கு ஏற்றவாறு அறிவை வழங்கக்கூடிய நெகிழ்ச்சிப்பாங்கு கலைத்திட்டத்திற்கு அவசியமாகிறது. மாணவரின் சமகால நடப்பியல் அனுபவங்களுடன் கலைத் திட்டமும், கற்பித்தலும், தொடர்புபடுத்தப்படுதலே ஏற்பு டையதாகும். குறிப்பிட்ட பருவத்தின் வாழ்வியல் அனுபவங்களைத் தழுவிக் கலைத்திட்டம் இயங்குதலே பொருத்தமானதாகும். பாடங்களைக் கற்பிக்கும் போது வாழ்வியல் அனுபவங்களுடன் ஒத்திசைவை ஏற்படுத்தலே சிறந்ததாகும் என டூயி குறிப்பிட்டார்.

நெகிழ்ச்சியுள்ள கலைத்திட்ட வடிவமைப்பை வலி யுறுத்தியமை, தொழில் அனுபவங்கள். கைப்பணிகள், முதலியவை கலைத்திட்டத்தின் சிறப்பார்ந்த இயக்கக் கூறுகளாக அமைந்தமை இவரது தனித்துவமான பங்களிப்பு வடிவங்களாகும். இன்று இலங்கையிலும், மற்றைய நாடுகளிலும், தொழிற் கல்விகளின் வளர்ச்சி யும், செயன்முறை அறைகளின் உருவாக்கமும், மையப் பாடச் செயல் அனுபவங்களுடன் கற்பிற்கப் படுகின்றமையும், டூயி தந்த கலைத்திட்டச் செயற்பாடே எனலாம்.

## ஜோன் டூயியின் பயன்கொள்வாதம்.

பயன்கொள்வாதம் நடைமுறைகளின் பொருத்தப்பாட் டின் உண்மையை வலியுறுத்துகிறது. உடனடித்தேவை களை முக்கியப்படுத்துகிறது. மனித விருப்பங்களைத் தழுவிய நடைமுறை விளைவுகளுக்கு முன்னுரிமை கொடுக்கிறது. வில்லியம் ஜேம்ஸ்(1842-1910), சார்ல்ஸ் சாண்டேர்ஸ் பியர்சி(1832-1914) முதலியோர் பயன் கொள்வாதத்தை வலியுறுத்தியவர்களில் முதன்மை பெறுகின்றனர்.

உடனடித் தேவைகளை ஆராய்வதற்கு தெறி சிந் தனையின் முக்கியத்துவத்தை டூயி வலியுறுத்தினார். தெறி சிந்தனை என்பது தோற்றத்தை இனங்காணுதல் இதன் முதற் கட்டமாகும், பிரச்சினைபற்றித் தெளிவை ஏற்படுத்தல் இரண்டாம் கட்டமாகும், பிரச்சினையின் தீர்வுக்கான கருதுகோளை உருவாக்குதல் மூன்றாவது கட்டம், பிரச்சினையைத் தீர்பதற்கான பல்வேறு கருத்துக்கள் இக்கட்டத்திலே தொடரும். அவற்றைக் காரணகாரிய அடிப்படையிலே பகுத்தாராய்தல் வேண்டும். தீர்வுகளை ஒப்பு நோக்கிச் செயற்படுத்தல் அடுத்த கட்டமாக அமையும். ஆனால் இந்தப்படி நிலைகள் மேற்குறிப்பிட்ட தொடர்ச்சியில் இடம்பெற வேண்டும் எனவும் டூயி வலியுறுத்தினார்.

செய்து படித்தல் (Learning by doing) என்னும் அணுகுமுறையை முன்வைக்கின்ற பயன்கொள் வாதத்தைக் கொண்டவராக டூயி அறியப்படுகின்றார். குழந்தைகள் முதல் முதியவர்வரை வாழ்க்கையில் பல பிரச்சினைகளை எதிர் கொள்கின்றனர் இச்சந்தர்ப்பத் தில் சிந்தனை பலமான ஒரு உபகரணமாக மாறு கின்றது என்றும், அப்பிரச்சினையின் நிவர்த்தியின் மூலம்தான் புதிய அறிவு உருவாகிறது எனவும், அவர் குறிப்பிட்டார். இது அவரை ஒரு உபகரணவாதியாக மாற்றியது. டூயியின் நிலைப்பாடாக உலகம் கணக்கில் கொள்வது இந்த கருவியியல் வாதத்தைத்தான். இது பயன்பாட்டுவாதமாகவும், தர்மவாதமாகவும், மிகவும் தொடர்பு கொண்டிருக்கிறது.

## டூயி விளக்கிய கருவிவாதம்.

இது தெறிசிந்தனை ஆய்விலிருந்து எழுகிறது. கருத்துக்கள் படிமங்களாகவோ, பிறபொருட்கள் பற்றிய காட்சிகளாகவோ அமைவதில்லை. உயிரியின் நடத்தையை வளப்படுத்துவது கருவிகளாகவுள்ளன. இவரது கருவிவாதம் வழிமுறைகளின் முக்கித்துவத்தை வலியுறுத்துகிறது. முடிவுகள் அல்லது விளைவுகளுக்கு நாம் வழங்கும் முக்கியத்துவம் கருவிகள் அல்லது வழிமுறைகளுக்கும் வழங்குதல் வேண்டும். என்பதாகும்.

## டூயி விளக்கிய சார்பு வாதம்.

சூழமைவையும், தொடர்புகளையும், பயனையும் அடிப்படையாகக் கொண்டது. பயனை அடிப்படையாகக் கொள்ளாது ஒருபொருளை நல்லது, கெட்டது என விளக்குதல் பொருத்தமற்றது. நன்மைகளை நடை முறை வடிவிலே எதிர் கொள்ளல் வேண்டும். நடை முறைகள் சூழலை மேலும் வாய்ப்பானதாகவும், சிறப் பானதாகவும் மாற்ற உதவுதல் வேண்டும் என்பதாகும்.

## டூயி விளக்கிய மானிடவாதம்.

இது ஜனநாயக வெளிப்பாடுகளைக் கொண்டிருப்பது. ஜனநாயகம் என்பது குறிப்பிட்ட ஒரு சமூக அமைப்பிற்கு ஒப்ப வாழ்வதன் மூலம் குழந்தைகளிடம் அதற்கே தெரியாமல் உருவாவதாகும். மக்களாட்சியை அவர் வாழ்க்கை நடைமுறையாகக் கருதினார். மக்களாட்சிக் குரிய கல்வி பற்றி அவர் விரிவான சிந்தனைகளை முன்வைத்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோன் டூயியின் பயன்கொள்வாதச் சிந்தனைகளும் சமகாலத் தேவைகளும்.

♦ அனுபவமே இவரதுகல்விச் சிந்தனைகளில் ஆழ்ந்து வற்புறுத்தப்படுகின்றது. பௌதீக மற்றும் பண் பாட்டுச் சூழல்களுடன் இடைவினை கொள்வதால் அனுபவம் திரட்டப்படுகிறது என அவர் விளக்கினார். செயல் அனுபவமூலம் பெறப்படும் அறிவே உண் மையானது. ஆகவே அறிவென்பது வாழ்க்கையின் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டியங்கு வதாகும் எனவும் விளக்கியுள்ளார். அந்தவகையில் 1997ஆம் ஆண்டு கல்விச் சீர்திருத்தத்தில் செயற் பாட்டினூடான கல்வி வலியுறுத்தப்படுகிறது. அதன் வழி பாடசாலைகளில் சிறிய அளவிலான பண்ணை களையும், வகுப்புக்களுடன் இணைந்த செயற் பாட்டு அறைகளும் அமைக்கப்பட்டு செயற்பாட்டுட னான அனுபவக் கல்வி வழங்கப்படுகிறது. அந்தவகையில் இன்றும் அனுபவக் கல்வியே வலியுறுத்தப்படுகிறது.

♦ சமுதாயம் முன்னேறிவரும் மாற்றத்துக்கும் வேகத் துக்கும் ஏற்பக் கல்வியிலும் மாற்றங்கள் ஏற்பட வேண்டும் என்றும், கருத்துடன் கல்வியானது செயல் நோக்கில் அமைய வேண்டும் என்ற முற் போக்குக் கல்விக் கோட்பாட்டுக்கு வழி வகுத்தவரும் டூயியே ஆவர். அவரின் கோட்பாட்டுக்கு ஏற்பவும், இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து இன்று வரை காலத்துக்குக் காலம் சமுதாய முன்னேற்றத் திற்கு ஏற்பவும், உலக நாடுகளின் வளர்சிக்கேற்ப வும் கல்விச் சீர்திருத்தங்கள் முன்வைக்கப்பட்டு வந்துள்ளன. இன்று நடைமுறையில் உள்ள பாட சாலைக் கலைத்திட்டங்களிலும் டூயியின் பயன் கொள்வாதச் சிந்தனைகள் நன்கு வலியுறுத்தப் பட்டுள்ளன. ஆனாலும் அரசியல் மாற்றங்களி னாலும், பொருளாதாரப் பின்புலம் காரணமாகவும், கல்வியில் குறித்த இலக்கை அடையமுடியாமல் இருப்பதைக் காணமுடிகிறது.

♦ கல்வி என்பது என்றும் வளர்ந்துகொண்டிருப்பதும், சூழ்நிலை மாற்றங்களுடன் மாறிக்கொண்டிருக்க வேண்டியதும் என்றும் இயங்கிக் கொண்டிருப்பது கல்வி. எனவே கல்விக்கு இறுதி இலக்கு ஒன்றும் இல்லை என்பதும், டூயியின் கருத்தாகும். இக் கருத்து சூழலுக்குரிய இசைவாக்கல் பற்றிய டார்வி னுடைய கூர்ப்புக் கொள்கையின் அடிப்படையில் எழுந்ததாகும். உலகமயமாக்கல், தொழில் சந்தை போன்ற சூழ்நிலை மாற்றங்களுடன் போட்டி போட வேண்டிய தேவை இன்று ஏற்பட்டுள்ளது. அதற்கு அமைவான கலைத்திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ள போதிலும் அவற்றின் போதாமை உணரப்பட்டு மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பழையன கழிதலும் புதியன புகுதலும் என்பதற்கு அமைவாக கல்விக்கு இலக்குகள் இன்றி ஆராய்ச்சி களும், கண்டுபிடிப்புக்களுமாக கல்வி வளர்ந்து செல்வதனைக் காணமுடிகிறது.

♦ வாழ்க்கைக்கு ஆயத்தப் படுத்துவது கல்வி அல்ல, வாழ்கையே கல்வி, கல்வியே வாழ்க்கை என டூயி குறிப்பிடுகின்றார். இக்கருத்தானது இன்றைய பயன்பாட்டுவாதத்தை மேலும் மெருகூட்டி நிற் கின்றன. அமெரிக்க ஆய்வாளரின் கருத்துப்படி மாணவர்கள் கொண்டிருக்கும் அறிவில் 25 சத வீதம் மட்டுமே வகுப்பறையில் கற்பிற்கப்படுகிறது என்றும், வகுப்பறைக்கு வெளியே விளையாட்டுத் திடலிலும், கற்பதற்குத் திட்டமிடாத வெளிஇடங் களிலும், ஏனையவர்களுடனான இடைத் தொடர்புகளின் மூலமுமே அதிக அளவில் கற்றுக் கொள்கின்றனர் என்றனர். அதாவது பாடசாலைக்கு சென்று திரும்பும் வழியிலேயே மீதியைக்கற் கின்றனர் எனக்கூறப்படுகிறது. இதனையே கரு வறையில் இருந்து அந்திமம் வரை கற்றல் நடைபெறுகிறது எனக் கூறப்படுகிறது. அந்தவகை யில் டூயியின் பயன்பாட்டுவாதக் கருத்துக்கள் இன்றும் வரவேற்கப்படுகின்றன.

♦ தனியாளின் திறனை விருத்திசெய்து அவற்றிற்கு ஏற்ப சூழலைப் பயன்படுத்தி இயலுமானவற்றைப் பூரணப்படுத்திக் கொள்ள அவனுக்குதவுவதே கல்வி. எனவே மனிதன் தனது தேவைக்கும் திருப்திக்கும் இணங்க இயற்கையைப் பயன் படுத்த அறிந்துகொள்ள வேண்டும் என டூயி கருத்துரைத்தார். இக் கருத்தானது இன்றைய உலகமயமாக்கலில் முன்னிலைப்படுத்தப்படுகிறது. உலக சந்தையில் விற்பனை செய்யக்கூடிய தனி நபர்களை உருவாக்க வேண்டிய தேவை இன்றைய கல்வி நிறுவனங்களுக்கு ஏற்பட்டுள்ளது. ஆகவே செயற்திறனுடன்கூடிய, சமூகஇசைவாக்கமுள்ள செயல் அனுபவம் கொண்ட, தனிநபர்களை உருவாக்கக்கூடிய வகையில் சமூகநிறுவனங்கள், தொழில் நிறுவனங்களுடன் இணைந்த கலைத் திட்டங்கள் இன்று உருவாக்கப் பட்டுவருகின்றன. அதேவேளை ஒவ்வொருவரும் தங்களைத் தாங்களே சூழலுடன் பொருந்தக்கூடிய வகையில் வளர்த்துக் கொள்ளவேண்டிய தேவையும் இன்று ஏற்பட்டுள்ளது.

♦ கல்வி என்பது சமுதாயம் அழியாமல் பேணிக்கொள் வதற்கு வேண்டிய கல்வியாகும் என்றும், சமுதாய அனுபவங்கள் கல்வியினால் கல்விமூலம் பரி மாற்றம் செய்யப்பட்டு எல்லோரும் பங்குபற்றும் அனுபவங்களாக இருக்கவேண்டும் எனவும் டூயி குறிப்பிட்டார். இக் கொள்கைக்கு அமைவாக பாட சாலைகள் திறந்தபாடசாலைகளாகக் காணப்படு கின்றன. கலைத்திட்டங்களில் களஆய்வு நடவடிக் கைகள், வெளிக்கள உலா போன்றனவும் உள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளடக்கப் பட்டுள்ளன. அத்துடன் கலைநிகழ்வுகள், கலாசாரநிகழ்வுகள் நடாத்தப்படுகின்றன. இதன் மூலம் சமூக கலாசார பண்பாடுகள் அடுத்த தலை முறைகட்கு நேர்த்தியாக கையளிப்பதற்கு வகை செய்யப்படுகின்றன. இதனால் சமுதாயம் அழி யாமல் பேணிக்கொள்வதற்கு வகை செய்யப்படு கின்றது.

♦ கல்வி தனியாள் ஆளுமையை வளர்ப்பதோடு சமூக வாழ்வையும் தொடர்புபடுத்தக்கூடியதாக இருக்க வேண்டும். அதன்மூலம் தனியாள் சிறப்புற சமூகம் சிறப்புறும். எனவே கல்வி, வாழ்க்கையையும், சமூக முன்னேற்றத்தையும், நோக்காகக் கொண்டிருக்க வேண்டும். என டூயி குறிப்பிடுகின்றார். சமூகத்தின் பிரதிபலிப்புக்களைச் சுமந்து கொண்டு பிள்ளைகள் பாடசாலைக்கு வருகிறார்கள் அவற்றில் தீயன வற்றை நீக்கி நல்லனவற்றை ஊட்டுவதுடன் அவர் கட்கு விருப்பமான துறைகளில் தேர்ச்சியடையச் செய்து, சமூகத்துக்குப் பொருத்தப்பாடு உடையவர் களாகவும், ஆளுமை மிக்கவர்களாகவும் உரு வாக்குவதே இன்றைய பாடசாலைகளின் தேவை யாக உள்ளது.

♦ கல்விகற்கும் பாடசாலை சமுதாயப் பிரதிபலிப்பாக விளங்கவேண்டும். அவை பிள்ளைகள் இயற்கை யான பணிகளைச் செய்து வளர்ச்சிபெறும் இட மாகும். பிள்ளைகள் உண்மையான சமூகநிலை களில் பணிபுரியவும் ஆக்கப்பணிகளில் ஈடுபடவும் சக்தியும் வல்லமையும் உடையவர்கள் எனும் நம்பிக்கை வளர்க்கும் இடமாகவும் பாடசாலைகள் அமைய வேண்டும் எனவும் டூயி விரும்பினார். இக் கருத்து இன்று உலக வல்லுனர்களினால் உணரப் பட்டு வளர்ந்த நாடுகளில் எல்லாம் இக் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. உதாரணமாக கடற்கரை ஓரமாக மீன்பிடி சமூக சூழலில் உள்ள பாடசாலைப் பிள்ளைகளுக்கு கடல் வளம் பற்றியும், மீன்பிடித் தொழில் பற்றியும், அவற்றைச் சந்தைப் படுத்தல், பதப்படுத்தல், தொழிலை நிர்வகித்தல். போன்ற பயிற்சிகளை இயற்கை அனுபவங்களுடாக வழங்கவேண்டும் என்பதும், அதுவே பயனுள்ளதாக அமையும் என்பதுடன், இவைதான் இன்றைய தேவையுமாகும்.

♦ பாடசாலைகள் பிள்ளைகளுக்கு உண்மையான பயன்படக்கூடிய பணிகளைக் கொடுக்க வேண்டும். பிள்ளைகள் வகுப்பறையில் உடல்பணிகளில் மட்டு மல்லாது உளப் பணிகளிலும் ஈடுபட்டு சுதந்திர நோக்குடன் சுயசிந்தனையை விருத்தியாக்க வேண்டும். பிள்ளைகள் பாடசாலையில் சுதந்திர மான சூழலில் வளரவேண்டும் என டூயி கூறியுள் ளார். அந்தவகையில் வாழ்க்கையில் பயன்படக் கூடியதான தொழிற்கல்விகள் இன்று கலைத்திட்டத் தில் இணைக்கப்பட்டுள்ளன. சமையற்கலை, தையற்கலை, மரவேலை, நெசவுவேலை. சித்திரக் கலை போன்றன பிள்ளைகளின் விருப்பிற்கு ஏற்ப பயிற்றுவிக்கப் படுகின்றன. அத்துடன் விளையாட்டு. உடற்பயிற்சி, யோகாசனம், தியானம், பிரார்த்தனை கள், உள நல ஆலோசனைகள் என்பனவும் உளப் பயிற்சியாக பயிற்றுவிக்கப்படுகின்றன.

♦ நுண்ணறிவுத்திறன் ஆக்கப்பணிகளில் பயன்படு வதோடு சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும் கல்வியறிவு உபயோகிக்கப்படல் வேண்டும். கல்வி அனுபவம், சமூக அனுபவம் இரண்டும் சேர்ந்த சமூக அறிவைப் பெறுவதே உண்மை அறிவாகும். என்பதும் டூயியின் கருத்தாகும். கணிதம் கலைத்திட்டத்தில் முக்கிய பாடமாகும். இதனூடாக பிரச்சனை விடுவித்தலுக்குப் பயிற்சியளிக்கப் படுகிறது. அதனால் நுண்ணறிவுத்திறன் வளர்க்கப் படுகிறது. இதன் உதவியுடன் சமூகப் பிரச்சினை களைத் தீர்த்துக்கொள்ள முடிகின்றது.

♦ பிள்ளைகள் நாம் கற்கின்றோம் என்றுகூறு வதைக்காட்டிலும் நாம் அனுபவங்களைப் பெறு கின்றோம் என்று கூறுவதுதான் சிறந்த கல்வி யாகும். கல்வி என்பது அனுபவங்களை அனுபவங் களால் அனுபவங்களுக்கூடாக அளிப்பதாக அமைய வேண்டும். இவ் அனுபவங்கள் செயன் முறையால் பெறப்படல் வேண்டும் என டூயி கருத் துரைத்தார். இதனையடியொற்றி ஆரம்பப்பாட சாலைக் கலைத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. முதன்மைநிலை-1, 2, 3 என மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டு முதன்மைநிலை-1 இல் முழுவதுமாக விளையாட்டு மூலமும் அதாவது அனுபவங்களுக் கூடாகவும், முதன்மைநிலை-2 இல் கால்பங்கு எழுத்துப்பயிற்சியுடன் மீதி விளையாட்டு மூலமுமாக வும், முதன்மைநிலை-3இல் பொதுச் சோதனைக்கு ஏற்றவகையிலும் அனுபவங்களை அனுபவங் களால் அனுபவங்களுக்கூடாகக் கற்பிற்கப்படு கின்றது. இவ்வகையில் விசாரிக்கக் கற்றல், பல் வேறு நல் விழுமியங்களை விருத்தியாக்கல், கூடி வாழக் கற்றல், சுதந்திரமாக தமது செயற்பாடுகளை வெளிப்படக் கற்றல், என்பன எதிர்பார்க்கப்படு கின்றன.

♦ பிள்ளைகளின் இயல்பு வாழ்க்கை ஆகியவற்றுடன் இணைந்ததாகவே கலைத்திட்டம் இருத்தல் வேண்டும். கலைத்திட்டத்தின் உள்ளடக்கம் சமுதாய உறுதி ஒருமைப்பாடு என்பவற்றிற்கான பாடத்தைக் கொண்டிருக்க வேண்டும். ஒருமைப்பாடு பிள்ளையின் சமூகப்பணியூடாக ஏற்பட வேண்டும். பாடங்கள் பிள்ளையின் சமுதாய வாழ்க்கைக்கு உதவுவனவாக இருத்தல் வேண்டும். என டூயி குறிப்பிடுகிறார். எமது நாட்டில் பல்லினச் சமூகங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்கின்றமையால் இயல்பு வாழ்க்கையுடன் இணைந்ததாகவே கலைத்திட்டம் அமைக்கப் பட்டுள்ளது. அத்துடன் சமுதாய உறுதி, ஒருமைப் பாடு என்பவற்றிற்கான பாடத்தைக் கொண்டிருக் கிறது இதனால் சமுதாய வாழ்க்கைக்கும் சமுதாய ஒற்றுமைக்கும் உதவுவனவாக அமைந்துள்ளன.

♦ கலைத்திட்டம் பிள்ளைமையமாகக் கொண்டிருக்கும் அதே வேளையில் அது வாழ்க்கையை மத்தியாக வும் சமூகத்தை மத்தியாகவும் கொண்டமைய வேண்டும். கல்வி என்பது காலத்துக்கு ஏற்ப சமூகப் புனரமைப்புக் கருவியாக இருத்தல் வேண்டும். சமூகக் குறைபாடுகளைக் கல்விமூலம் நிறைவு செய்ய முடியும். எனவும் டூயி குறிப்பிடுகின்றார். அந்தவகையில் நமது நாட்டில் நடைமுறையில் உள்ளது மாணவர்மையக் கல்வியாகும். சமூக வளர்ச்சிக்கேற்பவும், சமூகத்தேவைக்கேற்பவும், சமூக குறைபாட்டை நீக்கும் பொருட்டும் காலத்துக் குக் காலம் பாடத்திட்டம் மாற்றியமைக்கப்பட்டு வரு கின்றது. இன்றைய நிலையிலும் உலக நாடுகளின் வளர்ச்சிக்கு ஏற்றவாறான மாற்றங்கள் ஆலோசிக் கப்பட்டு வருகின்றன.

♦ கல்வி பெறும் அடிப்படையில் தர்க்க ஆற்றல் வாய்ந்த வர் என்றும், கைத்தொழில் ஆற்றல் வாய்த்தவர் என்றம், வேறுபாடு இருத்தல் கூடாது. கலையும். விஞ்ஞானமும், தொழில்நுட்பமும் ஒன்றிணைந்த அறிவு, சமூகவாழ்வில் இயற்கையைப் பயன்படுத் தக்கூடிய ஆற்றலைப் பிள்ளையிடம் வளர்க்க வேண்டும் என்ற டூயியின் கூற்றிற்கு இணங்க 1997 உயர்தர கலைத்திட்ட சீர்திருத்தத்தில் பலபாடங்கள் ஒன்றினைக்கப்பட்டன. அத்துடன் 2007 சீர்திருத் தத்தில் ஒருதுறையில் உள்ளமாணவன் மற்றைய துறையில் உள்ள பாடங்களைத் கற்கக் வசதிகள் ஏற் படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் தனித்துவ வேறுபாடு குறைக்கப்பட்டுள்ளது. இன்றைய பொதுக் கல்விக் கலைத்திட்டம் கலையும், விஞ்ஞானமும், தொழில்நுட்பமும், ஆகிய ஒன்றிணைந்த அறிவு சமூகவாழ்வில் இயற்கையைப் பயன்படுத்தக்கூடிய வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. அந்தவகையில் டூயியின் சிந்தனைகள் இன்றும் உயிரூட்டமாக உலகமெங்கும் வலம் வந்துகொண்டிருக்கின்றன.

♦ பிள்ளைகளின் கற்றலானது அனுபவத் தொடர்ச்சி யைக் கொண்டதாக ஆழத்திலும், பரப்பிலும் அதி கரித்துச் செல்வதாகப் பிள்ளையின் விருத்தியோடு தொடர்பு கொண்டிருக்க வேண்டும். அத்தொடர்பு மனித, சமூக, பண்பாட்டு விழுமியங்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும் என்பது டூயிஇன் வாதமாகும். அந்தவகையில் இன்று நடைமுறை யிலுள்ள இலங்கையின் பொதுக்கல்விக் கலைத் திட்டமானது ஆண்டு 1 தொடக்கம் 11 வரையும் ஒவ் வொரு பாடமும் தொடர்ச்சியானதாகவும் ஆழத்திலும், பரப்பிலும் அதிகரித்துச் செல்வதாகவும் காணமுடிகிறது. அத்துடன் அவை மனித, சமூக, பண்பாட்டு விழுமியங்களைக் கொண்டதாகவும் காணப்படுகினறன. மேலும் செயற்பாடுகளுடன், அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவும் இருக்கிறது. இது டூயியின் பயன்கொள்வாதச் சிந்த னைகளை அடியொற்றி இருப்பதும் குறிப்பிடத்தக்க தாகும்.

♦ பிள்ளையின் சுதந்திரம், கல்வியில் சுதந்திரம் என்பவற்றின் மூலமே அரசியல்-பொருளாதார விருத்தியை ஏற்படுத்த முடியும். தனியுரிமை ஒழிக்கப் பட்டுச் சமத்துவமும். சமதர்மமும், தழைத்தோங்க வேண்டும். என்பது டூயிஇன் கருத்தாகும். மாணவர் மையக் கல்வியின் மூலம் இன்று பிள்ளையின் சுதந்திரம் உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால் கல்வி யில் சுதந்திரம் என்பது அரசியல் தலையீடுகளினால் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதன்காரணமாக பொருளா தார விருத்தியிலும் தேக்கநிலை காணப்படுகிறது. சமத்துவமும். சமதர்மமும் ஒழிக்கப்பட்டுச் தனியுரிமை தலைதூக்கியுள்ளதையும் இன்று உலகெங்கும் காணமுடிகிறது.

♦ ஏற்றத்தாழ்வின்றி எல்லோரும் கல்விஅறிவு பெற வேண்டும். கல்விமூலம் சமூக அறிவு பெறவேண்டும், பொருளாதார சுபீட்சம் பெறவேண்டும். தனிமனித வளர்ச்சியே சமூகத்தின், மனிதகுலத்தின் வளர்ச்சி யாகும். மனிதகுல வளர்ச்சியே சனநாயக தத்துவம் என்றார். இதற்கமைய இன்று ஆண்டு 1-9 வரை அனைவருக்கும் கட்டாயக் கல்வியும் ஆண்டு 13 வரை சமகல்வி வாய்ப்பும் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் உயர்கல்வி வாய்ப்பு தகுதியுள்ள எல்லா மாணவர் களுக்கும் கிடைப்பதில்லை, தெரிவுசெய்யும் மாணவர் களுக்கும் சமவாய்ப்புக் கொடுப்பதில்லை இனரீதி யானதும், பிரதேசரீதியானதுமான வேறுபாடுகள் காட்டப்படுகின்றன. தனிமனித வளர்ச்சிக்கு இணைப் பாட விதானச் செயற்பாடுகள். வழிகாட்டுகினறன. இக் கலைத்திட்த்தின் ஊடாக நல்லாளுமை உடைய தனி நபர்களை உருவாக்க முடிகிறது.

## முடிவுரை

ஜோன் டூயியின் பயன்கொள் வாதச் சிந்தனைகள் கருவிவாதம், சார்புவாதம், மானிடவாதம் என்பவற்றின் ஊடாக கட்டியெழுப்பப்பட்டுள்ளன. டூயி முன்மொழிந்த கற்பித்தல் முறைகளுள் பிரச்சினை விடுவித்தல் முறை அதிக முக்கியத்துவம் பெறுகிறது.

உலகம் தொடர்ந்து உருவாகிக் கொண்டிருக்கிறது. வாழ்க்கை எப்பொழுதும் மாறியவண்ணம் உள்ளது. இவ் வாறான மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கக் கூடிய சிந்தனை களே டூயியின் ஆக்கங்களில் மேலெந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டூயியின் கலைத்திட்டமானது மாணவர்களின் முதிர்ச்சிக்கு ஏற்றவாறும், நெகிழ்ச்சிப்போக்குடன் கூடிய துமான, சமகால வாழ்க்கை அனுபவங்களினூடாக, சமூகச்சூழலுக்கு ஏற்றவாறு, கற்பித்தல் தொடர்புபடுத்தப் படல் வேண்டும் என்பதையும் எடுத்துக் காட்டுகிறது. வாழ்க்கையையும் பாடங்களையும் ஒன்றிணைத்து மாணவரை நடைமுறை உலகுடன் சங்கமிக்கச்செய்தல் வேண்டும் என்பதும் உணர்த்தப்பட்டுள்ளது.

கல்வியுடன் இணைந்துள்ள அனுகுமுறைத் தொழில் மையம் சார்பாக இன்றைய சூழ்நிலையில் உருவாகி யுள்ள பல கருத்துக்களை டூயி ஒரு நூற்றாண்டுக்கு முன்பே கண்டறிந்துள்ளார். அவற்றைச் செயற்படுத்திப் பார்க்கவும், வரும் தலைமுறைக்கு அவற்றின் அனுபவ மாதிரிகளை அன்பளிப்பாக வழங்கவும் செய்துள்ளார். ஆகவே டூயியின் பயன்கொள்வாதச் சிந்தனைகள் இன்றைய வாழ்க்கைக்கு உரிய செயன்முறைகளை உள்ளடக்கிய வகையில் வரவேற்கத்தக்கதாக அமைந் துள்ளன என்பது பல்வேறு எடுத்துக்காட்டுக்கள் மூலம் இங்கு உறுதிப்படுத்தப் படுகின்றன.

### உசாத்துணை நூல்கள்.


- புருஷோத்தமன். டி. வி.
  தமிழில் புகழேந்தி. மு. ந. (2008),
  - "கல்வி வளர்ச்சியின் முன்னோடிகள்."
  இந்திய மாணவர் சங்கம்,
  சென்னை-600 018.

- முத்துலிங்கம்.ச (1974)
  - "கல்வியியல் ஒரு அறிமுகம்"
  ஆசீர்வாதம் அச்சகம்.

- ஜெயராசா. சபா(2004)
  "கல்விக் கோட்பாடுகளும் இலக்கியக் கோட்பாடுகளும்."
  சண்சைன் கிரபிக்ஸ்,
  இணுவில்.

- தேசிய கல்வி நிறுவகம் (1990)
  "கல்வியின் தத்துவ அடிப்படை"
  புதிப்பு 1.1, மகரகம.

- ஜெயராசா. சபா (2010)
  "கலைத்திட்டம்,"
  சேமமடு புத்தகசாலை, கொழும்பு 11.

- செல்வராஜா. மா (2005)
  "கல்வியியல் அடிப்படை எண்ணக்கருக்கள்."
  கிழக்குப் பல்கலைக்கழகம்.

- முத்துலிங்கம். ச (1983)
  "கல்வியியல்".
  சதாசிவம் - கீதாஞ்சலி,
  நல்லூர், யாழ்ப்பாணம்.

- சந்திரசேகரம். ப. (1975)
  "கல்வித் தத்துவம்",
  யாழ்ப்பாணம் கூட்டுறவு தமிழ் நூல்பதிப்பு,



**திரு.ந.அனந்தசயனன்**
**பொறுப்பாசிரியர்**
**மாணவர்முதல்வர் சபை**
**யாழ்.மத்திய கல்லூரி**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அமரர்.பொன்.விபுலானந்தன் ஞாபகார்த்த கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் பதிவுகள் - 2013





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUPLIC LIBRARY
JAFFNA


JAFFNA CENTRAL COLLEGE
IN GLORIAM DEI OPTIMI MAXIMI

# மத்தியின் மைந்தர்களின் தேடல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவ முதல்வனே...!



உன் கடமையைச் செய்
விமர்சனங்கள் விரைந்து வரும்
துன்பங்கள் துரத்தும்
துயரங்கள் தொடரும்
அப்போதும்
அஞ்சிடா நெஞ்சம் வேண்டும்

நீ
உறுதியோடு வாழ்
நம்பிக்கை எனும் படகு மேல்
சவால் எனும் சவாரி செய்
கட்டுப்பாடு தானாய் வரும்

நீ
மாற்றாரின் கேலிக்கு செவியை மூடிக்கொள்
நக்கல் சிரிப்பிற்கு நயனத்தை மூடு
உன்,
கடமையில் அன்பைக்காட்டு
அடங்காவிடின்
அதிகாரத்தை காட்டிவிடு!
யார் என்ன சொன்னாலும்
கடமை, கண்ணியம் கட்டுப்பாட்டை
தவற விடாதே!
மாறாதே
மனச்சாட்சிக்கு விரோதியாய்



உன்
உறவுகளாய்
உற்ற நண்பனாய்
இளையவனாய் மூத்தவனாய்
இருந்தாலும்
கடமைநேரம்
நடுநிலை வகி.



நீ
அற்ப வாழ்விற்காய்
ஆணவம் கொண்டு
நிழலை விரும்பி
நிஜத்தை அழிக்காதே

உன்,
கடமைகள் ஒன்றும்
கலை நிகழ்வல்ல
ஒத்திகை பார்ப்பதற்கு
ஒருகணப் பொழுதில்
ஒரு தடவையில்
(செய்யும்போதே)
ஒழுங்காய்ச் செய்துவிடு,

உன்
வாழ்க்கை
கரடுமுரடாய்
கண்ணீர்ப் பயணமாய்த்
தொடர்ந்து வரினும்
கலக்கம் என்பது
கடமையில் வேண்டாம்

மாணவ முதல்வனே
மாண்புறு தலைவனே
கல்லூரித் தாயின்
மகிமையைக் காத்திடு

பதவிக்காய் கடமை செய்யாதே
கடமையில் மிஞ்சு
பதவி உன்னைக் கெஞ்சும்.

**மாணவ முதல்வர் சபை**
**2014 - 2015**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்தியின் மைந்தனாய்! மத்தியில் ஆசானாய்!

1997 - 2014 வரையான காலப்பகுதியிலே மத்தியின் மைந்தனாய், புகழ்பூத்த ஆசானாய் நம் அனைவரது உள்ளத்திலும் உயர்வான இடத்தினை பெற்றவர் மாணிக்கம் ஜோசப் ராஜெரெட்ணம் ஆசிரியர் அவர்கள் நமக்கும் நமது பாடசாலைக்கும் ஆற்றிய பணிகளினை நினைவு கூருவதில் மாணவர் முதல்வர் சார்பில் நாம் அனைவரும் பெருமிதம் அடைகின்றோம்.

இவர் எமது பாடசாலையிலே கல்விகற்றதோடு கற்கும் காலத்திலே மாணவமுதல்வனாகவும் இருந்து கல்லூரிக்கு சேவை செய்தது மட்டுமல்லாமல் தனது மூன்று பிள்ளைகளையும் எமது பாடசாலையிலே கல்வி கற்கவைத்தார். இதிலிருந்து இவர் தன்னை மட்டுமல்லாது தனது குடும்பத்தினையும் எமது பாடசாலைக்காக அர்ப்பணித்தார் என்றால் அது மிகையாகாது.

வழக்கிழந்து போன எமது கல்லூரியின் வாழ்த்துப் பாவினை மீண்டும் நாளாந்தம் பாடவைத்ததும், கல்லூரிக்கீதத்தினையும், வாழ்த்துப் பாவினையும் இசைத்தட்டு வடிவத்திற்கு மாற்றியமைத்த பெருமையும் நம் ஆசானையே சாரும். ஆசிரியர்களுடன் நட்புறவாடுவதிலும் மாணவர்களது ஒழுக்கத்தைப் பேணுவதிலும் இறுக்கமான நடைமுறைகளை கடைப்பிடிப்பவராக விளங்கினார்.

ஆளுமையும், திறனும் கொண்ட இவர் மாலைதீவிலும் கொழும்பு தனியார் நிறுவனம் ஒன்றிலும் உயர்தர மாணவர்களுக்கான அளவையியல் ஆசிரியராகவும், எமது பாடசாலையிலே ஆங்கிலம், புவியியல், வரலாறு போன்ற பாட ஆசிரியராகவும், மாணவர்கள் ஆங்கிலக் கல்வியில் சிறந்து விளங்க அயராது உழைத்தவராகவும் காணப்பட்டமை நாம் அனைவரும் அறிந்த உண்மையே.



கள்ளம் கபடமற்ற, வெளிப்படையாக பேசும் இயல்பினராகவும், பார்ப்பதற்கு எளிமையாகவும், அதிகார மில்லா அதிகாரியாகவும், தரம் 6,7, தரம் 8,9 போன்ற பிரிவுகளின் பகுதித் தலைவராகவும் விளங்கினார். பாடசாலையில் நடைபெறும் அனைத்து மரபுரீதியான விழாக்களையும் முன்நின்று நடாத்துவதுடன் கரோல், ஒளிவிழா போன்ற நிகழ்வுகளை சிறப்பாக நடாத்தி பலரது பாராட்டையும் இவர் பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. மெதடிஸ்த மிஷனரி தேவாலயத்திற்கும் எமது பாடசாலைக்கும் இடையிலான பாரம்பரியமானதும், வரலாற்றுத் தொன்மை மிக்கதுமான உறவை தளம்பாது தொடர்ந்தும் பேணிப்பாது காத்து வந்தார்.

இப்படி எமது பாடசாலைக்காக அளப்பரிய சேவையாற்றிய அந்த மகான் தனது சேவையை மேலும் தொடரவேண்டும். அவர் தனது ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வுபெற்றாலும் எமது பாடசாலையின் பழைய மாணவன் என்ற பெருமையை என்றுமே பேணவேண்டும். மத்திய விருட்சம் சாய்ந்துவிடாமல் அதன் விழுதாக நின்று தாங்கவேண்டும்.

மாணவ முதல்வர்கள்
2014-2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்தியின் வித்தகர் ஜேம்ஸ் லிஞ்ச்



**James Lynch**

வணக்கத்திற்குரிய ஜேம்ஸ்லிஞ்ச் அவர்கள் 1775 ஆம் ஆண்டு அளவில் மூவி (Muffy) நாட்டில் பாரிஸ் எனும் இடத்தில் டொனிகல் அயர்லாந்தில் (Donegal Irelan) பிறந்தார். இவர் பிறப்பிலே உரோமன் கத்தோலிக்கராக இருந்தபோதிலும் 1792 ஆம் ஆண்டில் தனது 17ஆவது வயதில் புரட்டஸ்தாந்து மதத்தை தழுவி வெஸ்லியன் மெதடிஸ்த திருச்சபையில் இணைந்து கொண்டார். பின்னர் ஐரிஸ் (Irish) மெதடிஸ்த கொன்பிரன்ஸினால், வணக்கத்திற்குரிய கலாநிதி தோமஸ்குக் அவர்களின் திட்டமிட்ட ஆசிய விஜயத்திற்கு உதவிக்காக செல்கின்ற மிஷனறிமார்களில் ஒருவராக இவர் தெரிவுசெய்யப்பட்டார்.

மெதடிஸ்த திருச்சபையை சேர்ந்த வணக்கத்திற்குரிய ஜேம்ஸ்லிஞ்ஸ் அவர்களும் தோமஸ் குவான்ஸ் அவர்களும் அப்போதைய இலங்கையின் காலிமுகத்திடலில் கடல் மார்க்கமாக 1814 ஆம் ஆண்டு 6 ஆம் மாதம் வந்து இறங்கினார்கள். இதன் பின்னர் வணக்கத்திற்குரிய ஜேம்ஸ் லிஞ்ச் அவர்கள் 1814 ஆம் ஆண்டு 7ஆம் மாதம் 3ம் திகதி காலிகோட்டையிலுள்ள பழைய ஒல்லாந்து தேவாலயத்தில் தனது முதல் பிரசங்கத்தை ஆற்றினார். வெஸ்லியன் மெதடிஸ்த மிஷனறியை சேர்ந்த இவரது பிரசங்கத்தை கேட்பதற்காக கோட்டையை சுற்றியுள்ளவர்கள் தேவாலயத்தில் நிரம்பி இருந்ததாக பதிவுகள் குறிப்பிடுகின்றன.

ஜேம்ஸ்லிஞ்ச், மெஜஸ், பென்சமின் குளோவ், தோமஸ் கோல்குவான்ஸ், வில்லியம் ஆல்ற் மற்றும் ஜோர்ஜ் எஸ்கின் ஆகிய 5 மிஷனறிமார்களும் தமது 1 ஆவது மாவட்டத்தை 11.07.1814 ஆம் ஆண்டு நாடத்தினார்கள். இக்கூட்டத்தை அவர்கள் மகா நாடு என குறிப்பிட்டார்கள். இந்த மிஷனறி மார்களை தரிசிப்பதற்காக அப்போதைய சிலோன் ஆளுநர் ஜென்றல் றொபேட் பிறவுண்றிக் வருகை தந்தார். ஆளுநர் றொபேட் பிறவுண்றிக் இவ் 5 மிஷனறிமார்களுக்கும் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், மாத்தறை போன்ற இடங்களுக்கு பரந்து சென்று அவர்களது சேவையை செய்யுமாறு அறிவுரை கூறினார். மற்றும் ஒருவரை காலியில் தொடர்ந்தும் பணி செய்யுமாறு வேண்டிக் கொண்டார். ஆளுநரின் வேண்டுகோளுக்கிணங்க கலந்துரையாடலின் பின் சீட்டுக் குலுக்கலின் மூலம் ஜேம்ஸ்லிஞ்ச் மற்றும் தேமஸ் குவான்ஸ் ஆகியோர் யாழ்ப்பாணத்திற்கும், ஆல்ற் மட்டக்களப்பிற்கும், எஸ்கின் மாத்தறைக்கும் குளோவ் தொடர்ந்து காலியிலும் இருக்கவேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. பிறிதொரு மிஷனறித் தேவைக்காக மன்னாரை இவர்கள் கருத்தில் கொள்ளாது விட்டனர். 1815 ஆம் ஆண்டிற்கான மிஷனறிப் பதிவு புத்தகம் III ம் பாகத்தில் பதியப்பட்டுள்ளது.

இதன்பின்னர் வணக்கத்திற்குரிய ஜேம்ஸ்லிஞ்ச் அவர்களும் தோமஸ்குவான்ஸ் அவர்களும் யாழ்ப்பாணம் செல்வதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. ஆனால் வணக்கத்திற்குரிய தோமஸ் குவான்ஸ் அவர்களின் உடல்நிலை சீராக இல்லாத நிலையில் இருந்தும் 14.07.1814 வியாழக்கிழமை அன்று தமது பயணத்தை தொடங்கினார்கள். இரண்டு நாட்கள் பயணித்த பின் 16 ஆம் திகதி ஆடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதம் கொழும்பை வந்தடைந்தனர். மீண்டும் அவர்கள் 1814ம் ஆண்டு ஆவணி மாதம் 1ம் திகதி கொழும்பை விட்டு யாழ்ப்பாணம் நோக்கி தமது பயணத்தை ஆரம்பித்தனர். 10 நாட்கள் பயணத்தின் பின் இவர்கள் இருவரும் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தனர்.

1814ம் ஆண்டு 31ம் திகதி ஞாயிற்றுக் கிழமை வணக்கத்திற்குரிய எஸ்கின் அவர்கள் மாத்தறை செல்வதற்கென புறப்பட்டார். மகா முதலியார் இலங்ககோன் அவர்கள் அங்கே பாடசாலை அமைப்பதற்கு இவருக்கு உதவினார். மெதடிஸ்த மிஷனால சிலோனில் ஆரம்பிக்கப்பட்ட இரண்டாவது பாடசாலை இதுவாகும். எஸ்கின் மாத்தறை வந்தடைந்த மறுநாள் இப்பாடசாலை ஆரம்பிக்கப் பட்டது 1814 ஆம் ஆண்டு ஆவணி 8 ஆம் திகதி திங்கட்கிழமை மிஸ்ரர் ஆல்ற் அவர்கள் படகின்மூலம் மட்டக்களப்பு புறப்பட்டார். ஒரு சில நாட்கள் கழிந்த பின் ஒரு அறையிலே பாடசாலை ஒன்றை ஆரம்பித்தார். ஏனெனில் அவர் பொருத்தமான இடத்தை தெரிவுசெய்வதில் பல இன்னல்களைச் சந்தித்தார். இப்பாடசாலை சிலோனில் மிஷனறியால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையில் 3வது பாடசாலை ஆகும்.


Rev. Benjamin Clough

வணக்கத்திற்குரிய ஜேம்ஸ்லிஞ்ச் அவர்களின் 17.08.1815 திகதியிட்ட கடிதத்தின்படி தாம் ஒரு காணி நிலத்தை கொள்வனவு செய்துள்ளதாகவும், அங்கு 60 இற்கு மேற்பட்ட ஆண்பிள்ளைகள் ஆங்கிலத்தை கற்கின்றதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

15.11.1815 திகதியிடப்பட்ட "என்னுடைய பாடசாலை" என தலைப்பிட்ட கடிதத்தில் என்னுடைய பாடசாலை இப்பொழுது பெரியது என்றும் அநேகமான ஆண்பிள்ளைகள் போரத்துக்கீசம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளை எழுத வாசிக்கப் பேசத் தெரிந்தவர்களாக இருக்கிறார்கள் என்றும் பெற்றோர் தமது ஆண்பிள்ளைகளை ஆசிரியர்களாகவும் கிராமத் தலைவர்களாகவும் உருவாக்குவதற்கே என்னிடம் ஒப்படைக்கின்றார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

லிஞ்ச் அவர்களின் பாடசாலையையும், மாணவர்களின் எண்ணிக்கையையும் அந்நாளில் தேசாதிபதியாக இருந்த றொபேட் பிறவுண்றிக் அவர்கள் 11.12.1815 திகதியிட்ட கடிதம் மற்றும் அறிக்கை மூலம் உறுதிப் படுத்துகின்றார்.

பாடசாலையின் பயனை அவதானித்து லிஞ்ச் அவர்கள் மேலும் பல பாடசாலைகளை நிறுவுவதற்காக 1816 சித்திரை மாதம் இங்கிலாந்தில் இருந்த தலைமையகத்திற்கு அனுமதிகோரி கடிதம் ஒன்றை அனுப்பினார். தலைமைப்பீடம் அனுமதி வழங்கியதும் 21.08.1816 இல் கொள்வனவு செய்யப்பட்ட காணி நிலத்திற்கான உறுதி கொழும்பில் எழுதப்பட்டது. இத்தினமே இப்பாடசாலையின் ஆரம்ப நாளாக கருதப்பட்டது.

ஆனால் குறிப்பிட்ட ஆண்பிள்ளைகளைக் கொண்டு கல்வியகம் 1815 நடுப் பகுதியிலே லிஸ்ச் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு விட்டது. இதன் பெயர் "ஆங்கிலப்பாடசாலை" என்று இருந்தது. 01.08.1816 இலிருந்து "யாழ்ப்பாணம் வெஸ்லியன் ஆங்கிலப்பாடசாலை" ஆக மாற்றம் பெற்றது.

1816 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 1ம் திகதி லிஞ்ச் பாதிரியார் அவர்கள் வெஸ்லியன் மிஷனறியின் கல்விக்கொள்கையில் ஓர் அங்கமாக எக்ஸ்பிளேனேட் (Esplanade)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இற்கு எதிராக இருந்த லிதோரோன் சேர்ச்சையும் அரசிடம் இருந்து உத்தியோக பூர்வமாக பெற்று, அவ்விடத்தில் யாழ்ப்பாண வெஸ்லியன் ஆங்கிலப் பாடசாலை என அழைக்கப்பட்ட தற்போதய யாழ்ப்பாணம் மத்தியகல்லூரியை ஸ்தாபித்தார். 1819 ஆம் ஆண்டு வரை வணக்கத்திற்குரிய பாதிரியார் லிஞ்ச் அவர்களின் நேரடி கண்காணிப்பிலேயே இப்பாடசாலை இயங்கி வந்தது. இவருக்கு உறுதுணையாக தோமஸ் குயான்ஸ் பாதிரியாரும் கார்வர் பாதிரியாரும் விளங்கினார்கள்.

வணக்கத்திற்குரிய ஜேம்ஸ்லிஞ்ச் அவர்களிற்கு 1815 இன் ஆரம்பத்தில் மெட்ராசில் பணிபுரிவதற்கு ஒரு மிஷனறி தேவை என்ற வேண்டுகோள் கிடைத்தது. 1817 இற்கு முன்னதாகவே இலங்கையிலுள்ள மிஷனறியினர் ஒரு மிஷனறிமாரை மெட்ராசுக்கு அனுப்பவேண்டுமென்ற தேவையை உணர்ந்து கெண்டார்கள். இந்த அவசியத் தன்மை வலுப்பெற இறுதியில் லிஞ்ச் அவர்கள் மெட்ராசுக்கு அனுப்பப்பட்டார். மெட்ராசிலே முதல் மிஷனறியை ஸ்தாபித்து தனது மதப்பிரசங்கத்தை ஆற்றினார். 1817 மார்ச் மாதம் 2ம் திகதி பிளக்ரவுனில் (யோஜ் ரவுன்) வெயாஹவுசில் தமது முதல் போதனையை ஆற்றினார். 1822 இலே இந்த இடமானது ஒரு மெதடிஸ்த தேவாலயமாக மாறியது. லிஞ்சிடம் தமிழ்மொழி அறிவில்லாததால் அவரது செயற்பாடுகளெல்லாம் ஐரோப்பிய வம்சா வழியினரை மையமாக வைத்தே முன்னெடுக்கப்பட வேண்டி இருந்தது.

1819ஆண்டு மார்ச் மாதம் லிஞ்ச் அவர்கள் முதல் மெதடிஸ்த தேவாலயத்தை இந்திய மண்ணில் (இராஜப்பெற்றாவில்) அமைத்தார். அதே ஆண்டில் தமிழ் மாவட்டத்தின் அத்தியேட்சகராகவும் பதவி ஏற்றார். இந்த அத்தியேட்சகர் பதவியானது, இலங்கையின் வடபகுதியிலும் இந்தியாவின் தென்பகுதியிலும் மிஷனறியின் பணிகளையும் உள்ளடக்கி இருந்தது.

1820 இலே நாகப்பட்டின மிஷனறி பணி ஆரம்பிக்கப்பட்டது. அதே ஆண்டின் பிற்பகுதியில பெங்களூரிலும் திருச்சிராப்பள்ளியிலும் மிஷனறிப்பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டது. 1817 இலே நிதிசார் சவால்கள் ஆரம்பித்தது. 1821 ஆம் ஆண்டளவில் நிதிப்பிரச்சனை உச்சத்தை எட்டியது. இதனால் லண்டனில் உள்ள திருச்சபைக் குழு லிஞ்ச் அவர்களை அந்தப் பணியில் இருந்து இடைநிறுத்த தீர்மானித்தது. லிஞ்ச் அவர்கள் தமது பதவி விலகல் கடிதத்தை கொடுத்திருந்தபோதும் தேவாலயக் கவுன்சில் அவர் தொடர்ந்து தனது பணியில் ஈடுபட வேண்டும் என்று வலியுறுத்தி அவருக்கு பூரண ஆதரவு வழங்கியது. 1824 ஆம் ஆண்டளவில் மிஷனெறிக் கொமிற்றியின் லிஞ்ச் மீதான விமர்சனங்களும் எதிர்மறை மனப்பாங்கும் குறைவடையத தொடங்கியது. எனினும் அவர் யூலை மாதம் மெட்ராசை விட்டு புறப்பட்டார். அவருடைய அனுபவங்களும் உடல் ஆரோக்கியமின்மையும் அவரை மெட்ராசை விட்டு வெளியேற நிர்ப்பந்தித்தது. அவர் மெட்ராசைவிட்டு புறப்பட்டு சிறிது காலத்திலேயே தமிழ் மாவட்டம் 2 ஆக பிளவுபட்டது. பிளவின் பின்னர் ஒரு மாவட்டம் மெட்ராசை மையமாக வைத்தும் மற்றைய மாவட்டம் யாழ்ப்பாணத்தை மையமாக வைத்தும் செயற்படத் தொடங்கியது.

வணக்கத்திற்குரிய ஜேம்ஸ்லிஞ்ச் அவர்கள் மெட்ராசிற்கு சென்றபின்னர் யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி 1817-1819 வரை தேமஸ்குயான்ஸ் அவர்களின் கண்காணிப்பிலும் 1819-1824 வரை றொபேர்ட் கார்வர் அவர்களின் கண்காணிப்பிலும், செயற்பட்டது. 1824 இல் லிஞ்ச் பாதியார் தலைவர் பதவியில் இருந்து ஓய்வுபெற்றார். அவரைத் தொடர்ந்து ஜோசேப் றொசேப் பதவியுயர்வு பெற்றார். திருமாணிக்கவாசகர் அவர்களால் எமது பாடசாலை தொடர்பாக வெளியிடப்பட்ட ஞாபக ஏட்டில் எழுதப்பட்ட கட்டுரையின் பொழிப்பை வாசித்து அறிவது மிகவும் சாலப் பொருத்தமாகும். அவையாவன மிஷனறியின் செயற்பாடுகள் தொடர்பாக அன்றைய அரசுடன் தாராளமாக நடந்துகொண்டு ஜேம்ஸ்லிஞ்ச் பாதிரியார் தினமும 80 ஆலயங்களுக்கு பாடம் புகட்டி இருந்தார். சுருங்கக்கூறின் யாழ்ப்பணத்தில் போர்த்துக்கேய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரின் இராச்சியத்திற்கு முன்னைய இராச தானியாக விளங்கிய இடத்தில் மிகவும் பழைமை வாய்ந்த பாடசாலையாக யாழ்ப் பாணம் மத்திய கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டது. முதலிலேயே வணக்கத்திற்குரிய லிஞ்ச் அவர் களால் ஆங்கிலப் பாடசாலையாக இது ஸ்தாபிக்கப்பட்டது. 1817 இல் யாழ்ப்பாண வெஸ்லியன் ஆங்கிலப்பாடசாலை எனப்பெய ரிடப்பட்டது. மீண்டும் 1834 இல் பாதிரியார் பீற்றர் பேர்சிவல் அவர்களால் "யாழ்ப்பாணம் மத்திய பாடசாலை" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. பின்னர் 1869 இல் "யாழ்ப் பாணம் மத்திய கல்லூரி" எனத் தரம் உயர்த் தப்பட்டது. இப்பாடசாலை சிலோனில் மிஷானறியால் ஆரம்பிக்கப்பட்ட 4 வது பாட சாலையாகும்

வணக்கத்திற்குரிய ஜேம்ஸ்லிஞ்ச் அவர்கள் மெட்ராசை விட்டு வெளியேறிய பின் தனது சொந்தநாடான அயர்லாந்திற்கு திரும்பினார். இதன் பின்னர் உடல் நலமின் மையால் தனது மிஷனெறிச் செயற்பாடு களைக் குறைத்துக்கொண்ட இவர் 1845 ஆம் ஆண்டு லீட்சில் என்னும் நகரில் குடியே றினார். அங்கே 1858 ஆம் ஆண்டு மார்ச் 21 ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார்.

பாதிரியார் லிஞ்ச் அவர்கள் யாழ்ப் பாணத்தின் பாரம்பரிய சொத்தாக விளங்கிய வரும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியை உருவாக்கி ஆங்கில கல்வியை வளர்க்க முயன்ற பெருந்தகை ஆவார். இவ்வாறு இவர் செய்த உயரிய பணிக்காக இவரை கௌரவிக்கும் பொருட்டு மெய்வல்லுனர் இல்லம் ஒன்றிற்கும், பாடசாலை விடுதி ஒன் றிற்கும் இவரது பெயர் சூட்டப்பட்டு இன்றும் இவரது பெயரை நினைவு கூர்ந்து கொண்டி ருக்கின்றது யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி. அத்துடன் 18.09.2013 அன்று கலைமாமணி சிவப்பிரகாசம் அவர்களால் வடிவமைக்கப் பட்ட லிஞ்ச் அவர்களின் ஞாபகார்த்த உரு வச்சிலையானது வண.A.W.ஜெபனேசன் மற்றும் யாழ்ப்பாண மத்திய கல்லூரியின் அதிபர்S.K எழில் வேந்தன் ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது.


க.கபில்ராஜ்
மாணவ முதல்வன் 2014-2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

## அன்றிலிருந்து 2000 வரை



1813 ஆம் ஆண்டு லிவப்பூர் நகரில் நடைபெற்ற வெஸ்லியன் மகாநாட்டின் தீர்மானத்திற்கமைய வண டாக்டர் தொமஸ்குக் தலைமையில் மேற்கொண்ட யாத்திரையில், ஐந்து மிஷனரிமார் 29.06.1814 இல் காலித் துறைமுகத்தை வந்தடைந்தனர். இவர்களில் Rev. James Lynch, Rev. Thomas Sequence ஆகியோர் யாழ்ப்பாணம் வந்து தமிழை கற்றனர். 01.08.1816 இல் Rev. James Lynch அவர்கள் முற்றவெளிக்கு முன்னாலிருந்த அந்தநாள் அனாதைகள் இல்லத்தையும், லூதர் திருச்சபையும் அரசாங்கத்திடமிருந்து 646 டாலர்களுக்கு வாங்கினார். "**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**" என திகழும் இக்கல்வியகம் அன்று 1817 இல் இவ்விடத்தில் "**யாழ்ப்பாணம் வெஸ்லியன் ஆங்கிலப் பாடசாலை**" என்ற பெயருடன் நிறுவப்பட்டது. இப்பொழுது உள்ள வேம்படிப் பெண்கள் பாடசாலை, மிஷன் விடுதி ஆகியவற்றின் நிலங்கள் மெதடிஸ்ற் சபையினால் 1823 இல் வாங்கப்பட்டதைத் தொடர்ந்து சிறிது காலம், தற்பொழுது வேம்படிப் பாடசாலையின் வகுப்பறைகளாயிருக்கும் அந்நாளைய மிஷன் விடுதிக்கு மாற்றப்பட்டிருந்தது. இக்காலத்தில் மெதடிஸ்தசபையின் தலைவராயிருந்த Rev. Joseph Roberts அவர்கள் இடையூறுகளிடையே பாடசாலையை நடத்த வேண்டியதாயிற்று. ஆயினும் இந்நிலை நெடுங்காலம் நீடிக்கவில்லை.

1834 இல் Rev. Joseph Roberts பின்னர் Rev. Dr. Peter Percival அவர்கள் நியமனம் பெற்றார். இவர் ஒரு சிறந்த கல்வியாளர். கர்ம வீரர். வெஸ்லியன் பாடசாலையை புனரருத்தாரணம் செய்து "யாழ்ப்பாணம் மத்திய பாடசாலை" என பெயரிட்டார். Rev. Dr. Peter Percival அவர்களே யாழ். மத்திய கல்லூரியின் ஸ்தாபாகரும், முதல் அதிபருமாவார். பாடசாலையிற் சுமார் 250 மாணவர்கள் கல்வி பயின்றனர். தேசாதிபதியாயிருந்த கௌரவ ஸே.ஏ.ஸ்ருவாட் மக்கென்ஸி அவர்கள் 1839 இல் பாடசாலையின் மானியமாக 150 பவுண்கள் வழங்கினார். இக் காலத்தில் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கிய பலர் யாழ். மத்திய கல்லூரியில் படித்துத் தேறினர். ஶ்ரீலஶ்ரீ ஆறுமுகநாவலர், சாமுவேல் கிறெனியர், ஹென்றி பிரான்ஸிஸ் முத்துக்கிருஷ்ணன், ரி.செல்வப்பிள்ளை, ஜீ.எஸ்.அரியநாயகம்பிள்ளை, மோகன் கொவிங்டன், பி.றொக்வூட் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். 1851 இல் Rev. Dr. Peter Percival பதவியிலிருந்து ஓய்வு பெற்றதும் வண. ஆர். கிறிபித்ஸ் நியமனம் பெற்றார். மத்திய பாடசாலைக்கு மாணவர்களைத் தயாரிப்பதற்காக வண்ணார் பண்ணை ஆங்கிலப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. இது பின்னர் இடம் மாற்றபட்டு "கில்னர் கல்லூரி" எனப் பெயரிடப்பட்டது. வேறு பாடசாலைகளும் சபைத் தலைவரும், பாடசாலை அதிபருமானார்.

மத்திய பாடசாலையின் ஆரம்பப்பிரிவொன்று ஆரம்பிக்கப்பட்டது. Rev. Dr. Peter Percival அவர்களால் தொடங்கப்பட்ட மாணவர் விடுதி இப்பொழுதுள்ள பிரதம கட்டிடத்தில் 1854 இல் திருத்தியமைக்கப்பட்டது. கல்லூரியின் முதலாவது முழுநேர அதிபராக Rev. William Barber 1855 இல் நியமிக்கப்பட்டார். பிரவுண் சின்னதம்பி பாடசாலையின் முதலாவது தலைமை ஆசிரியராக்கப்பட்டார். விரைவில் இவர் விலகிடவே சாமுவேல் கிறெனியர் தலைமை ஆசிரியரானார் (1855-1869). 1860 இல் கணித மேதை வில்லியம் நெவின்ஸ் தலைமை ஆசிரியர் பதவியிலிருந்தார். பாடசாலை கல்வி தரத்திலும், ஆசிரியர் திறத்திலும் முன்னேறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில் Rev. William Talbot, Rev. John Mitchell, Rev. John O Rhodes ஆகியோர் முறையே அதிபர் பதவியை வகித்தனர். அதிபர் Rev. John Mitchell மாணவர்களால் மிகவும் நேசிக்கப்பட்டார். எதிர்பாராத விதமாக அவர் மரணமடைந்த போதிலும் ஆசிரியர்களாயிருந்த பிலிப்தர், ஜெருமையா இவாட்ஸ், லைமன், றொபட் லெம்றுஜென், ஜோன் கொச் ஆகியோர் மத்திய பாடசாலையைத் திறமையுடன் வழிநடத்தினர்.

1870 ஆம் ஆண்டு சகாப்தம் ஆரம்பமானது. இந்தநாள் வரை "வெஸ்லியன் மெதடிஸ்ற் ஆங்கிலப் பாடசாலை" ஆக இருந்த இக்கல்வியகம் யாழ்ப்பானம் மத்திய கல்லூரியாக மலர்ச்சி பெற்றது. சென்னை சர்வகலாசாலையின் பரீட்சைகளுக்கு மாணவர்களைத் தோற்றுவித்து, அதில் நல்ல சித்தியும் கண்டது. 1870 இல் Rev. John O Rhodes தற்காலிகமாக விலகியதால் Rev. Daniel Poor Niles அவர்கள் கல்லூரியின் சுதேச பதில் அதிபரானார். சபைத்தலைவர் வண. எட்மண்டறிக் இவருக்கு உதவியாக இருந்தார். கல்வியின் தரத்தை நிலைநாட்டும் பொருட்டு மேலும் புதிய ஆசிரியர்கள் சேர்க்கப்பட்டனர். இடவசதியும் கூட்டப்பட்டது. பரீட்சை முடிவுகளும் பாராட்டதக்கனவாக இருந்தன. கல்வித் துறையில் முன்னேற்றம் கண்டபோதிலும், பிற பாடசாலைகள் தோன்றிப் போட்டியை உண்டாக்கின. Rev. D. P. Niles அவர்கள் மிஷனரித் தொண்டினை மேற்கொள்ளும் பொருட்டு 1878 இல் கல்லூரியை விட்டு விலகினார். கல்வியகம் தொடர்ந்து முன்னேறியது. கேம்பிரிட்ச் சர்வகசாலையின் பரீட்சைகளை மேற்கொள்ளும் படி அரசினர் கேட்டுக் கொண்டபோதிலும் நிர்வாகத்தினர் சென்னை சர்வகலாசாலையின் பரீட்சைகளுக்கே மாணவர்களைக் கற்பித்து வந்தனர். இதனால் மாணவர் எண்ணிக்கை மேலும் கூடியது. இலக்கிய கழகமும், கிறிஸ்தவ வாலிபர் கழகமும் ஆரம்பிக்கப்பட்டன. தேசிய விளையாட்டுப் போட்டிகளும் இடம்பெற்றன. 1881 இல் அதிபராயிருந்த Rev. Fredrick M Webster துடுப்பாட்டத்தினை முதன் முதலாகக் கல்லூரியில் ஆரம்பித்து யாழ்ப்பாணத்திற்கு அறிமுகஞ் செய்துவைத்தார். இதற்கிடைப்பட்ட காலத்தில் வண.சாமுவேல் அர். வில்கின், வண.வில்லியம், ஆர்.வின்ஸ்ரன், திரு.எட்வேட்ஸ்ரூட் ஆகியோர் முறையே அதிபர் பதவியை வகித்தனர்.

புதிய அம்சங்கள் தோன்றியபோதிலும் இடையூறுகளும் தலைகாட்டின. Rev. Thomas Little, Rev. William J C Bestall, Rev. Joseph West, Rev. A E Restarick ஆகியோர் அதிபர்களாயிருந்த பின், Rev. D. P. Niles அவர்கள் மீண்டும் பதவியை ஏற்றார். 1889 ஆம் ஆண்டில் சென்னை சர்வகலாசாலையின் தேர்வுப்பரீட்சை, எவ்.ஏ.பரீட்சைகளுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து மாணவர்களைக் கற்பித்த ஒரே கல்லூரியாக யாழ்.மத்திய கல்லூரி பெருமை பெற்றது. ஏற்கனவே எட்டு வருடங்கள் தலைமை ஆசிரியராகவும், ஒன்பது வருடங்கள் உப அதிபராகவும் கடமையாற்றிய வண. நைல்ஸ் அவர்கள் 1898 இல் கல்லூரியை விட்டு விலகினார். பின்னர் Rev. Sheldon Knapp, Rev. R. Middleton Weaver, Rev. W T Garret ஆகியோர் அதிபர் பதவியை வகித்தார்கள். 1894 இல் Rev. Gabriel Leese அவர்கள் உதை பந்தாட்ட விளையாட்டினைக் கல்லூரியில் ஆரம்பித்து யாழ்ப்பாணத்திற்கு அறிமுகஞ் செய்துவைத்தார்கள். அதே ஆண்டில் திரு.ஜே.கே.சண்முகம் தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டார். 1896 இல் Rev. W T Garret மீண்டும் கல்லூரியிற் சேர்ந்தார். கல்லூரி கல்கத்தா சர்வகலாசாலையில் பரீட்சைகளுக்காகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. கல்லூரிக்கான விளையாட்டுப் போட்டியில் ஜிம்கானா வெற்றிக் கிண்ணத்தை முதன்முறையாக 1898 இல் மத்திய கல்லூரி பெற்று கொண்டதோடு 1900 ஆம் ஆண்டில் அவ்வெற்றிக் கிண்ணத்தை நிரந்தரமாகவே சுவீகரித்துக் கொண்டது.

1899 இல் Rev. George B Robson அவர்களும் பின்னர் Rev. E C Martin, Rev. Arthur Lockwood, Rev. W T Garret ஆகியோரும் அதிபர்களாயிருந்த பின் 1903 இல் Rev. W M P Wilkes அதிபரானதும் மத்திய கல்லூரியின் வரலாற்றில் ஒரு புதிய திருப்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்டது. அதிபர் Rev. Wilkes, பிரதி அதிபர்கள் Mr. W. Romaine Cooke, Mr. J. K. Chanmukam ஆகிய மூவரும் பதின்மூன்று ஆண்டுகளாகக் கல்லூரியில் கண்ணும் கருத்துமாகக் கடமையாற்றினார். "The Central" எனப் பெயர் கொண்ட சஞ்சிகையின் முதல் இதழ் 1904 இல் வெளியிடப்பட்டது. யாழ்.மத்திய கல்லூரியை கல்வியிலும், கலைகளிலும், விளையாட்டுப் போட்டிகளிலும் பெருமைகள் பெற்று, வட பகுதியின் முன்னோடியான கல்வியகமாக்கிய பெருமை இம்மூவரையுமே சாரும். இவர்கள் காலத்தில் ஆசிரியர்களாயிருந்த L.P.ஸ்பென்சர், W.தம்பர், E.S றிப்ளி, H.C.சம்பியன் முதலானவர்களும் திறமை மிக்கவர்களாயிருந்தனர். கிரிக்கெட், உதை பந்தாட்டம், உடற்பயிற்சி விளையாட்டுக்கள் சங்கீதப் பயிற்சி முதலியனவும் பாட நேரங்களின் பின் பயிற்றுவிக்கப்பட்டன.

1904 இல் அரசாங்கம் சென்னை சர்வ கலாசாலைப் பரீட்சைகளைத் தடைசெய்து, இலண்டன், கேம்பிட்ச் சர்வகலாசாலைகளின் பரீட்சைகளைப் புகுத்தியது. மத்திய கல்லூரியும் வேறு வழியின்றி இத்திட்டத்தை ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று. தேசாதிபதியாயிருந்த சேர் ஹென்றிபிளேக் அவர்கள் பாடசாலைக்கு விஜயம் செய்து 1905இல் கல்லூரியின் வளர்ச்சியையும், முயற்சியையும் பாராட்டினார். பத்து ஆண்டுகளின் பின் தேசாதிபதியாயிருந்த சேர்.றோபேட் சால்மேர்ஸ் தமது பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் 28.12.1906 இல் உருவாக்கப்பட்டது. கல்லூரி அதிபர் இதன் நிரந்தரத் தலைவர், பல துறைகளில் மேன்மை பெற்று விளங்கிய பழைய மாணவர்கள் உப தலைவர்களாக விருந்து சிறப்பித்தனர். முன்னாள் பிரதம நீதியரசராயிருந்த கௌரவ யோசெப் கிறெனியர் சங்கத்தின் ஆரம்ப கால உபதலைவர்களில் ஒருவராயிருந்தார். கலாயோகி ஆனந்த குமாரசுவாமி அவர்கள் 12.06.1906 இல் கல்லூரிக்கு வருகை புரிந்து இங்கு தமிழ்மொழி, தமிழிலக்கியம் இவையிரண்டிற்கும் உரிய இடம் கொடுக்கப்பட்டிருந்ததையும் பிற கல்லூரிகளில் இவை ஒதுக்கப்பட்டிருந்ததையும் சுட்டிக்காட்டிக் குறிப்புப் புத்தகத்தில் எழுதினார். வண.எச்.ஏ. மீக் அதிபராயிருந்த 1908 ஆம் ஆண்டில் கல்லூரி கூட்ட மண்டபத்தின் அடித்தளக்கல் நாட்டப்பட்டது. வண.உவில்க்ஸ் மீண்டும் அதிபரானதும், 1910 இல் திருமதி.ஸி.ரி.றிமர் அவர்களால் மண்டபம் திறந்து வைக்கப்பட்டது. விஞ்ஞான உபகரணங்கள் வாங்கப்பட்டன. பல துறைகளிலும் கல்லூரி வளர்ச்சியுற்றது. அரசாங்கம் வழங்கிய உதவிப் பணமும் அதிகரித்தது. கேம்பிறிட்ச் சர்வகசாலையின் கனிஷ்ட, சிரேஷ்ட பரீட்சை முடிவுகளில் யாழ்ப்பாணத்தில் மத்திய கல்லூரி முதலிடத்தைப் பெற்று விளங்கியது. கொழும்பு மாநகரில் பழைய மாணவர் சங்கம் 1913 இல் ஆரம்பிக்கப்பட்டது.

1916 இல் வண.உவில்க்ஸ் இளைப்பாறியதும் வண.ஈ.ரி. செல்வி சிறிது காலம் பதில் அதிபராயிருந்தார். கல்லூரியின் முதலாவது சாரணர் இயக்கம் தோன்றியது. 1917இல் ஹரல்ட்புள்ளோ அதிபரானதும் மறுமலர்ச்சி சகாப்தம் உண்டானது. ஏற்கனவே வண.உவில்க்ஸ் அவர்களால் உண்டாக்கப்பட்ட உயர் நிலையை வண.புள்ளோ வலுப்படுத்தி விஸ்தரித்தார். இவர் காலத்தில் உதவி அதிபராயிருந்த றொமெயின்குக் அவர்கள் திறமை மிகுந்தவர். இவர் கல்லூரியின் மகுடத்தை (Crest) வடிவமைத்து, மகுட வாசகத்தையும் தேர்ந்தெடுத்தார். றொமெயின்குக் அவர்களே றொமெயின் மண்டபத்தின் சிற்பியுமாவார். இது யாழ்ப்பாணத்திலுள்ள மிகப் பழமையான கட்டிடமாகும். 1910 ஆம் ஆண்டளவில் இது திறந்துவைக்கப்பட்டது. றொமெயின்குக் ஒரு கட்டிடக் கலைஞரும் கூட, கல்லூரியிலும் ஏனைய மெதடிஸ்த இடங்களிலும் காணப்படும் பழைமை வாய்ந்த கட்டிடங்களிற் பல அவரது கைவண்ணம் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் பௌதீக, இரசாயனவியல் பாடங்களில் பெரும் விருப்புடையவராயிருந்தார். கழகமொன்றை அமைத்தார். ஒழுங்கு முறையையும் கட்டுப்பாட்டையும் நிலை நிறுத்துவதில் சமர்த்தர். தாவர, விலங்கு, உயிரியற் பாடங்கள் புள்ளோ அவர்களால் ஆரம்பிக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டன. இதனால் கல்லூரியின் மதிப்பு மக்களிடையே பெருகலாயிற்று. இக்காலத்திலேயே திருச்சபையின் பின்னாலுள்ள பேர்சிவல் மண்டபம் கட்டப்பட்டது. கல்லூரியின் 1917 ஆம் ஆண்டு கிரிக்கெட் போட்டி மற்றெல்லா வருடங்களிலும் பார்க்க மிகவும் திறமை வாய்ந்ததெனவும், பந்தினை அடிப்பதில் ஐ.ராசநாயகம், ஐ.ஏ.அலெக்ஸ் சாண்டர், வி.வி.நடராசா, சி.நவரத்தினம், எஸ்.சி.அழகரத்தினம் ஆகியோர் திறமை மிக்கவர்களென்றும் ஏ,கனகராஜா, கனகரத்தினம், ஏ.பி.செல்வரத்தினம் நுட்பமான பந்து வீச்சாளர்கள் என்றும் கல்ஷரியின் நூற்றாண்டு மலர் கூறுகிறது. திரு.க.நவரத்தினம் அவர்களை ஆசிரியராகக் கொண்ட வர்த்தக வகுப்புகள் 1920 இல் ஆரம்பிக்கப்பட்டன. இவர் காலத்திலும் கேம்பிரிட்ச் சர்வகலா சாலையின் கனிஷ்ட, சிரேஷ்ட பரீட்சைகளுக்கும் இலண்டன் சர்வகலாசாலையின் மற்றிக் பரீட்சைக்கும் மத்திய கல்லூரி மாணவர்களைக் கற்பித்து, அதில் பெரு வெற்றியும் ஈட்டியது.

1919 இல் மாட்சிமை தங்கிய சேர் வில்லியம் மானிங் அவர்கள் கல்லூரிக்கு விஜயம் செய்து முன்னேற்றத்தைக் கண்டு பாராட்டினர். மத்தியகல்லூரியின் பழைய மாணவர்கள் பலர் பாராட்டத்தக்க நிலையிருந்தார்கள். 1921 இல் வண.புள்ளோ அவர்கள் ஓய்வு பெற்றதும் வண.பேஸி ரி.காஷ் அதிபரானர். இவர் இலண்டன் சர்வகலாசாலையின் இடைநிலைப் பரீட்சைககான வகுப்புகளைக் கல்லூரியிற் தொடக்கி வைத்தார். மத்திய கல்லூரியிலிருந்து இப் பரீட்சையில் சித்தியடைந்த முதல் இரண்டு மாணவர்களில் ஒருவர் திரு.ஏ.ஈ .தம்பர் அவர்கள். இவ்வகுப்புக்களுக்கு அரசாங்க மானிய உதவி இல்லாததால் இப்பரீட்சை நிறுத்தப்பட்டது. பி.ரி.காஷ் அவர்கள் காலத்தில் முக்கியமாகப் புவியியற் பகுதி வளர்ச்சியடைந்தது. கைத்தொழிற் பகுதி, ஓவிய, இசைப்பகுதிகள் புதிதாகச் சேர்க்கப்பட்டன. பௌதீகம், உயிரியல், வர்த்தகம் முதலிய பாடங்களைக் கற்பிப்பதற்கு விஸ்தீரணமான அறைகளைக் கொண்ட ஒரு கட்டிடம் திட்டமிடப்பட்டது. கிரிக்கெட், உதைபந்தாட்டம், சாரணர் இயக்கம், விளையாட்டுப் போட்டிகள் சிறப்பெய்தின. மாணவர்கள் இல்லங்களாகப் பிரிந்து போட்டிகளிற் கலந்து கொள்ளும் முறையை வண.காஷ் அவர்கள் உண்டாக்கினார். தமிழ்க் கழகமும் 1923 இல் ஆசிரியர் கழகமும் 1925 இல் ஆரம்பிக்கப்பட்டன. எல்லா வகுப்புகளிலும் தமிழ் கட்டாய பாடமாக்கப்பட்டது. சுருங்கக் கூறின் சகல துறைகளிலும் மத்திய கல்லூரி மேலோங்கி நின்றது. சேர்.வில்லியம் மானிங் அவர்கள் மீண்டும் வருகைபுரிந்து தனது பாராட்டுக்களைக் குறிப்புப் புத்தகத்தில் எழுதினார். 1926 இல் தேசாதிபதி சேர்.ஹக் கிளி போர்ட் அவர்கள் இப்பொழுதுள்ள காஷ்கட்டிடத்தைத் திறந்து வைத்தார்.

காந்தியடிகள் 27.11.1927 இல் கல்லூரிக்கு விஜயம் செய்து அன்பையும், ஆத்மீகத்தையும் விளக்கி அறிவுரை வழங்கினார்கள். அதிபர் காஷ் 1927 இல் தாயகம் சென்று வந்தார். விஞ்ஞான பாட, கணித ஆசிரியராக திரு.ஏ.ஈ .தம்பர் 1927 இல் நியமிக்கப்பட்டார். இக்காலத்தில் மத்திய கல்லூரியின் நிர்வாகம் திரு.கே.சண்முகம் அவர்களது பொறுப்பிலிருந்தது. இவர் பல துறைகளிலும் திறமைமிக்கவர். இவர் பதவியிலிருந்த 35 வருட காலத்தில் யாழ் மத்திய கல்லூரியையும் யாழ் நகரையும் ஆட்கொண்டிருந்தார். கல்லூரியின் வளர்ச்சியில் கண்ணும் கருந்துமாக உழைத்த இப்பெருமகன் 1929 இல் ஓய்வு பெற்றதும், தலைமையாசிரியராகயிருந்த திரு.ஜே.டபிள்யூ. அருட்பிரகாசம் உப அதிபராயிருந்தார். மேலும் 1931 இல் மாணவ விடுதியின் புதிய கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது. பிரதம நீதியரசராயிருந்த கௌரவ பி.ஜே.மக்டொல் கல்லூரிக்கு விஜயம் செய்தார்.

“ஒருக்கால் மத்திய கல்லூரி மாணவன் பலகாலும் மத்திய கல்லூரியினவனே” என்ற வழிமொழிக்கினங்க மலாயா நாட்டிலிருந்து பழைய மாணவர்கள் ஒன்றுகூடி “மலாயா வாழ் மத்திய கல்லூரிப் பழைய மாணவர் சங்கம்” ஒன்றை 1932 இல் அமைத்தனர். தாயகம் சென்றிருந்த காஷ் அவர்கள் நாடு திரும்பியதும் யாழ்ப்பாண மத்திய கல்லூரியின் நூற்றாண்டு விழா 1934 ஆம் வருடம் ஜுன் மாதத்தில் மிக விமரிசையாக கொண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாடப்பட்டது. 1934 இல் பரிசளிப்பு வைபவத்தில் அப்போது உள்ளூராட்சி அமைச்சராயிருந்த சேர்.பி.பி.ஜெயத்திலக தலைமை தாங்கினார். இந்நாட்டின் பிரமுகர்கள் பலரை யாழ். மத்திய கல்லூரி அளித்துள்ளதெனில் அது மிகையன்று. யாழ்.மத்திய கல்லூரியின் முன்னோடிகளில் ஒருவராயிருந்த திரு.பிலிப் தம்பரின் புதல்வரான திரு.ஜொர்ஜ் வாஷிங்டன் தம்பர் அவர்கள் 35 ஆண்டுகளாக நல்லாசிரியராயிருந்தார். யாழ்.மத்திய கல்லூரியில் அவர் அன்று வகித்த இடத்தை பின்னர் இவர் புதல்வரான திரு.அல்பிரட் எட்வேட் தம்பர் அவர்கள் வகித்தார். ஒரு நூறு வருடங்கள் கல்விக்கும் கடவுளுக்கும் தொண்டாற்றிய பூரிப்புடன் யாழ்.மத்திய கல்லூரித் தாய் தொடர்ந்து எழில் நடை போடுகிறாள். வண.காஷ் அவர்கள் தாயகம் சென்றிருந்த வருடங்களில் திரு.ஜே.கே.சண்முகம், திரு.ஆர்.ஜே.சீல் ஆகியோர் பதில் அதிபர்களாகக் கடமையாற்றினார். காஷ் அவர்கள் தலைமையில் கல்லூரி ஏற்றங்கள் பெற்றன. வகுப்பறைகள் கூடின, வாசிப்புப் பெருகியது. விளையாட்டுப் போட்டிகள் வலுப்பெற்றன. காஷ் அவர்கள் ஓய்வு பெற்றதும் திரு.ஜே. டபிள்யூ. அருட்பிரகாசம் அவர்கள் பதில் அதிபரானார்.

1940 இல் அதிபரான திரு.வில்லியம் இரண்டாண்டுகளின் பின் மாற்றம் பெற்றதும் அருட்பிரகாசம் அவர்கள் நிரந்தர அதிபரானார். இவர் பதவியிலிருந்த மிகக் குறுகிய காலத்தில் நூற்றாண்டு நினைவுக் கட்டிடத்தைக் கட்டி முடித்து, பௌதிக, இரசாயன ஆய்வுகூடங்களைத் திருத்தியமைத்து, 1944 ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றார். 1930 ஆம் ஆண்டிற் கல்லூரியில் ஆசிரியராகச் சேர்ந்த வண.ஸி.ஏ.சிமித் 1945 இல் அதிபராக்கப்பட்டார். அதே வருடம் அக்டோபர் மாதம் முதற் திகதியில் அமைச்சர் கன்னங்கராவினால் இலவசக் கல்வித் திட்டம் கொண்டு வரப்பட்டது. தவணை ஒன்றுக்கு இரண்டு ரூபாய்கள் மாத்திரமே அறவிடப்படலாம் என விதிக்கப்பட்டது. அரிச்சுவடி ஆரம்பவகுப்பு முதல், சிரேஷ்ட வர்த்தக, பல்கலைக்கழகப் புகுமுக வகுப்பு வரையுள்ள பூரணத்துவம் பெற்ற கல்வியகமாக மத்திய கல்லூரி விளங்கிய வேளையில் இலவசக்கல்வித் திட்டத்தினாற் பல பிரச்சினைகள் தோன்றின. மாணவர் தொகை கூடியது. இடநெருக்கடி உண்டானது. ஆயினும் கர்மவீரரான சிமித் அவர்களுடைய மனம் இவைகளைக் கண்டு சளைக்கவில்லை. கடந்த ஒரு நூற்றாண்டுக்கும் மேலாகக் கல்வித் தொண்டே கடவுளுக்கான தொண்டு எனக் கருதிச் செயலாற்றிய தனது முன்னோடிகளைப் போலவே வண.சிமித் அவர்களும் கட்டிடங்ளைக் கட்டினார். நவீன முறையிற் திறந்த வெளியரங்கொன்றை நிறுவினார். மாணவர் உபயோகத்திற்கென மோட்டோர் வாகனங்களை வாங்கினார். கல்விப்படக்காட்சிப் பகுதியை ஆரம்பித்து திரைப்படக் கருவி, நுணக்குப் படக்காட்சிக் கருவி, வானொலிக்கருவி, ஒலி பெருக்கி இன்னும் இப்பகுதிக்குத்தேவையான அனைத்தையும் தருவித்தார். உபகரணங்களுடன் கூடிய வேலைக்கூடத்தை அமைத்தார். கட்டிடநிதிக்காக 1952 இல் நடத்தப்பட்ட கண்காட்சியில் றெம்பி ரான்ற் ரூபன்ஸ் வேர்மீர் முதலிய உலகப் பிரசித்தி பெற்ற ஓவியர்களின் ஐம்பது உயர்தர ஓவியங்கள் யாழ்ப்பாணத்தில் முதல் முதலாகக் காண்பிக்கப்பட்டன. விளையாட்டுப் போட்டிகளிற் பத்து வருடங்களாக மாணவர்கள் வெற்றிவாகை சூடினார். மேலும் நூற்றாண்டு நினைவுக் கட்டிடத்தின் மேல் மாடியைப் பூர்த்தி செய்யப்பட்டது.

திருச்சபைப் போதகர் இல்லத்தைத் திட்டமிட்டுக் கட்டி முடித்தார். அவர் ஒரு கல்வியாளர் மாத்திரமின்றி ஒரு கட்டிட நிபுணருமாயுமிருந்தார். "சிமித் புளோக்" எனத் திகழும் மாபெரும் கட்டிடம் சிமித் அவர்களின் சேவைக்கும் திறமைக்கும் சிறந்த சான்றாகும். இவர் 1955 இல் ஓய்வு பெற்றதும் வண.டாக்டர்.டி.ரி.நைல்ஸ் அதிபரானர். இவர் வண.எ.பி.நைல்ஸ் அவர்களின் பேரனும் புகழ்பெற்ற பழைய மாணவருமாவர். கிறிஸ்தவ உலகில் இவர் வகித்த உன்னதஸ்தானத்தால் மத்திய கல்லூரி மகிமை பெற்றது. மத்திய பாடசாலையின் வகுப்பறைகளாயிருக்கும் நினைவு மண்டபத்தைக் கட்டியதுடன், ஆரம்ப பாடசாலை அமைத்திருக்கும் கட்டிடத்தை றொக்ஸ்ட் இல்லம் எனப் பெயரிட்டார். நூலகம் விஸ்தரிக்கப்பட்டது. யாழ்.மத்திய கல்லூரியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

125வது ஆண்டு நிறைவு விழா வண. டாக்டர் நைல்ஸ் அவர்கள் காலத்தில் விமிரிசை யாகக் கொண்டாடப்பட்டது. விழா வைபவங் களில் ஹரல்ட் புள்ளோ அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். வண. நைல்ஸ் அவர்களின் சேவைகளிற் திரு வாளர்கள் ஏ.ஈ .தம்பர், ஜே.ஸி.சாள்ஸ். கே.ஸி,ஜேக்கப், கலைப்புலவர் க.நவரத் தினம் ஆகியோர் உறுதுணையாயிருந்தனர். திரு.சாள்ஸ் அவர்கள் மத்திய கல்லூரியில் மாணவராயிருந்து, ஆசிரியராகி, உபஅதி பராகிப் பின் பதில் அதிபராகவும் கடமை யாற்றி 41ஆண்டுகளைக் கழித்தார். மகாகவி ஷேக்ஸ்பியரின் நாடகங்களை மத்திய கல் லூரியினர் திறமையாக நடித்த பெருமையில் திரு.சாள்ஸ் அவர்களுக்குப் பெரும்பங் குண்டு. கல்லூரியின் வருடத்தில் ஆசிரியர் களாய் இருந்த திருவாளர்கள் க.நவரத் தினம், கே.கனகசபை எல்.டபிள்யூ. பொன் னுத்துரை, பிரமஸ்ரீ இராமசாமி சர்மா, திருமதி வி.ரி.மோசெஸ், வண.சிமித், டாக்டர் நைல்ஸ் இவர்கள் காலத்தில் ஓய்வு பெற்ற னர். திரு.சார்ள்ஸ் இளைப்பாறியதும் திரு.ஏ.ஈ .தம்பர் உபஅதிபரானர்.

1961 இன் உதவி பெறும் பாடசாலைகள், பயிற்சிக் கல்லூரிகள் (குறை நிரப்பும் விதி) சட்டம் இல 8 இன் படி இதுவரை காலமும் கிறிஸ்தவ மிஷனரிக் குழுக்களாலும், மற்ற வர்களாலும் நடாத்தப்பட்ட பாடசாலைகளின் உரிமையை அரசாங்கத்துக்கு அளிக்கிறது. அசையும், அசைவற்ற, ஆதனங்கள் அரசின் உரிமையாயின. ஆசிரியர்களும் ஆசிரியர் அல்லாத ஊழியர்களும் அரசாங்க சேவை யாளர்களாயினர். ஆனால், இலவசக்கல்வித் திட்டத்தில் முன்னர்வராத பாடசாலைகள் அரசின் கீழ் வாரதிருந்தன. மெதடிஸ்த சமய மிஷனினால் நிர்வாகிக்கப்பட்ட கல்லூரி களில் ஆண்-பெண் இரு பாலருமாக மொத் தம் 47,000 பேர் 1960 இல் கல்வி பயின்று வந்தனர். இவர்களில் 40,000 பேர் கிறிஸ்த வர் அல்லாதவர். இப்பகைப்புலத்தில் மெத டிஸ்த திருச்சபை அறிக்கையிலிருந்து எடுத்த பின்வரும் கூற்றை காட்டல் அபாருத்த மானது. “சமய பின்னணியில் அமைந்த கல் வியே ஏற்புடைய கல்வி என்றாலும் கிறிஸ் தவரல்லாத பிள்ளைகளுக்கு கிறிஸ்தவ ஆன்மீகத்தை பேதிப்பதில்லை என்றும் மெத டிஸ்த திருச்சபை தீர்மானித்தது. இந்த நிலையை அரசு பள்ளிகூடங்களை பெறுப் பேற்று சமாளித்தது”.

இதற்கிடையில் கல்விக்கான செலவீனங் கள் கொடுப்பனவிலும் கஷ்டமான நிலை ஏற் பட்டது. கல்விக்கான செலவீடு ஒரு பலன் தரும் செலவீடாகவும் செலவிற்கு ஏற்ற வரு மானத்தை அளிப்பதாகவும் திருச்சபையால் கருதப்படவில்லை போலும். இத்துடன் 1950க்குப் பிறகு நாட்டில் ஏற்பட்ட அரசியல் புத்துயிர்ப்பையும், சேமநல சமூகநலத்துறை களில் அரசின் தலையீட்டையும் மெதடிஸ்த திருச்சபை உணர்ந்திருந்தது. இதன் இயல்பை கல்வித் தத்துவம் என்ற நூலிலே பேராசிரியர் ப.சந்திரசேகரம் கூறியுள்ளதைச் சமகாலச் சமுதாயப் பலாபலன்களுடன் ஒப்பு நோக்கி விளக்கிக் கொள்ளலாம். “தேசிய அரசுகளின் எழுச்சியின் பின்னர் அரசின் தலையீடு சகல துறைகளிலும் பெருமள விற்கு ஏற்படத் தொடங்கியதும் மத நிறு வனங்கள் கல்வியளிப்பதற் கெண்டிருந்த பங்கினைக் குறைக்க வேண்டியதாயிற்று''. மெதடிஸ்த திருச்சபை நாட்டில் ஏற்பட்ட அடிப்படை மாற்றங்களை ஏற்றுக்கொண்டது. இலங்கையெங்கிலும் இருபாடசாலைகள் நீங்கலாக மற்றெல்லாப் பாடசாலைகளை யும் மெதடிஸ்த திருச்சபை அரசுக்கு கைய ளித்தது. 1960 இல் உதவி பெறும் பாட சாலைகள் பயிற்சி கல்லூரிகள் விசேட விதிச் சட்டம் இல 05 இன்படி, மெதடிஸ்த திருச் சபையின் செயலாணைக்குட்பட்ட யாழ்ப் பாணம் மத்திய கல்லூரியும் 1960 மார்கழி மாதத்தில் கல்வி பணிப்பாளரின் செய லாணைக்குட்பட்டது. இது கல்லூரியின் முழு கட்டுப்பாட்டையும் அரசாங்கம் ஏற்றுக்கொள் ளும் முதற்கட்ட நடவடிக்கையாகும்.

பல சமுதாய மாற்றங்களை ஏற்கபடுத் தக்கூடிய கல்வி முறையொன்று, ஆயத்தப் படுத்தப்பட்டு 1960 இல் அறிமுகம் செய் யபட்ட காலத்தில் கிறிஸ்தவ உலகின் பிர பலஸ்தரான வண.டாக்டர்.ரி.நைல்ஸ் மத்திய கல்லூரியின் அதிபராயிருந்தார். இவர் தலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையில் ஜே.ஸி.சாள்ஸ் இளைப்பாறியதும், திரு.ஏ.ஈ .தம்பர் உப அதிபராக நியமனம் பெற்றார்.

திரு.கே.தெய்வானந்தப் பிள்ளை துணை அதிபரானார். இத்தகைய சூழ்நிலையில் டாக்டர் நைல்ஸ் அவர்கள் கல்லூரியின் நிர்வாகத்தைப் படிப்படியாகத் திரு. தம்பரிடம் ஒப்படைத்தார். பாரிய கல்வி மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருந்த இக்காலகட்டத்தில் மத்திய கல்லூரியில் திரு. தம்பரின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். டாக்டர் நைல்ஸ் இளைப்பாறியதும் திரு. ஏ.ஈ .தம்பர் 1962 ஆம் ஆண்டு மாசி மாதம் அதிபராக நியமனம் பெற்று ஒக்டோபர் 1964 வரை அதிபராயிருந்தார். இவர் கடந்த நான்கு பதின்மங்களில் கல்வியின் அடிப்படை அமைப்பிலே ஏற்பட்ட மாற்றங்களைத் தன் வாழ்நாளில் கண்டு திளைத்தவர். எல்லாவற்றிற்கும் மேலாக, இக்கல்லூரியின் கல்விச்சேவையில் முன்னிற்கும் முன்னோடிகள் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவரின் குடும்பம் மூன்று தலைமுறைகளாக யாழ். மத்திய கல்லூரியுடன் தொடர்புடையது. இவரின் தந்தையார், காலஞ் சென்ற திரு. ஜி.டபிள்யூ தம்பர், யாழ்.மத்திய கல்லூரியின் பெரும் புகழ் வாய்ந்த ஆசிரியர். ஆகவே இவரது மூதாதையர் மரபு முறை, பட்டறிவு, ஆளுமை ஆகியன கல்லூரியின் வளர்ச்சிக்குப் பெரிதும் பயனாயிற்று.

இக்கல்லூரி பல காலம் மெதடிஸ்த சபையின் செல்வாக்கின் கீழ் ஒரு கல்வி நிறுவனமாக விளங்கி, அரச கல்வி நிறுவனமாக மாறிய பொழுது, 1236 மாணவர்களும் 57 ஆசிரியர்களும், ஆசிரியர் அல்லாத 38 பேரும் இருந்தனர். புதிய அம்சங்கள் தோன்றிய போதிலும், பல புதிய தாக்கங்களை கல்லூரி எதிர்நோக்கி நின்றது. அறுபதாந் தொடர் ஆண்டுகளில் கல்விச் சூழ்நிலை மாற்றத்துக்குள்ளாகியது. சமூகமதிப்புத்தரங்கள், கல்லூரியில் பெற்றோரின் பங்கு, உணர்ச்சி, ஒருமைப்பாட்டில் மொழியின் இடம், ஆசிரியரும் கற்பித்தற் செயல் முறைகளும் ஆகிய புதிய கல்விப் பிரச்சினைகள் தலைதூக்கின. தவிரவும் அருகிலுள்ள இரு கல்லூரிகள் தொடர்ந்தும் தனியார் நிறுவனங்களாக இயங்கின. இதனால் குறைந்த வருமானத்திலுள்ள குடும்பங்களைச் சேர்ந்த சிறார்கள் யாழ்.மத்திய கல்லூரியில் அனுமதி கோரினர். மேலதிக மாணவர் தொகையின் தேவைகளை நிறைவு செய்யக்கூடிய கல்வித்துறை வசதிகள் இக்காலப்பகுதியில் கல்லூரியில் அனுமதி கோரினர். மேலதிக மாணவர் தொகையின் தேவைகளை நிறைவு செய்யக்கூடிய கல்வித்துறை வசதிகள் இக்காலப்பகுதியில் கல்லூரியில் குறைவாகவே காணப்பட்டன. இவ்வகையான நிலையில் கல்லூரியின் கல்விப்பாரம்பரியத்தின் திறன்களையும், குறைகளையும் மதிப்பீடு செய்து, இதுவரை காலமும் நிலைத்து வந்த கல்லூரியின் கல்விப் பாரம்பரியத்தின் கட்டுப்பாடுகளைச் சரியவிடாமல் கட்டிக்காத்தது திரு.ஏ.ஈ . தம்பரின் சாதுரியத் திறமையாகும் 1964 இல் திரு.ஏ.ஈ தம்பர் இளைப்பாறியதும் திரு.ஈ .சபாலிங்கம் அதிபரானர். 1950-1970 காலப்பகுதி, காலத்தின் தேவையைக் கருதி, கல்வியின் தர உயர்வுக்குத் துணைபுரியும் வகையில் உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட காலமொனலாம். யாழ். மத்திய கல்லூரியின் கலைத்திட்டத்தில் விஞ்ஞானம், வர்த்தகம், தொழிற்கல்வி ஆகியன அறிவார்வம் கொண்ட கல்வியாளரால் ஏலவே சிறந்த முறையில் வகுக்கப்பட்டதாகும். 1920 ஆம் ஆண்டில் கல்லூரியில் வர்த்தகம் ஒரு பாடமாகத் தொடங்கி வைக்கப்பட்டது. ஆனால், பொருளாதார சமூக முன்னேற்றத்துக்காகத் தீட்டப்படும் கல்வித் திட்டங்களிலும், மேற்கொள்ளப்படும் கல்வி முயற்சிகளிலும் வர்த்தகக் கல்விக்கு மேலானதொரு இடம் அளிக்கவேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு வர்த்தகக் கல்வி சீரமைக்கப்பட்டது. நவீனச் சூழ்நிலையின் தேவைகளுக்கு ஏற்றவாறு 1967 இல் கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்பு மட்டத்தில் வர்த்தகத்துறை முதன்முதல் ஆரம்பிக்கப் பட்டது. பெற்றோர் விரும்பி நிற்கும் விஞ்ஞானக் கல்வியை மாணவர் இன்னும் சிறந்த வகையிற் பயன்படுத்திக் கொள்வதற்குரிய வாய்ப்புக்கள் கல்லூரியில் இக்காலப்பகுதியில் அளிக்கப்பட்டன. கல்லூரியானது திறன்களை விருத்தி செய்யும் இடம் மட்டுமோ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரியில் 25 ஆண்டுகளுக்கு முன்னர் அதிபர் சிமித் அவர்கள் செயற்படுத்திய கைவினைக் கல்விஅனுபவங்களைப் பகிர்ந்து, அதிபர் சண்முகநாதன் அரசின் புதிய தொழிற்கல்வித்திட்டத்தைச் செயற் படுத்தினர்.

ரூபா 30,000 ஆரம்ப முதலுடன் திட்ட மிடப்பட்ட மூன்று மாடிக் கட்டிடம் தோன்றிய போதிலும் இடையூறுகள் தலைகாட்டின. இறுதியாக முன்னாள் அதிபர் வண.சி.மித் 1973 ஆம் ஆண்டு இலங்கைக்கு வருகை தந்து இரண்டாவது கட்டம் வரை முடி வடைந்த மாடிக்கட்டிடத்தை சம்பிரதாய பூர்வ மாகத் திறந்து வைத்து, முன்னாள் அதிப ரான திரு.ஏ.ஈ .தம்பர் அவர்களுக்குப் பெரு மதிப்போடும் வணக்கத்தோடும் அளிக்கும் நினைவுச் சின்னமாக Tamber Commemor -ation Block என்று பெயரிட்டார். மூன்று மாடிக்கட்டிடத்தின் மூன்றாவது கட்ட வேலை திரு.சண்முகநாதன் காலத்தில் முடி வடைந்தது. எதிர்காலத்தில் வழங்கப்படும் மாணவரின் எண்ணிக்கையையும், பொருட் களையும், இருப்பிட வசதிகளையும், கட்டிட வசதிகளையும் வேண்டிய ஆசிரியர்களையும் கணக்கிட்டுச் செயற்படுத்துவது கல்வி நிர் வாகத்தின் முக்கியமான கடமையாகும். இவ் வகையில் சமகால தேவைகளையும், எதிர் கால இலக்குகளையும் மனதிற்கொண்டு இடைநிலைப் பிரிவுக்கென கட்டிடம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு, அதன் முதல் கட்டவேலை கள் பூர்த்தி செய்யப்பட்டன. இதற்கிடையில், நம் மாணவர் தற்காலக் கூட்டுறவு முறையில் சிக்கனத்தையும், சேமிப்பையும் அறிந்து கொள்வதற்கு ஏட்டுக் கல்வியை நம்பி யிருந்த காலத்தில், யாழ் மத்திய கல்லூரி யில் பள்ளிக்கூட வங்கி 1975 ஒக்டோபரில் ஆரம்பிக்கப்பட்டது. இத்தகைய ஏற்பாடு, மாணவர் மத்தியில் சிக்கனத்தையும், சேமிப் புப் பழக்கத்தையும் உறுதி செய்கிறது. மாண வர்கள் எதிர் காலத்தில் தமக்குரிய சமூகக் கடமையைப் பொறுப்பாக ஆற்றுவதற்கும் உதவுகிறது. திரு.ஈ .கே.சண்முகநாதன் உயர் பதவி பெற்றுக் கல்வி அமைச்சிற்குச் சென்றதும் திரு.என்.எஸ். இரத்தினசிங்கம் 1981 இல் அதிபரானர். இவர் சுமார் 25 வரு டங்கள் கல்லூரியில் கடமையாற்றிப் பெரு மையுடன் பல பொறுப்புகளை ஏற்று நடத்திய வராவார்.

இவரது காலப்பகுதியில் இது வரை காலமும் பாடப் பரப்பிற்குப் புறம்பாகக் கருதப்பட்டு வந்த விளையாட்டுத்துறை புதிய உணர்வு பெற்றது. கல்லூரித் தேவைகளின் அடிப்படையில், சாத்தியமான அளவிற்கு இருக்கைகள் விளையாட்டு மைதானத்தில் அமைக்கப்பட்டன. உண்மையில் எந்த ஒரு கல்வித்துறையோடும் இணையான முக்கியத் துவமுடையதொரு துறை விளையாட்டுத் துறை என்பது உணரப்பட்டு ஒரு பவிலிய னுக்கு வேண்டிய அடிப்படையான இருக்கை வரிசை ஒன்றை அமைத்த காலம் இது வாகும். ஆரம்ப நிலைப்பிரிவின் கட்டிடங்கள் மன நிறைவை அளிப்பனவாய் இருக்க வில்லை. இதைக் கருத்தில் கொண்டு திரு. இரத்தினசிங்கம் காலத்தில் ஆரம்ப நிலைப் பள்ளிக்கென கட்டிடம் அமைக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு கட்டிடத்தில் பெரும் பகுதி வேலைகளும் முடிவடைந்தன. இடை நிலைப் பிரிவின் இரண்டு மாடிக் கட்டிடத்தின் இரண்டாவது கட்டவேலையும் இக்காலப் பகுதியில் முழுமையாகப் பூர்த்தியடைந்தது. மேலும், பாலர் வகுப்புப் பாடசாலை அனுமதி முறை கல்வித் திணைக்களத்தின் கட்டுப் பாட்டில் அமைந்திருந்தாலும், யாழ் மத்திய கல்லூரியில் முன்னாள் மாணவர்களின் குழந்தைகளைச் சேர்ப்பது குறித்து பயனுள் ளதும், சிறந்த வகையில் வகுக்கப்பட்டது மான கொள்கை மொத்த அனுமதியில் 25% ஆக ஒதுக்கப்பட்டது இக்காலச் சாதனை யாகும்.

திரு.வே.பாலசுந்தரம் அவர்கள் 1982 இல் திரு.என்.எஸ்.இரத்தினசிங்கம் அவர்கள் இளைப்பாறிய பின்னர் அதிபரின் கடமை களை ஏற்றார். இவருடைய பதவிக்காலம் முழுவதும் போர் அனர்த்தங்கள் உக்கிர மடைந்தன. இதனால் பாடசாலையை வேறு இடத்திற்கு மாற்றும்படி கல்வித்திணைக்களம் ஆலோசனை கூறியது. எனினும் அதிபர், பெற்றோர், ஆசிரியர்கள், பழையமாணவர் கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் பாட சாலையை வேறு இடத்திற்கு மாற்றாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது அறிவு மிகுவதற்குப் பயிற்சி தரும் நிறுவனம் மட்டுமோ, அன்று. இவற்றை விட இன்னும் சிறந்ததொரு நோக்கத்தைக் கொண்டதாகும். சமூகத்தில் நல்ல நோக்கு களும், திடகாத்திரமும் உள்ள இளைஞர் களை சமூகத்துக்குப் பயன்படுத்துமாறு உறுதி செய்துகொள்ளும் இடம் கல்லூரி என்பதைக் கருத்தில் கொண்டு, இக் காலப்பகுதியில் விளையாட்டுத் துறைக்குப் போதிய ஆக்கமும் ஊக்கமும் வழங்கப் பட்டன.

இக்காலம் விளையாட்டில் பல சாதனை கள் புரிந்த காலமாகும். கல்லூரி வளர்ச்சி என்பது மாணவரும் கல்வி வாய்ப்புக்களும் சேர்ந்து உருவாகும் நிலையாகும். ஆனால், நம் நாட்டில் அரசியல், சமூக பொருளாதார முன்னேற்றத்தின் நிலையில் சிறப்பான கல்வி வாய்ப்புகளை எதிர்நோக்க முடியாதாயினும் எம்மிடமுள்ள குறைந்த சாதனங்களைப் பயன்படுத்தி பல்வேறு கல்வித்துறை வாரி யாக ஓரளவு பயன்பாட்டைப் பெற்றுவிடலாம் என்பதற்கு, இக்காலப்பகுதியில் ரூபா 30,000 ஆரம்ப முதலுடன் திட்டமிடப்பட்ட மூன்று மாடிக்கட்டிடம் உதாரணமாகும். அதிபர் காரி யாலயம், கல்லூரி அலுவலகம், வசதிகள் நிறைந்த ஆசிரியர் அறை நான்கு வகுப் பறைகள் கட்டிட வடிவமைப்பில் இடம் பெற் றன. இத்தகைய வசதிகளை மேற்கொள் வதற்கு ஒருபெருஞ் செலவீடு ஏற்பட்ட போதும், இது ஒரு நீண்ட இலக்காகக் கல் லூரியின் ஒவ்வொரு சிறுவனுக்கும் பயன்தரும் வகையில் அமைந்துள்ளது.

முறைசார் கல்வி முறையில் நூல கத்தைத் தங்கு தடையின்றி மாணவர் விரி வாகப் பயன்படுத்திக் கொள்ளத்தக்க ஒரு சூழ்நிலை பெற்றிராவிட்டால் கல்வியின் முக்கிய நோக்கத்தை நிறைவேற்றமுடியாது. எமது கல்லூரி நூலகத்தின் முக்கியத்து வத்தைப் புறக்கணிக்காவிட்டாலும் நூலகம் போதிய கவனம் செலுத்தப்படாமலேயே இருந்திருக்கிறது.

1966-1968 காலப்பகுதியில் கல்வித் திட் டத்தில் ஆங்கிலம் போதனா மொழியாக இருந்த காலம் மாறி, அன்னை மொழி, போதனா மொழி என்ற அந்தஸ்தைப் பெற் றது. ஒழுங்கு முறையான ஒரு கல்வித்திட் டத்தில் நூலகத்தின் தேவை உணரப்பட்டது. 1966-1968 இக் இடையில் நூலகத்துக்கென 1375 நூல்கள் கொள்முதல் செய்யப்பட்டன. இத்தொகையில் 4% மாத்திரமே ஆங்கில நூல்களாகும் தவிரவும், நூலகத்துக்கு வசதி யான இடம், இறாக்கைகள், படிப்பகங்கள், தமிழ், தமிழ்மொழியில் அறிவியியல், தொழி லியல், வார, மாத இதழ்கள் முதலியவற்றை அளிக்கும் வகையில் கல்லூரி நிர்வாகம் உதவிகளை வழங்கியது. இந்த ஏற்பாடு வெற்றிகரமாகவே செயற்பட்டு வந்திருக் கிறது. மேலும் யாழ் மத்திய கல்லூரி நூலகர் திரு.கா.மாணிக்கவாசகரால் தமிழ் வளர்த்த கிறிஸ்தவ பேர்சிவல் ஐயரினதும், ஆறுமுக நாவலரினதும் நூல்களையும், எழுத்தோவி யங்களையும் சேகரிக்கும் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டது. இத்திட்டம் கல்வியாளர் களுக்கும், மாணவர்களுக்கும் பயன்பெறத் தக்கதாக அமையும் என்று உணரப்பட்டது. ஏனோ, இச்செயற்திட்டம் இன்று வரை நிறை வேறவில்லை? இத்திட்டத்தை தமிழ் மொழி வளர்ச்சிக்கு உதவும் கருவியாக மாற்றி அமைத்துக் கொள்ளும் பிரச்சினைகளுக்கு இன்றைய நிர்வாகத்தினர் தீர்வு காண வேண்டியவராயிருக்கின்றனர்.

1971 இல் திரு.ஈ.கே.சண்முகநாதன் கல்லூரியின் அதிபரானார். இவ்வேளையில் தரப்படுதல், மாவட்ட ரீதியில் பல்கலைக்கழ கங்களிற்கு மாணவர்களை தெரிவு செய்தல் என்பவற்றில் மாணவரிடையே வெறுப்பை உண்டாக்கிய காலம், தமிழ் மாணவர்களின் நலமான கல்வி வாழ்க்கைக்கு வசதி யின்மை, இடர்கள் ஆகியன ஏற்பட்டன. 1972 இல் நாட்டில் கல்வி முறையிலும் மாற்றங் கள் அறிமுகப்படுத்தபட்டன. 6ஆம் வகுப்பில் ஆரம்பமாகும் புதிய கல்வி 9ஆம் வகுப்பில் (தேசிய கல்வித்தராதரப் பரீட்சை) முடிவடை யும். குறித்த சில தகைமைகள் பெறுபவர்கள் உயர் கல்வி பெறும் உரித்துடையவர். மாண வர்கள் தமது எதிர்காலத்திற்குத் தேவை யான முன்னறிவைச் சிறு கைவினைகள், தொழில் முறைகளினூடாகப் பெறுதல் இக் கல்வியின் நற்பயனாகும். ஆனால், மத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்த இடத்திலேயே நடத்தினார். பிரதி அதிபர் திரு.க.கந்தசாமி அவர்களும் இதற்கு வலுவான உறுதுணையாகச் செயற்பட்டார். இரண்டு மாணவர்கள் க.பொ.த உயர்தரக் கணிதத் துறையில் 4A சித்திகளை இவரின் காலத்தில் பெற்றனர். இவரது முயற்சியால் புதிய மூன்று மாடிக்கட்டிடமும் ஆரம்பப் பாட சாலையின் மேல்மாடிக்கட்டிடமும் கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டன. 1982 இல் Centralites Sports Club (மத்தியமணிகள் விளையாட்டுக் கழகம்) ஆரம்பிக்கப் பட்டது. 1985 இல் பழைய மாணவர் சங்க யாப்பு திருத்தப்பட்டு, பழைய மாணவரே பழைய மாணவர் சங்கத் தலைவராக இருப்பதற்கு வழிவகுக்கப்பட்டது. இவ் ஆண்டில் மத்திய பாடசாலை எனப் பெயரிட்ட 150 ஆவது ஆண்டு நிறைவு விழா கொண்டாடப் பட்டு, பெண் ஆசிரியர்கள் ஓய்வறையுடன் கூடிய இரு மாடிக்கட்டிடம் "150 ஆவது ஆண்டுக் கட்டிடம்" எனப் பெயர் சூட்டப்பட்டது. 30.10.1986 இல் கல்லூரியின் காஷ் மண்டப மேல் மாடியில் கடமையில் ஈடுப்பட்டிருந்த மாணவ முதல்வன் செல்வன் பொன்னம்பலம் விபுலானந்தன் யாழ். கோட்டைத்திசையில் இருந்து வந்த துப்பாக்கிச் சன்னத்தினால் காவு கொள்ளப்பட்டு உயிர் துறந்தார். க.பொ.த சாதாரண வகுப்பிலுள்ள மாணவர்களுள் பணிவும் ஒழுக்கமும் உள்ள மாணவனுக்குத் தமது வெகுமதியாக வெள்ளிப் பதக்கம் ஒன்றினை வருடா வருடம் வழங்கும் திட்டத்தை 1990ம் ஆண்டில் திரு.வே.பாலசுந்தரம் அவர்கள் ஆரம்பித்து வைத்தார். இவர் 1989 தொடக்கம் யாழ் நகரக் கொத்தணி அதிபராகவும் செயற்பட்டார்.

ஆபத்து நிறைந்த சூழ்நிலையிலும் துணிவோடு பணியாற்றிய இவர் 1990 பெப்ரவரி 17 இல் இளைப்பாறினர். இவருக்குப் பின்னர் திரு.நா.இராசரத்தினம் பதில் அதிபராகப் பொறுப்பேற்றார். 1990 புரட்டாதி மாதத்தில் சற்றும் எதிர்பாராத விதத்தில் கல்லூரியின் சகல கட்டிடங்களும் விளையாட்டு மைதானமும் பாரிய குண்டுத்தாக்குதலுக்கு உள்ளாகி அழிந்து சிதைந்தன. கல்லூரியின் மிகப்பழமை வாய்ந்த கட்டிடத்தின் (Romai-ne Cooke Hall) மேல்மாடியில் இருந்த நூலகம் முற்றாக அழிக்கப்பட்டது. கட்டிடம் சிதைந்து போனது. ஏனைய கட்டிடங்களின் மேல்மாடிகளும் விடுதிச்சாலையும் முற்றாக அழிவுற்றன. அத்துடன் அனைத்து வளங்களும் விஞ்ஞான ஆய்வுகூடங்களும், உபகரணங்களும் அழிந்து நாசமாயின. ஏற்கனேவே மாணவர்களின் தொகையில் வீழ்ச்சியடைந்திருந்த கல்லூரி மேலும் அவலங்களைச் சந்தித்தது. 2000 மாணவர் வரவிலிருந்து 600-700 வரை வரவு சுருங்கியது. பாடசாலைச் செயற்பாடுகள் ஸ்தம்பித்தன. பாடசாலையின் முன் நுழைவாயில் மூடப்பட்டு முதலாம் குறுக்குத் தெருப்பக்கமாக ஒரு நுழைவாயில் அமைக்கப்பட்டது. பங்கப்பட்ட சூழ்நிலையில் தனது பணியை ஆற்ற முடியாது அல்லற்பட்ட திரு.நா.இராசரத்தினம் அவர்கள் 1990ம் ஆண்டு ஐப்பசி மாதம் சேவையில் இருந்து ஓய்வுபெற வேண்டி வந்தது. இந்த சூழ்நிலையில், திரு.நா.க.சண்முகநாதப்பிள்ளை அவர்கள் அதிபராக நியமனம் பெற்றார்.

இவர் யாழ் மத்திய கல்லூரிக்கு நியமனம் பெற்ற முதல் இந்துசமய பழைய மாணவரும் அதிபருமாவார். பாடசாலையை மீளக் கட்டியெழுப்பும் முயற்சியில் முக்கியமாக பழையமாணவரும், பெற்றோரும், நலன்விரும்பிகளும் இவருக்குத் துணை நின்றனர். சிதைந்துப் போன வகுப்பறைக் கட்டிடங்களின் கூரைகள் மற்றும் தளபாடங்கள் என்பன படிப்படியாகத் திருத்தியமைக்கப் பட்டு வகுப்பறைக் கற்றலுக்கு ஏற்ற வசதிகள் கணிசமான அளவு மாணவருக்குச் செய்து கொடுக்கப்பட்டன. ஆசிரிய வளமும் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றம் கண்டது. தீவுப்பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த ஊர்காவற்துறைக் கோட்டக் கல்விப் பாடசாலைகளையும், வேலணைக் கல்விக் கோட்டக் காரியாலத்தையும் உள்ளடக்க வேண்டிய காலத்தின் கட்டாயமும் 1991 தை தொடக்கம் 1991 ஏப்பிரல் வரை ஏற்பட்டது.

நிலைமைகள் ஒரளவு சீரடையத்தொடங்கியதும் மாணவர் வரவு 650ல் தொடங்கி 1994, 1995 களில் 1800வரை உயர்ந்தது. பொதுப் பரீட்சைகளின் பெறுபேறுகளும் உயரத்தொடங்கின. 1992 இல் க.பொ.த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்தர தேர்வில் விஞ்ஞானப்பிரிவில் ஒருவர் 4A எடுத்து சித்தியடைந்தார். இரண்டு பிரதியதிபர்கள் முறையே V. ஐயாத்துரை அவர்களும் திரு.S.சிவன்ரூபன் அவர்களும் நியமிக்கப்பட்டனர். முன்னைய பிரதி அதிபர் திரு.க.கந்தசாமி அவர்கள் மே-1991 இல் இளைப்பாறிய பின்னர் அதே ஆண்டில் காலமானார்.

பகுதித்தலைவர்களாக திரு.த.நாகரத்தினம் (12-13விஞ்ஞானம்) திரு.க.சுந்தரலிங்கம், திரு.பி.ஜே.அன்ரனி (9-11) திரு.எஸ். பாலசுப்பிரமணியம், திரு.கு.சிவகுமாரன் (6-8) திரு.சீ.செபஸ்தியாம்பிள்ளை (தொழில்நுட்பம்) திரு.எஸ்.நடராசா (12-13 வர்த்தகம்) என்போர் நியமனம் பெற்றனர். திரு. ஆர்.ஜெகதீஸ்வரன் மாணவர் முதல்வர் சபை பொறுப்பாசிரியர் ஆனார். திரு.வி. ஐயாத்துரை அவர்கள் இளைப்பாறியதும் திரு. த.நாகரத்தினம் அவர்கள் பிரதி அதிபர்களுள் ஒருவரானார். திரு. ஆர்.ஜெகதீஸ்வரன் அவர்கள் (12-13விஞ்ஞானம்) பகுதித்தலைவர் ஆனார். திரு.கு.சிவகுமாரன் இருவருடம் சம்பளமற்ற லீவில் செல்ல திருமதி.பொன்னையா பகுதித்தலைவரானார். திரு.பி.ஜே.அன்ரனி இடமாற்றம் பெற்று செல்ல திருமதி. இ. பாலசுந்தரம்பிள்ளை பகுதித்தலைவரானார்.

1992 இல் சாரணர் பவளவிழா கொண்டாடப்பட்டது. 15.01.1993 இல் யாழ்ப்பானம் மத்திய கல்லூரியின் ஆரம்பத்திகதி 01.08.1816 என ஆய்வுக் குழுவினால் முடிவு செய்யப்பட்டது. 31.01.1993 இல் கல்லூரி சார்ந்த சங்கங்களின் கூட்டத்தில் மேற்கூறியவை அங்கீகரிக்கப்பட்டு அதிபரினால் "உதயன்" நாளிதழ் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டது. 1993 இல் கலைமகள் வழிபாட்டுப் பீடம், கத்தோலிங்க வழிபாட்டுப்பீடம், ஆரம்பப்பிரிவு வழிபாட்டுப்பீடம் என்பன அமைக்கப்பட்டன. 1994இல் நாவலர், பேர்சிவல், விபுலானந்தன், தமிழ்த்தாய் உருவப்படங்கள் திரைநீக்கம் செய்யப்பட்டன. 1994 இல் பெருந்துடுப்பாட்டத்தில் மத்தியகல்லூரி 20 ஆண்டுகளின் பின் வெற்றியீட்டியது. 23.03.1994 இல் தேசியபாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டது. பாடசாலை அபிவிருத்திக்கான எதிர்காலத் திட்டங்கள் கல்வி அமைச்சிற்கும் சமர்ப்பிக்கப்பட்டன. கரப்பந்தாட்ட 15,17,19 வயது அணிகள் மாவட்டத்தில் வென்றன. 1994இல் விஞ்ஞானப் பொருங்கண்காட்சி நடாத்தப்பட்டது. 1995 இல் கல்லூரியின் 175ஆண்டு நிறைவு விழா கொண்டாடப்பட்டது. அத்தோடு சைவமாணவர்களுக்குத் சிவதீட்சையும் செய்யப்பட்டது. 1995இல் வர்த்தக மன்ற பவளவிழாவும், கல்லூரிக் கூட்டுறவுச்சங்க விற்பனை நிலைய அங்குரார்ப்பணமும் நடைபெற்றன.

அதே ஆண்டில் கல்லூரி மாணவர்களுக்கான பற்சிகிச்சை நிலையம் யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் இருந்து யாழ் மத்திய கல்லூரி ஆரம்பப்பிரிவுக்கு தற்காலிகமாக மாற்றப்பட்டு பின்பு அதிபராக வந்த திரு.க.இராசதுரை அவர்களின் காலத்தில் 2லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு நிரந்தர நிலையமாக மாற்றப்பட்டது. ஆரம்பப் பிரிவின் மேற்பார்வையாளராக திரு.எஸ்.சிவனேசன் அவர்கள் கடமையாற்றினார். 17.02.1995இல் பாடசாலை விளையாட்டுத்திடலில் முன்பிலிருந்து அழிந்து போன துடுப்பாட்ட எண்ணிக்கைச் சட்டம் அமைந்திருந்த இடத்தில் லாவண்யா மூக்குக் கண்ணாடி நிறுவனத்தின் அனுசரணையுடன் புதிய எண்ணிக்கைச் சட்டகம் அமைக்கப்பட்டு கல்லூரிப் பழைய மாணவர் கலாநிதி என்.எதிர்வீரசிங்கம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அதனருகில் நன்னீர்க் கிணறு ஒன்றும் அமைக்கப்பட்டது.

30.10.1995ல் யாழ்நகரின் பாரிய இடப்பெயர்வு இடம்பெற்று எமது கல்லூரி சாவகச்சேரி றிபேக் கல்லூரியில் பகுதி நேரப் பாடசாலையாக இயங்க அனுமதிக்கப்பட்டது. இந்த இடப்பெயர்வின் போது பாடசாலையின் வளங்களை எடுத்துச்செல்ல முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் அனைவரும் வெகுசிரமத்தோடு பணியாற்றினார். 03.02. 1996ல் திரு. நா. க. சண்முகநாதப்பிள்ளை அவர்கள் ஓய்வு பெற்றுள்ளார்.

பிரதி அதிபர் S.சிவன்ரூபன் அவர்கள் பதில் அதிபராக அதிபரின் கடமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைப் பெறுப்பேற்றார். இவர் மிக குறுகிய காலம் பதவி வகித்தாலும் குடாநாட்டின் பாரிய இடப்பெயர்வின் பின் கல்லூரியை சகஜ நிலைக்குக் கொண்டுவருவதில் ஆற்றியபங்கு அளப்பெரியது. பல்வேறு இடங்களிலும் சிதறிக் கிடந்த பாடசாலை தளபாடங்களை மிகவும் சிரமப்பட்டு மீண்டும் பெற்று பாடசாலையை நடாத்துவதற்கு உதவினார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இக்காலத்தில் திரு.க.இராசதுரை அவர்கள் கல்வி உயர்கல்வி அமைச்சால் தேசிய பாசாலை அதிபராகத் தெரிவு செய்யப்பட்டு எமது கல்லூரியில் 04.11.1996 ஆம் திகதி அதிபராக நியமிக்கப்பட்டு கடமையைப் பெறுப்பேற்றுக் கொண்டார். கல்லூரியின் தனித்துவமான பாரம்பரியங்களையும் அதை நிறுவியவர்களது இலட்சியங்களையும் கட்டிக்காப்பதுடன் அது முன்பு அகில இலங்கை ரீதியாகப் பெற்றிருந்த உயர்ந்த நிலையும் மீள உருவாக்கி அதனைப் பேணும் இலட்சியத்தை இவர் திடமாகக் கொண்டிருந்தார்.

யாழ்ப்பாணத்தை மூடிய யுத்த அனர்த் தங்களால் சகல கட்டிடங்களும் வகுப்பு களை நடாத்த முடியாத சூழ்நிலையில் சேத மடைந்திருந்தன. கூரைகளேயில்லாத இடிந்த கட்டிடங்களும் இடிபாடுகளும் கற்கு வியலாக இருந்த பாடசாலை வளாகமும் கல்லூரியின் கவிவு நிலையை (School Climate) மிகவும் பாதித்திருந்தன. ஒவ் வொன்றாக இவற்றைத் திருத்தியமைக்க வேண்டிய பாரிய பொறுப்புக்களை இவர் ஏற்க வேண்டியதாயிற்று. கல்லூரி விளை யாட்டு மைதானத்தின் சகல மதில்களும் இடிந்த நிலையில் திடலாக இருக்க அவ் விடம் இராணுவ, பொலிஸ், அரச நிறுவனங் களின் வாகனத்தரிப்பிடமாகவும் யாழ்ப் பாணத்திற்கும் வெளிமாவட்டங்களுக்குமான தரைவழிப்பாதை துண்டிக்கப்பட்டிருந்ததால் யாழ்ப்பாண மக்களுக்கான கப்பல், விமானப் போக்குவரத்துக்கான மைய நிலையமாகவும் இராணுவ, பொலிஸ் உடற்பயிற்சி பெறும் இடமாகவும் மாற்றப்பட்டிருந்தது. இவர் கடமையேற்ற ஒரு மாத காலத்தினுள் மைதானத்தில் மேற்கூறப்பட்ட சகல செயற் பாடுகளும் நிறுத்தப்பட்டு துடுப்பாட்டத்துக் கான ஆடுகளம் புதிதாக மீள அமைக்கப் பட்டு மாணவர்களின் முழு விளையாட்டுச் செயற்பாடுகளுக்குமாகப் பயன்படுத்தப் பட்டது.

இம் மைதானத்தைப் புனரமைப்பதை முதன்மை நோக்காகக் கொண்ட அதிபர் ஒரு வருடத்தில் விளையாட்டு அமைச்சின் மூலம் ரூ 2,500,000 ரூபாவினைப் பெற்று புதிய சுற்றுமதிலையும், யுத்தாலும் ஏனைய காரணி களாலும் குன்றும் குழியுமாக மாறி மழை காலத்தில் வெள்ளம் நிரம்பியதாகவும் இருந்த நிலப்பகுதியை செம்மண் கொண்டு நிரப்பி யாழ் மாவட்டத்திலேயே சிறந்த விளையாட்டு மைதானமாக மாற்றியமைத் தார். இந்த நிதிமூலம் கல்லூரியின் ஆரம்பப் பிரிவுக்கருகில் 500,000 ரூபா செலவில் நவீன கூடைப்பந்தாட்ட ஆடுகளம் ஒன்றையும் அமைத்தார். உள்ளக விளையாட்டரங்கு ஒன்றை அமைக்கும் நோக்குடன் ஆரம்பப் பிரிவுக்கு மேற்குப்புறத்தில் விளையாட்டு மைதானத்திற்கு அண்மித்ததாக கல்லூரிக் குள் இருந்த உடைவுகளை நிரப்பி அதற் கேற்றதான கட்டிட அமைப்பை புதிதாக நிறு வினார். உள்ளக விளையாட்டுப் பிரிவு புதி தாக அமைக்கப்பட்டு மாணவருக்கு பயிற்சியு மளிக்கப்படுவதுடன் யாழ் மாவட்ட ரீதியாக முன்னாள் அதிபரும், பழையமாணவருமான கலாநிதி D.T.நைல்ஸ் அவர்களின் நினை வாக வருடாவருடம் யாழ் மாவட்டத்தில் சகலருக்குமான உள்ளக விளையாட்டுப் போட்டிகள் 1998ஆம் ஆண்டிலிருந்து ஆரம் பித்து வைக்கப்பட்டு இன்றும் நடைமுறைப் படுத்தப்படுகின்றன.

கல்லூரியின் கட்டிடங்கள் விரைவாகத் திருத்தியமைக்கப்பட்டன. ஆரம்பப்பிரிவுக் கட்டிடமும் சுற்றுமதிலும் 700,000 ரூபா செல விலும், இன்றைய ஜேம்ஸ்லிஞ் மண்டபம் என அழைக்கப்படும் மூன்று மாடிக்கட்டிடம் புதிதாக கூரை அமைத்து 100,000 ரூபா செலவில் திருத்தியமைக்கப்பட்டன. தம்பர் மண்டபத்தின் கீழ்ப்பகுதியும் 150வது ஆண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவு மண்டபமும் 1,500,000 ரூபா செலவில் மீளமைக்கப்பட்டன. விஞ்ஞான ஆய்வு கூடமும், நூற்றாண்டு மண்டபமும் 1,600,000 ரூபா செலவில் திருத்தியமைக்கப்பட்டன.

புதிய மின் இணைப்புகளும், நீர் விநியோகமும் கல்லூரியில் முற்றாகவே இல்லாதிருந்த மலசலகூட வசதிகளும் ஒரு வருடத்தினுள் 1,500,000 ரூபா செலவில் பூரணப்படுத்தப்பட்டது. தம்பர் மண்டபத்தின் மேல் மாடிமண்டபமும், இடைநிலை ஆய்வுகூடமும் 2,000,000 ரூபா செலவில் புனருத்தாரணம் செய்யப்பட்டன. கேட்போர் கூடமும், நவீன வசதிகள் கொண்ட அதிபர் பணிமனையும், அலுவலக, ஆசிரியர்களின் அறைகளும் 1,000,000 ரூபா செலவில் புனருத்தாரணம் செய்யப்பட்டது. இலங்கைப் பாடசாலைகளில் என்றுமே இல்லாதவாறு அதிபரின் சொந்த செலவில் கந்தசாமி ஸ்ரீங்கா 250,000 ரூபா செலவில் அமைக்கப்பட்டது. யாழ் மாவட்டத்துக்கென கணினிவள நிலையம் 500,000 ரூபா செலவிலும் 11 கணினிகளுடனும் குளிரூட்டப்பட்ட நவீன வசதிகளுடனும் அதிபரினால் உருவாக்கப்பட்டது. 25 வருடங்களுக்கு மேல் கல்லூரியில் கடமை புரிந்த ஆசிரியை திருமதி.க.மகேஸ்வரியின் பெயரில் இன்றும் மாவட்டரீதியில் பலருக்கு கணினி அறிவைப் புகட்டி வருகின்றது.

$GEP^2$ திட்டத்தின் கீழ் 20 கணினிகளுடன் கணினிப்பயிற்சி நிலையம், ஒலி, ஒளிபரப்புக் கூடம் என்பன உலக வங்கியின் உதவியின் கீழ் அமைக்கப்பட்டு வருகின்றன. கல்லூரி இதுவரை கண்டிராத அளவில் புனர்வாழ்வு அமைச்சின் சுசுயுே நிறுவனத்தின் நிதி உதவி பெற்று 240'×25' அளவு கொண்ட மூன்றுமாடிக் கட்டிடத்திற்காக இதுவரை 6,500,000 ரூபா செலவு செய்யபட்டதுடன் 6,000,000 ரூபா புநூ² திட்டத்தின் கீழ் உலக வங்கி நிதி மூலம் மீதிக் கட்டிட வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன.

கல்வித்துறையில் என்றுமே இல்லாதவாறு க.பொ.த உயர்தர பரீட்சையில் 1996 இல் வர்த்தகத்துறையில் 4 மாணவர்கள் 4A தரங்களைப் பெற்று அகில இலங்கை ரீதியில் 1ம், 3ம், 8ம் நிலைகளை எமது கல்லூரி பெற்றதுடன் க.பொ.த. சாதரணதரம், 5ம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் மிக அதிக மாணவர் சிறந்த சித்தி பெற்றுள்ளனர். 1998 இல் வர்த்தகத்துறையில் மாவட்ட ரீதியில் எமது கல்லூரி மாணவனும், 1998 இல் கணிதத்துறையில் எமது கல்லூரி மாணவனும், 2000 இல் கலைத்துறையில் மாவட்டரீதியில் எமது கல்லூரி மாணவனும், முதலாம் இடங்களைப் பெற்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.


வீழ்ந்திருந்த விளையாட்டுத்துறை கல்லூரிக்கான தனித்தன்மையுடன் பிரகாசிக்கத் தொடங்கியது. துடுப்பாட்டம், உதைபந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம் என்பவற்றுடன் உள்ளக விளையாட்டுக்களிலும் மாவட்டரீதியில் மட்டுமின்றி அகில இலங்கை ரீதியாகவும் பரிசுகள் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் கல்லூரியின் மிகப் பழைய புகழ் பூத்த, யுத்தத்தால் மிகச் சேதமடைந்த றொமைன்குக் மண்டபத்தைத் திருத்த 4,500,000 ரூபாவும், சிமித் மண்டபத்துக்கு 2,500,000 ரூபாவும் அரசினால் ஒதுக்கப்பட அதிபர் மிக உழைத்தமை குறிப்பிடத்தக்கது எதிர்காலத்தில் நவீன கணினி வலைப் பின்னலமைப்புக்கள் கொண்ட நூலகமும், விளையாட்டு மைதானத்துக்கும் கல்லூரிக்கும் இடையிலான வீதியை கல்லூரிக்காக மூடி அதன்மேல் பார்வையாளர் கூடமும் அமைக்கவும் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கவை.

உ.சஜீவ்
மாணவ முதல்வன் 2014-2015

துன்பங்கள் அனுபவித்த காலத்தை மறந்து விடு
ஆனால் அது உனக்குக் கற்பித்த பாடத்தை மறந்து விடாதே
-பெஞ்சமின்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மத்திக்கு வந்த மகாத்மா

அன்பும் அறமும் நல்வாழ்வின் இருகண்கள் அன்பிருந்தால் அருள் சுரக்கும். அறம் சிறந்தால் அமைதி பிறக்கும். அன்பும் அறமும் சேர்ந்தால் அறிவு வளரும். அறிவு வளர வளர மெய்ப்பொருள் காணும் இயல்பும் தீயன தவிர்த்து நல்லவற்றின் பால் நாட்டமும் உண்டாகும். அதனால் தான் அன்பு, அருள், அறம், அமைதி, அறிவு எனும் ஐந்தும் நல்வாழ்வின் நெறிகளாகும். உலகில் அன்பையும் அருளையும் கொண்டு உண்மையையும் ஒழுக்கத்தையும் உயிரென கலந்து மக்கட்கு வழி காட்டியாக வாழ்ந்தவர்களில் அண்ணல் மகாத்மா காந்தியும் ஒருவர். அருள் நெறியோடு ஒழுகி மற்றவர்களையும் அவ்வாறு ஒழுகச் செய்த உத்தமர் ஆவார்.

அதுமட்டுமல்லாது இந்திய விடுதலைப் போராட்டத்தில் முக்கிய பங்காற்றியவர் மகாத்மா காந்தியாவார். அந்நியர் ஆட்சியில் அடிமைப்பட்டு கிடந்த பாரததேசத்தை மீட்கவும் அயராது பாடுபட்டார். இந்திய விடுதலைப்போராட்டத்தில் அகிம்சையே தனது ஆயுதம் என எடுத்து வெற்றி கண்டவரும் ஆவார். வட இந்தியாவிலுள்ள குஜராத் மாநிலத்தில் போர் பந்தர் என்னும் கிராமத்தில் 1869 ஐப்பசி இரண்டாம் திகதி பிறந்தார். இவரின் தந்தை "காபா காந்தி" ஆவார். தாய் "புத்தலிபாய்" ஆவார். புத்தலிபாய் அவர்கட்கு ஒரு பெண் குழந்தையும் 3 ஆண்குழந்தைகளும் ஆவர். இவற்றில் கடைசிப்பிள்ளையே மகாத்மா காந்தி ஆவார். இவருக்கு பெற்றோர் இட்ட பெயர் "மோகனதாஸ் கரம் சந்த்காந்தி" ஆகும். இவர் ஆரம்பக் கல்வியை போர் பந்தரிலே தொடங்கினார்.

இவரது 7வது வயதில் தந்தையின் வேலை மாற்றத்தால் "ராஜ்கோட்" என்ற ஊரில் அவரது படிப்பு தொடர்ந்தது. இவர் தனது 12ஆவது வயதில் பார்த்த "சிரவண பித்ரு பக்தி நாடகம்" "அரிச்சந்திரன்" நாடகம் என்பவற்றினால் சத்திய சீலராக விளங்கினார். சிரவணன் எனும் இளைஞன் தாய் தந்தையருக்கு காட்டிய அன்பும் தொண்டும் காந்தியைக் கவர்ந்தன. தாமும் அவரைப் போல் ஒழுக வேண்டும் என உறுதி கொண்டார். அதே போல் அரிச்சந்திரன் நாடக வரலாறு அவரை கவர்ந்தது. உண்மையை காக்க அரிச்சந்திரன் பதவியிழந்து, பாலனையிழந்து, நீதியிழந்து பட்ட துன்பங்களை காந்தி உணர்ந்தார். இதிலிருந்து எத்தடைகள் வந்தாலும் வாய்மையில் தவறாது இருக்கவேண்டும் என்ற முடிவிற்கு வந்தார். இவ்விரு நாடகங்களும் அவரை பண்பாடு மிக்கவராய் மிளிர வைத்தன.

எனினும் காந்திக்கு கற்கும் காலத்தில் சோதனைகள் சில ஏற்பட்டன. தீயதோர் நட்பால் புலால் உண்ணுதல், புகைப்பிடித்தல், தன் வீட்டில் திருடுதல் போன்ற தீய பழக்கங்கள் காந்திக்கு ஏற்பட்டன. தன் தவறை உணர்ந்த காந்தி பெற்றோரிடம் கடிதம் எழுதி மன்னிப்புக் கோரினார். காந்தி தனது 13வது வயதில் "கஸ்தூரி பாய்" எனும் பெண்ணை மணந்து கொண்டார். காந்திக்கு 16வது வயது நிரம்பியபோது காந்தியின் தந்தை இறந்து போனார். 1887 ஆம் ஆண்டு பவநகர் கல்லூரியில் "மெட்ரிகுலேசன்" சித்தியடைந்தார்.

பின்னர் காந்தி "பாரிஸ்டர்" படிப்பு படிக்க விரும்பினார். இதற்கு தாயார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்மதிக்க வில்லை. காரணம் மேலை நாடு களில் தீயபழக்க வழக்கங்கள் அதிகம். தன் மகன் ஒழுக்கம் கெட்ட கல்வியை பெறுவதி லும் பார்க்க இங்கு சான்றோனாக இருப்பது மேல் என எண்ணினார். காந்தி தாயின் மனதை புரிந்து கொண்டு தாயிடம் சத்தியம் செய்தார். "அம்மா நான் எக்காரணம் கொண்டும் மது அருந்த மாட்டேன், புலால் உண்ணமாட்டேன், பிறமாதரோடு பழகமாட்டேன், இ்.து உறுதி தாயே இசைவு கொடுத்தருள வேண்டும்". தாயும் சம்மதித்தார். இவரது குடும்ப நண்பர் "மாவ்ஜிதவே" என்பவரின் உதவியுடன் பாரிஸ்டர் படிக்க முயன்றார். 18 வயதான காந்திக்கு இந்நேரத்தில் குழந்தை ஒன்று பிறந்தது. குழந் தையை விட்டு இங்கிலாந்து செல்ல கஷ்டப்பட்டார். எனினும் மனதை ஒருநிலைப்படுத்திக்கொண்டு 1887 ஆம்ஆண்டு புரட்டாதி 04 ஆம் திகதி இங்கிலாந்து பயணமானார். நான்கு வருடம் படித்து 1891 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 10 ஆம் திகதி பரீட்சையில் சித்தி யடைந்து பாரிஸ்டராக விளங்கினார். அங்கேயே ஆங்கில அறிவை நன்கு வளர்த்துக்கொண்டார். அங்கே பகவத் கீதையை படித்தார். அதன் கருத்துக்கள் அவர் மனதை பெரிதும் கவர்ந்தன. விவிலிய எனும் புத்தகத்தை விரும்பிக் கற்றார். இவர் S.S அஸ்ஸாம் என்ற கப்பலில் 12ம் திகதி தாயகம் திரும்பினார். காந்தி இங்கலாந்தில் உள்ள போதே காந்தியின் தாய் இறந்து போனார். காந்தி தொடர்ந்து வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டார். இராஜ்காட் நீதி மன்றத்தில் சிறிது காலம் வழக்கறிஞராக தொழில்புரிந்தார். அதன் பின்னர் சட்டக் கலை நுணுக்கத்தை கற்பதற்கு பம்பாய் சென்றார். பின் தென்னாபிரிக்காவில் தாதா அப்துல்லாவின் கம்பனி வழக்கை தொடர 1893ம் ஆண்டு சித்திரை மாதம் காந்தி ஆபிரிக்கா பயணமானார். அப்துல்லா காந் தியை வரவேற்றார். காந்தியின் எளிய தோற் றம் அனைவரையும் கவர்ந்தது. அவர் ஆபிரிக்காவில் வெள்ளையருடன் முரண்பட்ட நிலையில் காணப்பட்டார்.



காந்தி ஒரு முறை டர்பனில் இருந்து பிரிகோரியாவிற்கு செல்ல புகை வண்டியில் 1ம் வகுப்பு பெட்டியில் இருந்தார். அவர் அவ் வாறு பயணிப்பதை பொறுக்கமுடியாத வெள் ளையன் ஒருவன் அவரை கீழ் வகுப்பு பெட் டிக்கு செல்லுமாறு வற்புறுத்தினான். காந்தியோ தன்னிடம் 1ம்வகுப்புப் பெட்டிக் கான பயணசீட்டு உள்ளது என மறுத்து விட்டார். இதனால் கோபப்பட்ட வெள்ளை யன் காந்தியை கீழே தள்ளி அவரது உடைமைகளையும் வீசினான். காந்தி மேலிடத்துக்கு முறைப்பாடு செய்தும் பயனில்லை. இன்னொரு சமயம் காந்தி வழமையாக உலாவச் செல்வது போல் சென்றார். அருகில் வெள்ளையனின் மாளிகை இருந்தது. அவ் மாளிகையின் காவற்காரன் "இந்தியர்கள் இவ்வழியே வர முடியாது" என்று சொல்லி தாக்கினான். இதைக் கவனித்துக் கொண்டிருந்த காந்தியின் வெள்ளைக்கார நண்பன் "அன்பரே இவன் செய்தது தவறு நீங்கள் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தால் நான் சாட்சி சொல்கிறேன்" என்று சொன்னான். அதற்கு மகாத்மா காந்தி சிரித்து கொண்டே "இவன் மீது என்னதவறு இருக்கிறது இந்தியரை வெள்ளையர் அவ மதிக்கும் போது இவன் மட்டும் எப்படி குற்ற வாளி ஆவான்" என்று பதிலளித்தார். பின் அப்துல்லாவின் வழக்கை நல்ல முறையில் முடித்தார்.

1894ம் ஆண்டு "நோட்டல் இந்திய காங் கிரஸ்" என்ற அமைப்பை தொடங்கினார். இவ்வமைப்பின் ஊடாக தேசிய சுயமரியா தைக்கான போராட்டத்தை ஆரம்பித்தார். காந்தியடிகள் இவ்வாறு போராட்டம் நடத்தும் பொழுது "பதிவு செய்யப்படாத திருமணம் செல்லுபடியற்றது" என நீதிமன்றில் தீர்ப்பா கியது. இதனை இந்தியப் பெண்கள் அவ மானமாகக் கருதினர். அவர்களும் இப் போராட்டத்தில் பங்கு பற்றினர். அப்போராட் டத்தில் கலந்து கொண்ட வள்ளியம்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் இந்திய சிறுமி உயிர் துறந்தாள். அப் போராட்டம் அமைதியாக நடைபெற்றது. பல தொண்டர்கள் சிறை சென்றனர். காந்தியை டண்டி எனும் இடத்தில் கைதுசெய்தனர். ஒன்பது மாதம் சிறையில் இருந்தார். இவ்வா றெல்லாம் நிகழ்ந்தாலும் காந்தியின் போராட் டம் வெற்றி பெற்றது. ஆபிரிக்காவில் சுதேசி களை பிரித்தானியர் கொடுமைப்படுத்துவதை கண்டு ஆச்சரியத்துக்குள்ளானார். 1915ல் மீண்டும் இந்தியாவுக்கு வந்தார்.

வங்காளத்தில் சம்பா பிரதேசத்தில் இண்டிக்காஜ துணிகளுக்கு சாயம் ஊட்ட பயன்படும் பயிர் பயிரிடுவோரின் பிரச்சி னைகளை சத்தியாக்கிரகம் ஊடாக தீர்த்து ஏழை மக்களிடையே ஒளி ஏற்றினார். ஒத் துழையாமை இயக்கத்தை ஆரம்பித்து பிரித் தானிய பொருட்கள், நீதிமன்றம், வரி, என்ப வற்றுக்கு எதிராக போராட்டத்தை ஆரம்பித் தார். கொடிய வரி நீங்கவேண்டும் தீண் டாமை ஒழிய வேண்டும் கல்வியில் சீர்திருத் தம் வேண்டும் சாதிமுறையை ஒழித்தல் என்பவற்றுக்காக கால்நடையாக சென்று அறிவுரை சொன்னார். காந்தியின் சத்தியா கிரகப் போராட்டத்தில் அணைத்து மக்களும் காந்தியின் பக்கம் சாய்ந்தனர்.

ஆங்கில அரசாங்கம் மக்களின் உரிமை யைப் பறிப்பதற்கானமுறையில் ரௌலட் சட்டத்தை கொண்டு வந்தனர். இச்சட்டத் தால் எவரும் விசாரணை இன்றி கைது செய் யப்படலாம், காவலில் வைக்கலாம். தண்டிக் கலாம், இச்சட்டத்தினை முழுமையாக அறிந்த காந்தி ஊர்தோறும் சென்று உண்மையை விளக்கினார். ரௌலட் சட்டத்தை எதிர்த்து வேலைநிறுத்தப் போராட்டம் எங்கும் பரவி யது. இதனால் பிரித்தானியர் செய்வதறியாது திகைத்து நின்றனர். பிரித்தானிய உடையை கழற்றி எறிந்து கதர் உடையை அணிந்து மக்களைக் கவர்ந்தார். காந்தி 1920ம் ஆண்டு ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்தார். ஒத்துழையாமை இயக்கத்தில் சாதிமுறை, அடிமைமுறை ஒழித்தல், இந்து - முஸ்ஸீம் ஒற்றுமை என்பன முக்கிய இடம்பெற்றது. இதனால் பிரித்தானியரின் நிர்வாகம் சீர் குலைந்தது. காந்தியின் குழுவினர் பொலி ஸாரை தாக்கியமையால் மனவேதனை அடைந்த காந்தி இவ் இயக்கத்தைத் தடை செய்தார். மகாத்மா காந்தி அவர்கள் 1927ம் ஆண்டு யாழ்ப்பாணம் வந்தார். 1927.11.27 அன்று யாழ்பாணம் மத்திய கல்லூரிக்கு வந்தார். மத்திக்கு வந்த மகாத்மா காந்தி ஆற்றிய உரை வருமாறு...........

“கால் வயிற்றுக் கஞ்சிக்கு கதியின்றி தவிக்கும் இந்திய மக்களின் பொருட்டு நீங் கள் தந்த பணமுடிச்சுக்களுக்கு எனது ஆழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துகொள் கிறேன். நீங்கள் முக்கியமான ஒருகேள்வியை நேற்றும் அனுப்பினீர்கள். இன்று காலையும் அனுப்பினீர்கள். இப்போதிலிருந்து பத்தரை மணிக்கிடையில் நான் அனேக நிகழ்ச்சியில் பங்கு பற்ற வேண்டியுள்ளது. அத்தோடு ஒரு காரணத்தால் பதில் சொல்ல விரும்பவில்லை. ஆயினும் பதில் சொல்லும் பொருட்டு சில நிமிடம் செலவிட எண்ணுகிறேன். காரணம் எனது வாழ்க்கையை நெறிப்படுத்தியதன் காரணமாக கேள்விக்கு விடை சுருக்கமாக சொல்கிறேன். உலகில் தோன்றிய மதசாத் திரியரில் ஒருவராக யேசுநாதரை கருதுகின் றேன். அவரை பற்றி எண்ணி வருகின்றேன். என்பதை ஒரு வாக்கியத்தில் மிகவும் தாழ் மையுடன் தெரிவித்து கொள்கிறேன். என் இதயத்தில் உணருவதை நான் அப்படியே இந்த எளிய வாக்கியத்தில் தெரிவித்துவிட் டேன். என்பதை காட்டவே “தாழ்மையோடு” என்ற சொற்தொடரை உபயோகித்தேன். நான் இந்து என்ற முறையில் கிறிஸ்தவன் அல்லாதவன் என்று உணருவதைக் காட்டி லும் கிறிஸ்தவராய் உள்ளவர்கள் யேசுநாத ருக்கு நல்ல இடம் கொடுப்பார்கள் என்பது உண்மை. மகான்களுக்குறிய இடம் இதுதான் என்று குறிப்பிட்டுச் சொல்லத்தக்க இறுமாப்பு எனக்கோ வேறுயாருக்கும் இருக்காது. மனித சமுதாயத்திற்கு வழிகாட்டிய மகான்களுக் குரிய ஸ்தானம் பிறர் வழங்குவதால் ஏற்படு பவை அன்று. அவர்கள் செய்துள்ள தொண் டைப் பொறுத்தும் உரிமையைப் பொறுத்தும் அந்த ஸ்தானங்கள் தாமாக வந்து விடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றன. மனித சமுதாயத்திற்கு உபதேசம் செய்த பெரியவர்களுக்கும் நமக்கும் உள்ள தொடர்பு கணவனுக்கும் மனைவிக்கும் உடையதை போன்றது. எனது இதயத்தில் என் மனைவிக்கு எத்தகைய ஸ்தானத்தை கொடுக்க வேண்டும் என்று தக்கரீதியாக விவாதிப்பேன் ஆயின் அதைவிட பயங்கர மான உயிர்க் கொலை வேறொன்றுமில்லை. அவளுக்குறிய ஸ்தானத்தை நான் கொடுப்ப தில்லை. தனக்குள்ள உரிமை காரணமாக அவளே ஸ்தானத்தைப் பெறுவாள். எனவே யேசுநாதரை மதச்சாத்திரியர் என எண்ணு கின்றேன். கொஞ்ச நேரத்துக்கு கிறிஸ்தவர் களை அப்படியே விட்டு விடுவோம்.

இந்த பாடசாலையில் முக்கால் வாசிப் பேர் இந்துக்கள். அவர்கள் அனைவரும் கிறிஸ்து நாதரின் போதனைகளை விரும்பி படிக்க வேண்டும். எந்தச் சமயத்தவராயினும் சரி எல்லோரும் பிற சமயத்தார் போதிப்பதை ஆழ்ந்து படிக்க வேண்டும். அப்படி படித்து உள்ளத்தை குறுகவிடாமல் விரிவுபடுத்த வேண்டும். சமயங்களைப் பொய் என்று சொல்லவில்லை, அனைத்துமே மனித சமு தாயத்தை வழிப்படுத்துகின்றன. தோட்டிக்கு நிகராக நீங்களும் இதயத்தை பரிசுத்தப் படுத்தி தயாராக வைத்தால் அழைப்பு அனுப் பாமலே பெரிய பெரிய மதச்சாத்திரியர்கள் உங்கள் இதயத்தில் வந்து அமர்ந்துகொள் வதை நீங்கள் காணலாம். நீங்கள் பரிசுத்தம் அடைவதற்கு கடவுள் அருள் புரிவாராக'' என்ற உரையை ஆற்றியிருந்தார்.

இந்தியா சென்றவுடன் காந்தியின் செயற் பாடு சிவில் சட்டத்தை மீறுவதாகும். இவ் வியக்கம் பாதயாத்திரைகளினால் உரு வானது. உப்பு வரி சட்டத்தை மீறுவதற்கு சபர்மதி ஆச்சிரமத்திலிருந்து தண்டி யாத் திரை மேற்கொள்ளப்பட்டது. இதனால் காந்திக்கு மக்கள் ஆதரவு கிடைத்தது. இந் திய காங்கிரஸ் கலந்து கொண்ட 1வது வட்ட மேசை மாநாடு தோல்வியடைந்தது. சிறை யில் பல வருடத்தை கழித்த காந்தி சிறை யிலேயே "சத்திய சோதனை" எனும் புத்த கத்தை எழுதினார். ஆளுநர் இர்வின் காந்தி யுடன் இணக்கத்திற்கு வந்தார். மக்களுக்கு எதிரான சட்டங்களை ஆளுநர் நீக்கியதால் காந்தி சட்டம் மீறும் போராட்டத்தை கைவிட் டார். 2ம் வட்டமேசை மாநாட்டில் சாதிமுறையிலான தொகுதி பிரிக்கப்பட்டது. இதனால் 2ம் மேசை மாநாடும் தோல்வியில் முடிந்தது. இந்தியர்களது பிரச்சினையை தீர்க்க ''சேர்ஸ்டெ பெர்கிரிப்ஸ்'' என்பவரால் யாப்பு எழுதப்பட்டது. இதனை "எதிர்காலத் திகதி இல்லாத காசோலை'' என குறிப்பிட் டார். 1937ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் காந்தியின் காங்கிரஸ் எட்டு மாநிலங்களை கைப்பற்றியது. 1942ம் ஆண்டு புரட்சி ஏற்பட் டது. காந்தியடிகளுடன் பம்பாயில் பல தலை வர்களும் சேர்ந்து "வெள்ளையனே வெளி யேறு" என குரல் எழுப்பினர். எங்கும் குழப் பம் கலவரம் உண்டாகியது. ஆட்சியாளர் களின் அடக்கு முறை தாண்டவம் ஆடியது. காந்தியடிகள் 112 இறாத்தல் தான் ஆனால் அவர் காலடியில் பல ஆங்கிலக் காடையர் கள் மடங்கி மாண்டனர். 1944ம் ஆண்டு காந்தி விடுதலையானார்.

காந்தியின் நடத்தை பற்றி சொல்வதா னால் காந்தி இயற்கையோடு ஒன்றிணைந்து காணப்பட்டார். இவர் வேப்பிலை சம்பல் செய்து உண்ணுவார். இதனை மக்கள் வேடிக் கையாக பார்ப்பதுண்டு. சிலர் நக்கலாக "வெள்ளாட்டின் பாலை குடித்த காந்தி", வெள்ளாட்டின் தீனியை உண்கிறார் காந்தி", "பச்சை புல்லில் நல்ல சத்து என்று காந் திக்கு தெரிந்தால் மக்களையும் தரையில் மேயும் படி சொல்லுவாரோ" என கதைப் பதுண்டு. ஒரு நாள் அவரது நண்பர் அவ ரிடம் "உங்கள் போராட்டம் எப்படி மக்களது ஒத்துழைப்பு எப்படி" என்று கேட்டார். அதற்கு காந்தி "எல்லா இந்தியரும் சேர்ந்து துப் பினால் துப்பல் வெள்ளத்தில் 3 இலச்சம் வெள்ளையர்கள் மிதப்பார்கள் என சொன் னார்.

காந்தி அவர்கள் சுருக்கமாகத் தான் கடிதம் எழுதுவார். பெரிய கடிதம் வந்தால் குப்பை தொட்டிக்குள் போடுவாராம். தெளி வற்ற கையொப்பமிட்டால் அக்கையொப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தை மட்டும் கிழித்து திருப்பி தபாலில் அனுப்புவார். "இக்கடிதம் பிடித்திருந்தால் பதில்போடவும் பிடிக்காவிட்டால் கிழித்தெறியவும்" என எழுதுவார். ஒரு பத்திரிகையாளன் பிரித்தானியர் அல்லது மக்களிடம் சிக்க வைப்பதற்கு உங்கள் காங்கிரஸ் வரும் தேர்தலில் வெற்றி பெறுமா?" என கேட்டான். இக்கேள்விக்கு ஆம் என்றால் பிரித்தானியர்களால் துன்புறுத்தப்படும். இல்லை என்றால் மக்கள் வெறுப்புறுவார், காந்தி நிதானமாக பத்திரிகையாளனே தங்களுக்கும் மந்திரியாகும் ஆசை உள்ளதோ" என்று கேட்டார். பத்திரிகையாளனைக் காணவே இல்லை. இவரது எளிமையை பற்றிச் சொல்வதென்றால் வட்டமேசை மாநாட்டுக்கு காந்தி செல்கையில் பிரித்தானியரால் உயர்தர உடை வழங்கப்பட்டது. அப்போது காந்தி "நாம் உலகின் ஏழ்மைபட்ட நாட்டின் உறுப்பினர் அல்லவா இந்த ஆடையை அணிய என்ன தகுதி உள்ளது" என்று சொல்லி கதர் ஆடையுடனே சென்றார்

மகாத்மா காந்தி நான்கு ஐந்து வரிகளில் கடிதம் எழுதுவார் எடுத்து காட்டாக "இதுவா கிறிஸ்தவனின் நடவடிக்கை?, இது நியாயமா?, இது நீதியா?, பதிலை எதிர்பார்க்கிறேன்" மற்றைய தலைவர்களது ஒத்துழைப்பாலும் 1947 ஆகஸ்ட் 15ம் திகதி அன்று இந்தியா சுதந்திரம் பெற்றது. காந்தி அவர்கள் முகமது அலியின்னாவுடன் செய்த ஒப்பந்தத்தால் இந்துக்களின் புனித நகராகிய சிந்துவெளியை முஸ்ஸீம்களுக்கு பாகிஸ்தான் என எழுதிக் கொடுக்கப்பட்டது. இதன் விளைவாக காந்தி அவர்கள் 1948.01.30 திகதி பிரார்த்தனையில் இருந்த போது "விநாயகம் கோட்சே" என்ற இந்து வாலிபரால் சுடப்பட்டார். காந்தி அவர்கள் இறக்கும் போது ''ராம்ராம்'' என்ற ஓசையுடன் இறந்தார். இப்படி ஒரு அகிம்சைவாதியை இனி வரும் உலகம் நம்புமா நம்புவதற்கு இவ் ஆக்கம் அத்தாட்சி...

தே.தனோஜன்
மாணவ முதல்வன் 2014-2015

**Student:** ஏன் டீச்சர் மகாத்மா காந்தியோட தலைல ஒரு முடியும் இல்ல...?


**Teacher:** ஏன்னா அவர் எப்பவுமே உண்மையத்தான் பேசுவார். அதுதான் அப்பிடி.

**Student:** ஓ! இப்பதான் எனக்கு ஏன் பொம்பளைங்களுக்கு பெரிய முடி எண்டு புரியுது !!!.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# How to Be a Good Prefect




Becoming a Prefect is a great way to end time at your school, and is a massive advantage for you in the future. Research shows that many successful business people held positions of responsibility while they were at school, and schiil prefect looks. Greate on anyone's CV. So if you were one if the lucky ones, congratulations!

1. Maintain discipline. Prefects have advantages over teachers in that the younger children look up to them, as a result keeping the rules is a much easier jop for prefects than it is for teachers.

2. Help staff. Prefact is one of the top roles a student can have at a school. You are now working with the teachers to create a better place to learn, and a mature, helpful prefect is sure to be trusted.

3. Support younger pupils. The knowledge that there are prefects willing to help will be very reassuring to newer pupils, and they will count on you to live up to their expectations as someone that can help them.

4. Be approachable. The kind and friendly prefect will gain the most respect. Offiering help to those that might need, it is better than waiting to be asked, and more often than not your offers will be taken up appreciatively.

5. Be involved. Prefects are given a lot of responsipility in the form of organizing and running events for parents and pupils of the school. It raises your prefect profile and impresses teaching staff, and also puts you in good stead for the future. Colleges and employers are keen to see examples of people that have been involved in voluntary school activities.



6. Practice good communication skills. The key is to be approacha -ble. Whether it is to students, or visitors. The steps above requi -re communica tion to be clear and confident.

A confident perfect someti -mes needs to be something you learn how to become. Meeting with fellow prects, teachers, visitors and perents can help build yo your cofidence within school. Observe how they react to you, and change your communication skills accordingly to become the best prefect you can be.

7. Enjoy it! Many new students are very impressionable, and meeting a confident, helpul prefect can be something they will remember when they apply for the position in years to come.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அவமானமல்ல அடையாளம்

தமிழ் எம்தாய்மொழி. எம்மைப் பெற்றெடுத்த தாய் எம்மைத் தாலாட்டியதும் தமிழ் மொழியிலே தான். நாம் தமிழ்மொழியிலே சிந்திக்கின்றோம். தமிழ்மொழியிலே பேசுகின்றோம். அதற்கு தமிழ்மொழியின் சிறப்பினையும் பெருமையும் அறிவது அவசியமாகும்.




*"எண்டிசையும் புகழ் மணக்கும் எழிற்றமிழ்*
*கண்டோர் விரும்பும் கன்னித்தமிழ்*
*கவினூறு செந்தமிழ், முருகனும் முக்கண்மூர்த்தியும் ஆய்ந்த தமிழ்,*
*தெள்ளுதமிழ், தேன்தமிழ், செந்தமிழ் நம் இன்பத்தமிழ்"*

அகிலமெல்லாம் புகழும் எம் தமிழன்னை மொழி இன்று உலகம் ஏத்தும் செம்மாழியாய் பெருமை பெறுகிறாள். என்று நினைக்கும்போது எம் உள்ளமெலாம் புளகாங்கிதம் அடைகிறது.

இந்த உலகத்திலே வழங்கிவரும் ஆயிரமாயிரம் மொழிகளுள் தமிழ்மொழி தொன்மையானது. தமிழ்மொழியின் அருமையும், பெருமையும், சொல்லிலடங்காச் சிறப்புடையன. இலக்கிய நூல்களையும் இலக்கணங்களையும் கொண்ட எம் தாய்மொழியின் இனிமை தெவிட்டாதது. அது சாகா மருந்தெனும் அமிர்தத்துக்கு ஈடானது. தமிழின் சுவையை எடுத்துரைக்கப்புறப்பட்ட பாரதி தாசன் என்ற பைந்தமிழ்ப் புலவன், “தமிழுக்கும் அமுதென்று பெயர், அந்ததமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்” என்று எழுச்சியோடு பாடுகிறான்.

பொதுவாக மனிதனின் சிந்தனை வளர்ச்சிக்கு சிறப்பான வாழ்க்கைக்கும் அவசியமானது அவன் பேசுகின்ற மொழிதான். மக்கள் தம் பேச்சும், மூச்சும், விச்சும் அவர் பேசும் மொழியில்தான் தங்கியிருக்கின்றது என்பார்கள். இனத்தின் அடையாளமும் அவர் பேசும் மொழிதான். இஸ்லாமியர் என்று மதத்தால் இனத்தால் வேறுபட்டாலும் அவர்களும் தமிழர்களே என்பார்கள். அந்த அடிப்படையில் உயிருக்கு நிகரான தம்மொழியை பண்டைய சான்றோரும் மூதாதையரும் பாராட்டி சீராட்டி பேணி வந்திருக்கிறார்கள்.

தமிழுக்கு இனிமை என்றொரு பெயருண்டு. இயலென்றும் இசையென்றும் நாடகமென்றும் வகுத்து இனிய தமிழை முத்தமிழ் எனப்போற்றிய தமிழ் மக்கள் கண்ட தமிழ் மொழியால் கலை பல கற்றனர். கலை ஞானம் பெற்றனர்.

தண்டமிழ்ப் புலவன் பாரதி, “இவள் என்று பிறந்தவள் என்றறியாத இயல்பினளாம் எங்கள் தாய்” என்று இறுமாந்து பாடுகிறார். எனவே தான் அவள் இன்றும் கன்னித்தமிழ் என்று பாடுகிறார். தமிழின் இனிமையில் கவரப்பட்டார். பலமொழிகளில் பயின்ற பாரதி ஒருவரால் தான்

*"யாமறிந்த மொழிகளில் தமிழ்மொழிபோல்*
*இனிதாவது எங்கும் காணோம்"*

என்று அருமைத்தமிழின் இனிமையைப் பாடமுடிந்தது. பாரதி பிறமொழிகளோடு தமிழை ஒப்பீடு செய்து பெருமை கொள்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழிலுள்ள இலக்கியங்களுள் மிகப் பழமை வாய்ந்தவை சங்க இலக்கியங்கள். இலக்கியங்கள் தோன்றிய காலத்தை சங்க காலம் என்போம். அக்காலத்திலே வாழ்ந்த அறிவில் சிறந்த புலவர்கள் பாடிய செய்யுள் களிற் பெரும்பான்மையானவை காலத்தால் அழிந்துபோய் விட்டன எனச் சொல்லப்படு கின்றது. எஞ்சியவைதான் எமக்குக் கிடைக் கக்கூடிய எட்டுத்தொகையும், பத்துப்பாட்டு நூல்களும் ஆகும். இவை பழந்தமிழ் மக் களின் வீர வாழ்க்கை மற்றும் காதல் ஒழுக் கம் கூறுவனவாகும்.

தமிழன்னைக்கு அணிசெய்யும் ஐம் பெரும் காப்பியங்கள், உலகையே ஒரு குடைக்குக் கீழ் கொண்டு வந்த திருக்குறள், இலக்கண நூலாம் தொல்காப்பியம், அகத்தி யம், வீரசோழியம் என்றிவை எல்லாம் தமி ழுக்கு அணி செய்த அற்புதமான நூல் களாகும்.

தமிழ் இலக்கிய வரலாற்றை ஆராய்ந் தெழுதிய சான்றோர்கள், சங்ககாலம், சங்க மருவிய காலம், பல்லவர் காலம், சோழர் காலம், நாயக்கர் காலம், ஐரோப்பியர் காலம் இருபதாம் நூற்றாண்டின் தமிழ் இலக் கியங்கள் வாயிலாக தொன்று தொட்டு வாழ்ந்துவரும் தமிழ்மக்களின் வாழ்வியல் விசித்திரங்களை எமக்கு காட்டியிருக்கிறார் கள் என்றால் முறையாகாது.

தமிழ்மொழியை பிழையறப்பேசவும், பிழையற எழுதவும், நாம் முயல வேண்டும். தமிழிலே உள்ள பல்வேறு பழந்தமிழ் இலக் கியங்களை, இலக்கண நூல்களையும், நவீன அறிவியல் பொக்கிஷங்களையும், நாம் விரும் பிக் கற்க வேண்டும். கற்றபடி ஒழுகுதலும் வேண்டும்.

சூ. சுரேஸ்நாத்
மாணவ முதல்வன் 2014-2015

கற்பு நெறியிலிருந்து ஆண்களும் பெண்களும்
தவறுவது தான் ஒரு நாட்டின்
அழிவிற்கு முதல் அறிகுறியாகும்.
சமுதாயத்தில் கற்புநெறி தவறுதல் என்னும் கேடு
நுழைந்துவிட்டால், அச்சமுதாயத்திற்கு
அழிவுகாலம் நெருங்கிவிட்டது
என்றுபொருள்.
தனிமனித ஒழுக்கத்தின் அடிப்படையில் தான்
ஒருநாட்டின் எதிர்காலமே அடங்கியிருக்கிறது.



-சுவாமி விவேகானந்தர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சியாட்டல் தலைமைத்துவத்தின் தனித்துவச் சின்னம்

சீயாட்டல் என்பவர் 1780ம் ஆண்டு வொஷிங்டனில் ப்ளேக் தீவில் பிறந்தார். சியாத்ல், சீஆத், சியாலத் என்றபெயர்களால் அழைக்கப்பட்ட இவர் சுதேச செவ்விந்தியர் களின் தலைவராக விளங்கினார். இவர் சியாட்டல் என்ற பெயராலேயே பிரபல மானார். டார்வின் பரிணாமக்கொள்கையை முன்வைக்கும் முன்னரே சியாட்டல் உயிரி னங்களுக்கு இடையிலான தொடர்பினை விளங்கிக் கொண்டதாக சியாட்டலால் அமெரிக்க ஜனாதிபதி ஃபிராங்ளின் பியார் ஸிக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்திலி ருந்து தெரியவருகின்றது. அமெரிக்க பூர்வீகக் குடிகளாகக் கருதப்படுகின்ற செவ்விந்தியர் களின் வசம் எஞ்சியிருந்த நிலப்பரப்பையும் விலைக்குத் தந்துவிடுமாறு கோரப்பட்டிருந்த அந்த இக்கட்டான தருணத்தில் தலைவர் சியாட்டல் அங்கு கூடியிருந்த மக்கள் மத்தி யில் ஈடு இணையற்ற ஓர் உரையை நிகழ்த் தினார், இன்றுவரை அந்த உரை புகழ்பெற்ற இலக்கியத் தரம் வாய்ந்த உரையாகவே கருதப்படுகின்றது.

வொஷிங்டனில் வாழும் வெள்ளை யர்களின் தலைவர் எமதுநிலங்களைப் பணம் கொடுத்துவாங்குவதற்கு விரும்புவ தாகத் தெரிவித்துள்ளதுடன், எம்முடனான நட்பையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார். அமெரிக்கத் தலைவரின் வேண்டுகோள் தொடர்பாக, எமது கவனத்தைத் திருப்பியுள் ளோம். எமது நிலங்களை நாம் வெள்ளை யர்களுக்குவிற்காவிடின், அவர்கள் ஆயத பலத்தால் அதனை அபகரிப்பார்கள் என் பதில் சந்தேகமில்லை. எனினும், நீலநிற வானத்தையும் வளமானநிலத்தையும் பணம் கொடுத்துவாங்கமுடியுமா...? இதனை என்னால் புரிந்துகொள்ளமுடியவில்லை. காற்றின் தூய்மையும் நீரின் குளிர்மையும் எம்முடையதல்ல. அவ்வாறாயின், நீங்கள் அதனை எவ்வாறு விலை கொடுத்து வாங்க முடியும்..?

இந்த நிலத்தின் ஒவ்வொரு அங்குல மும் எனது மக்களுக்குப் புனிதமானது. மரங் களும் கடற்கரைகளும், வெற்றுத்தரை களும், அடர்ந்த காடுகளும், மேகங்களும், ஓசையெழுப்பும் சிறு உயிரினங்களும் என் மக்களின் மனதிலும் அவர்கள் பெற்ற அனு பவங்களிலும் தூய்மையானவையாகும். இவை அனைத்தும் செவ்விந்தியரின் நினை வுச் சின்னங்கள். வெள்ளையர்களின் விண் ணில் நட்சத்திரங்களில் காலடிவைக்க முனையும் போது, தாம் பிறந்த மண்ணை மறந்துவிடுகின்றனர். எனினும், எமது முன்னோர்கள் ஒருபோதும் இந்த மண்ணை மறந்து விடவில்லை. ஏனெனில், இது செவ் விந்தியரின் பூர்வ ஜென்ம பூமியாகும்.

நாங்கள் பூமியின் ஒருபிரிவாகும். பூமி எங்களில் ஒருபிரிவு. மணந்தரும் மலர்கள் எம் சகோதரிகள். மான்களும், கழுகுகளும், குதிரைகளும் எம் சகோதரர்கள். மலை களில் ஊற்றெடுத்து, புற்றரைகள் மற்றும் வனாந்தரங்கள் வழியாகப் பாய்ந்து ஓடும் நீரும் மனிதனும் மிருகங்களும் ஒரே குடும் பத்தின் உறுப்பினரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது நிலங்களைப் பணங்கொடுத்து வாங்குவதற்கு வெள்ளையர்களின் தலைவர் விரும்புகின்ற போதிலும், அந்த வேண்டு கோளை எம்மால் நிறைவு செய்வது கடின மான செயலாகும். பிரச்சினையின்றி நாம் வாழ்வதற்குத் தகுந்த இடத்தை ஒதுக்கித் தருவதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார். அவ்வாறாயின், அவர் எம் தந்தையாவார். நாம் அவரது மக்களாவோம். ஆதலால், அவரது வேண்டுகோள் தொடர்பாக நாம் சிந்தித்துப் பார்ப்போம். எனினும்,அது எமக்கு எளிதான செயலன்று. ஏனெனில், இந்த நிலம் எமது புனித சொத்தாகும்.

ஆறுகளும் ஓடைகளும் பாய்ந் தோடும் நீரும் வெறும் நீரூற்றல்ல. அவை எம் முன்னோரின் இரத்தமாகும். நாங்கள் எங்கள் நிலங்களை உங்களுக்கு விற்போ மாயின், அவை எமக்குத் தூய்மையானவை என்பதை நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு விளக்கிக் கூற வேண்டும். எமது நிலத்தில் அமைந்துள்ள ஒவ்வொரு நீர்த்துளியும் எம் மக்களின் வாழ்வின் பல்வேறு சம்பவங்களை வெளிப்படுத்தும் நினைவுச் சின்னங்களாகும். அவை எம் மூதாதையரின் குரலொலியாகும். ஆறுகள் எம் சகோதரர்கள். அவை எம் தாகத்தைத் தணிக்கின்றன. எம்பிள்ளை களைப் போஷிக்கின்றன. ஆறுகள் உங்கள தும் சகோதரர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். எனவே, உங்கள் சகோதர ருக்குக் காட்டும் அன்பை இவற்றுக்கும் காட்டுவதற்கு மறந்துவிடாதீர்கள்.

காலையில் சூரியன் உதிக்கும் போது, மலைகளிலுள்ள பனித்துளிகள் மறைந்து போவதுபோல, வெள்ளையர்களின் ஆக்கிர மிப்பின் முன் செவ்விந்தியர்கள் எப்போதும் பின்வாங்கினர். அவர்களது மயானங்கள் அவர்களுக்குப் புனிதமாவதுபோல எமது நிலம் எமக்குப் புனிதமானதாகும். வெள்ளை யர்களால் எமது பழக்கவழக்கங்களைப் புரிந்து கொள்ளமுடியாது என்பதை நாம் அறி வோம். நிலம் அவர்களுக்கு நண்பரன்று. ஓர்



இடத்தை வெற்றிகொள்ள அவர்கள் முன்னோக்கிச் செல்கின்றனர். அவர்கள் தம் முன்னோரின் மயானங்களை எவ்வித கவலையுமின்றி கைவிட்டுச் செல்கின்றனர். நிலத்தைப் பறித்துக்கொள்கின்றனர்.

நீலவானத்தையும் தாயாக விளங்கும் பூமியையும் பணம் கொடுத்து வாங்கும் பொருளாக அவர்கள் எண்ணுகின்றனர். இத னால், அவர்கள் ஒருநாள் இந்த நிலத்தை அழித்துப் பாலைவனமாக மாற்றுவர். வெள் ளையர் அங்கு அமைக்கும் நகரங்கள் எமக்கு வேதனையைத் தரும். செவ்விந்தியர் களாகிய நாங்கள் உங்கள் பழக்கவழக்கங் களை அறியாத மிலேச்சர்களாக இருக்கக் கூடும். அந்நகர்களில் அமைதியான சூழ லைக் காணமுடியாது. ரீங்காரமிடும் தேனீக் களின் ஓசையை கேட்கமுடியாது. இதற்குப் பதிலாகப் பாரிய ஓசைகளையே கேட்கமுடி யும். உயிரினங்களின் இனிமையான ஓசை யைக் கேட்கமுடியாதவிடத்து, அவ்வாறான சூழலில் வாழ்வதால் என்ன பயன்?

செவ்விந்தியர்களாகிய எமக்கு எமது சுற்றாடலில் இருந்து கிடைக்கும் காற்று மிகவும் பெறுமதி வாய்ந்ததாகும். ஆனால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளையர்கள் இதனை உணர்வதில்லை. எமது முன்னோர் பிறந்தது முதற்கொண்டு இறக்கும் போதுவிடும் இறுதி மூச்சுவரை இந்த நிலத்துடன் கலந்துள்ளது. நாங்கள் எங்கள் நிலங்களை உங்களுக்கு விலைக்கு விற்போமாயின், நீங்கள் அதனைத் தூய பூமியாக வைத்துக் கொள்ளவேண்டும். அப் போது மலரும் பூக்களிலிருந்து வெளிவரும் வாசனையுடனான காற்றை சுவாசிக்க வெள்ளையர்களாலும் முடியும்.

நிலத்தைப் பணங்கொடுத்து வாங்கும் உங்கள் வேண்டுகோளை நாங்கள் ஏற்போ மாயின், நீங்களும் எங்கள் நிபந்தனை ஒன்றை ஏற்கவேண்டும். அதாவது, வெள்ளை யர்களாகிய நீங்கள் இப்பூமியில் வாழும் சகல மிருகங்களையும் உங்கள் சகோதரர் களாகக் கருதவேண்டும். ஓடும் புகை யிரதத்திலிருந்து வெள்ளையர்கள் துப்பாக்கி யால் சுடுவதால், ஆயிரக்கணக்கான காட் டெருமைகள் இறப்பதனையும் அவற்றின் உடல்கள் உக்கிச் செல்வதையும் நான் கண் டேன். உயிரற்றவைகளைவிட, உயிருள்ள மிருகங்கள் பெறுமதி வாய்ந்தவையாகும். மிருகங்கள் இல்லாத இடத்தில் மனிதனின் நிலை என்ன…? அனைத்து மிருகங்களும் இவ்வுலகிலிருந்து பிரிந்துசென்றால், மனிதன் வேதனையால் மடிந்து விடுவான். ஏனெனில், மிருகங்களுக்கு ஏற்படும் எல்லா விபத்துக் களும் மனிதனுக்கும் ஏற்படலாம். என்ற உரையை செவ்விந்திய மக்கள் முன்னிலை யில் ஆற்றியிருந்தார். செவ்விந்திய மக் களின் தலைவரான சியாட்டல் அவர்கள் பாரம்பரியம், மண்பற்று, நாட்டுப்பற்று, இறை யாண்மை சகோதரத்துவம், தனது இனம், இயற்கையை வணங்குதல் என்பன தனது கடமை, பொறுப்பு என்பதை உணர்ந்து செயற்பட்டிருப்பதை இந்த உரையூடாக அறியலாம்

சி.தயாளன்
மாணவ முதல்வன் 2014-2015

## தலை நிமிர்ந்திடும் தலைவனே

நாம் செல்வது
பாதையினை வகுத்த
பயணம்…
தலைவனின் தலைமைத்துவத்தின் தார்மீகக்
கடமையை எண்ணி
வகுக்கப்பட்ட வழியில்
துலங்குகின்றோம்.
எண்ணியதை முடிப்பதெல்லாம்
எம் பொறுப்பு
நாம் கற்றதெல்லாம் மத்திய கல்லூரி
என்னும் அட்சய பாத்திரத்தினில்
அல்லவா?
மாணவர் படைகளை அணிவகுத்து
பார்வையால் ஒழுங்கமைத்து
முடியாத வழக்கெனினும்
முடித்து வைக்க
நடந்தோம் தலைநிமிர்ந்து
முடியாத வழக்கெனினும்
முடித்து வைக்க
நடந்தோம் தலைநிமிர்ந்து
நகர்ந்தன வருடங்களிரண்டு..
மகர யாழ் மீட்டும்
மத்தியின் புதல்வனை
நாளை வரும் காலத்தில்
நம் கொள்கை
நலம் உரைக்கட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் வேலை வாய்ப்பும் வேலையின்மையும்

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் அந்நாட்டின் ஊழியப்படையின் முக்கியத்துவம் குறிப்பிடத்தக்கதாகும். இலங்கையில் ஊழியப்படையானது 15 வயதும் அதற்கு மேற்பட்ட வேலை செய்யக்கூடிய சனத்தொகையிலுள்ள மக்கட் பிரிவினரையும் உள்ளடக்குகின்றது. எனினும் இவ்வரைவிலக்கணங்கள் நாட்டிற்கு நாடு வேறுபடுகின்றன. இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் ஊழியப்படையினை வரைவிலக்கணம் செய்வதில் காலத்திற்கு காலம் வேறுபட்ட அணுகுமுறைகள் பின்பற்றப்பட்டு வந்தமையால் அது தொடர்பான கால அடிப்படையிலான ஒப்பீடுகளைச் செய்வது சிரமமானதாக உள்ளது.

அண்மைக் காலத்தில் இலங்கையின் ஊழியப்படை தொடர்பான தரவுகளினை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| ஆண்டு | ஊழியப்படையில் பங்கு கொள்ளல் வீதம் | வேலையின்மை வீதம் |
|---|---|---|
| 1990 | 51.9 | 15.9 |
| 2001 | 48.1 | 7.9 |
| 2005 | 48.3 | 7.2 |
| 2006 | 51.0 | 6.5 |
| 2007 | 49.8 | 6.0 |
| 2008 | 50.2 | 5.2 |
| 2009 | 49.9 | 5.7 |
| 2010 | 48.6 | 4.9 |
| 2011 | 47.8 | 4.2 |
| 2012 | 52.6 | 3.9 |
| 2013 | 53.8 | 4.4 |

அண்மைக் காலங்களில் இலங்கையில் ஊழியப்படையில் பங்கு கொள்வோர் வீதமானது 48% - 54% இடையிலான வீச்சுக்குள் உள்ளதாக அட்டவணை காட்டுகின்றது. இவ் ஊழியப் படையானது 2013ம் ஆண்டில் உயர்வடைந்து தொழில்புரியும் மற்றும் தொழிலற்றோர் ஆகிய இரு தரப்பினரிலும் அதிகரிப்பை ஏற்படுத்தியது. இங்கு ஊழியப்படையில் பங்கு கொள்ளல் வீதமானது ஊழியப்படையினை வேலை செய்யக் கூடிய வயது சனத்தொகையின் வீதாசாரமாக குறிப்பிடுவதாகும். தொழிற்படை பங்கேற்பு வீதம் 2012 இல் 52.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2013ம் ஆண்டு 53.8 சதவீதமாக அதிகரித்தது. அதிகரித்த தொழிற்படை பங்கேற்பு வீதமானது தொழில் சந்தையில் கூலி அழுத்தத்தை தணிப்பதனால் இது வரவேற்கத்தக்க அபிவிருத்தியாகும்.

இலங்கையின் வேலைவாய்ப்பு நிலைமையில் ஏற்பட்ட மாற்றங்களை நோக்குவோமானால், வேலைவாய்ப்பு என்பது ஆய்வு மேற்கொள்ளப்படும் தினத்திற்கு ஒரு வாரத்திற்கு முந்திய காலப்பகுதியில் நபரொருவர் ஒரு மணித்தியாலம் அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதியில் பணரீதியான அல்லது வேறு கொடுப்பனவின் பொருட்டு அல்லது கொடுப்பனவைப் பெறாமல் குடும்பத்தின் பொருளாதார முன்னேற்றம் கருதி வேலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபடுகின்ற நிலைமையினைக் கருதும். அந்த வகையில் இலங்கையின் வேலைவாய்ப்புக் கட்டமைப்பினை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| துறை | 1946 | 1981 | 2006 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|---|---|
| விவசாயம் | 53% | 51% | 32% | 33% | 33% | 31% | 30% |
| கைத்தொழில் | 10% | 20% | 27% | 24% | 24% | 26% | 26% |
| சேவை | 37% | 29% | 41% | 43% | 43% | 42% | 44% |
| மொத்தம் | 100% | 100% | 100% | 100% | 100% | 100% | 100% |

## இலங்கையின் தொழில் நிலைக்கட்டமைப்பு (சதவீதம்)

| வகை | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|
| அரசதுறை ஊழியர் | 16 | 14 | 14 | 15 | 15 |
| தனியார்துறை ஊழியர் | 42 | 41 | 41 | 41 | 41 |
| தொழில் தருநர் | 3 | 3 | 3 | 3 | 3 |
| சுயதொழில் புரிவோர் | 29 | 32 | 32 | 32 | 32 |
| சம்பளம் பெறா குடும்பத் தொழிலாளர்கள் | 11 | 10 | 11 | 9 | 9 |

அட்டவணையின் படி இலங்கையின் வேலைவாய்ப்பு கட்டமைப்பில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளமை தெளிவாகின்றது. தொழில் வாய்ப்பு தரும் துறை என்ற வகையில் 2013ம் ஆண்டில் சேவைகள் துறையானது கூடுதலான பங்களிப்புச் செய்துள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பும் முக்கிய வேலைவாய்ப்பு மூலதாரமாக உள்ளது. 2010ம் ஆண்டில் 267507 பேரும் 2011ம் ஆண்டில் 262961 பேரும் 2012ம் ஆண்டில் 282447 பேரும் 2013ம் ஆண்டில் 293105 பேரும் வெளிநாட்டு வேலைவாய்புப் பெற்றுச் சென்றதாக மத்திய வங்கி அறிக்கை கூறுகின்றது.

இலங்கையில் மத்திய வங்கியின் நுகர்வோர் நிதி மற்றும் சமூக ஆய்வின்படி வேலையற்ற நபர் என்பது குறிப்பிட்ட காலப்பகுதியொன்றில் கூலி அல்லது சம்பளத்தின் பொருட்டு அன்றேல் இலாபத்தின் பொருட்டு அல்லது குடும்ப பொருளாதார நிலையை மேம்படுத்தற் பொருட்டு யாதேனுமொரு தொழிலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் நபரொருவரைக் கருதும் மொத்த ஊழியப்படையில் இவ்வாறு வேலையற்ற நிலையில் உள்ள நபர்களின் சதவீதத்தினை வேலையின்மை வீதம் எனக்குறிப்பிடப்படுகின்றது. இலங்கையின் வேலையின்மையின் போக்குகளை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

| ஆண்டு | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 1963 | 15.3% | 20.0% | 16.6% |
| 1990 | 11.8% | 23.4% | 15.9% |
| 2000 | 5.8% | 11.1% | 7.8% |
| 2009 | 4.3% | 8.6% | 5.8% |
| 2010 | 3.5% | 7.7% | 4.9% |
| 2011 | 2.7% | 7.0% | 4.2% |
| 2012 | 2.9% | 6.2% | 4.0% |
| 2013 | 3.2% | 6.6% | 4.4% |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணையின் படி இலங்கையின் வேலையின்மை வீதம் படிப்படியாக குறைந்து சென்றுள்ளமை தெளிவாகின்றது. ஆண்களோடு ஒப்பிடுகையில் பெண்கள் மத்தியிலான வேலையின்மை சார்பளவில் மிக உயர்வாக உள்ளமை அவதானிக்க முடிகிறது. அண்மைய ஆண்டுகளில் வேலையின்மை வீதத்தில் கணிசமானளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதற்கான காரணங்களாக தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டமை, அரசதுறையில் அதிகளவானோர் இணைத்துக் கொள்ளப்பட்டமை, ஊழியச் சந்தை பற்றிய தகவல்கள் பரவலாக தொழில் தேடுவோருக்கு கிடைக்கின்றமை, தொழில் சார் மற்றும் ஆயத்தப்படுத்தற் பயிற்சி வகுப்புக்களின் விரிவாக்கம் போன்றவற்றினைக் குறிப்பிடலாம்.

இலங்கையில் நிலவும் வேலையின்மையில் இளைஞர்களுக்கிடையிலான வேலையின்மை குறிப்பிடத்தக்கதாகும். 2012ம் ஆண்டு தரவுகளின் படி 15 - 29 வயது பிரிவினரிடையிலான வேலையின்மை 43% ஆகவும் 30 - 39 வயது பிரிவினரிடையிலான வேலையின்மை 3% ஆகவும் 40 வயதுக்கு மேற்பட்ட பிரிவினருக்கிடையிலான வேலையின்மை 1% ஆகவும் இருக்கின்றது.

மேலும் இலங்கையில் நிலவும் வேலையின்மையில் கற்றோர் மத்தியில் நிலவும் வேலையின்மையும் குறிப்பிடத்தக்கதாகும். கல்விப் பொதுத்தராதரப் பத்திர சாதாரண மற்றும் உயர்தர, அதற்கு மேற்பட்ட தகைமை கொண்டோர் மத்தியிலான வேலையின்மை 2012ம் ஆண்டில் 14% ஆக இருந்தது. இவ்வாறு கற்றோர் மத்தியில் வேலையின்மை உயர்வாக இருப்பதற்கு கல்விசார் திறன்களுக்கும் தொழில் தேவைப்பாடுகளுக்கும் இடையில் நிலவும் பொருத்தப்பாடின்மை, அரச தொழில்களை எதிர்பார்த்துக் காத்திருக்கும் தன்மை போன்ற காரணிகளைக் குறிப்பிடலாம். அண்மைக் காலத்தில் வேலையற்ற பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்பட்டு வருகின்ற போதிலும் அவர்களின் வினைத்திறன் பற்றி அநேக குறைபாடுகள் நிலவுகின்றன.

இலங்கையின் வேலையின்மையில் ஒப்பீட்டுரீதியில் ஆண்களை விட பெண்களே அதிகளவில் வேலையற்ற நிலையில் காணப்படுகின்றனர். 2012ம் ஆண்டில் ஆண்களின் வேலையின்மை 2.9% ஆக இருக்க பெண்கள் மத்தியில் இது 6.2% ஆக இருமடங்கிற்கு மேல் அதிகரித்து காணப்பட்டது.

இவ்வாறாக இலங்கையின் வேலையின்மையின் பண்புகளை இனங்காண முடியும். இலங்கையில் வேலையின்மை பிரச்சினையினை தீர்க்க பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அந்த வகையில் தனியார் துறையிலும் அரசதுறையிலும் முதலீட்டு மட்டங்களை உயர்த்துதல், வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை அதிகரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களை பிராந்திய மட்டத்தில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்தல், பொருளாதார நடவடிக்கைகளை துரிதப்படுத்தல், தொழில் வாய்ப்புக்கு பொருத்தமான வகையில் கல்விச் சீர்திருத்தங்களை மேற்கொள்ளல், ஓய்வு பெறும் வயதெல்லையை மாற்றியமைத்தல், தேசியரீதியில் ஊழியச் செறிவுடைய உற்பத்திகள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்படல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

நன்றி

இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை

த.சுபேசன்
மாணவ முதல்வன் 2014-2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பல்லவர் காலப் பக்தி இலக்கியம்

சிம்ம விஷ்ணு கி.பி 375 தொடக்கம் கி.பி 882 நிருபதுங்கன் வரை தமிழ் நாட்டிலே பல்லவர் ஆட்சி நடை பெற்று வந்தது. இக் காலப்பகுதியே தமிழ் இலக்கிய வரலாற்றில் பல்லவர் காலம் என அழைக்கப்பட்டது. பல்லவர் காலம் தமிழர் தம் சமய வராலாற்றில் மிகமுக்கியமான காலப்பகுதியாகும். வைதீக சமயங்கள் பலவகையிலும் தமது திறன்களைப் புலப்படுத்தியமை இக்காலப் பகுதியிலே எனலாம்.

தமிழ் மக்களின் வாழ்க்கை வரலாற்றிலே சங்ககாலம் பலவகையிலும் முக்கியம் பெற்ற காலமாகக் கருதப்படுகின்றது. சங்க கால இலக்கியப் பண்புகளிலே சிறப்பானவையாக கருதப்பட்டவை அகமும் புறமும் எனலாம். சங்ககாலத்தை அடுத்துவரும் காலப் பகுதியிலே அகம், புறம் ஆகிய பண்புகளை விட அறநீதிக் கருத்துக்களே முக்கியம் பெறுகின்றன. சங்ககால மக்களின் வாழ்க்கையின் குறைபாடுகளே சங்கமருவிய காலத்தில் அறநீதிக் கருத்துக்கள் பெரும்பான்மையும் தோன்றக் காரணம் என்பர். ஓயாத போர்களாலும் நிறைவேறாத காதல்களாலும் விரக்தியுற்ற சங்ககால மக்களுக்கு சஞ்சீவியாக பௌத்தமதக்கருத்துகள் அமைந்தன.

சங்ககால மக்களின் வாழ்க்கை முறை, களப்பிரரின் ஆட்சி, சமண பௌத்தத் துறவிகளின் அயராத உழைப்பு முதலிய பல அம்சங்களினால் தமிழ் மக்கள் மத்தியில் அறநீதிக் கருத்துக்கள் விரைவாக வேர்விட்டுக் கிளை பரப்பின. மக்களைப் பார்த்து மன்னனும் மன்னனைப் பார்த்து மக்களும் சமண சமயத்தின் பாற் சேர்ந்தனர். தமிழ் நாட்டு மக்களும், நாடும் சமண சமயத்தின் உறைவிடமாகியது.

வீறுபெற்று வளர்ந்த சமணத்தையும் இதன் வளர்ச்சியையும் கண்டுமனம் பொறுக்காத வைதீக சமயத்தினர் தம்மிடையேயுள்ள முரண்பாடுகளை மறந்து தமது பலமான எதிரியாக சமணத்தைக் கருதினர். எதிரியை அழித்தொழிக்கத் திட்டமிட்டு வைதீகசமணத்தினரின் இயக்கம் செயற்படத் தொடங்கியது. இவ்வியக்கம் பலமான தமது எதிரிகளை அமுக்கத்தக்க பல்வேறு வழிவகைகளையும் கையாண்டது. அக்கால அரசியல் சமூக வரலாற்றுப் பின்னணியிலே ஆழ்வார்களும் நாயன்மார்களும் தீவிரமாகச் செயற்பட்டமையையே இலக்கிய வரலாற்றாய்வாளர்கள் பக்தி இயக்கமென அழைக்கின்றனர்.

பல்லவர் காலப் பக்தி இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டு தலைமை தாங்கியவர்களாக சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் முதலிய நாயன்மார்களையும் பெரியாழ்வார், நம்மாழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார் முதலிய ஆழ்வார்களையும் குறிப்பிடலாம்.

தமிழ் நாட்டில் பக்தி இயக்கத்திலே பெண்களும் ஈடுபட்டுள்ளனர். தீவிரமான பக்தி இயக்கத்திற்கு பக்க துணையாக திலகவதியார், மங்கையற்கரசியார் முதலிய பெண்கள் மகத்தான பங்களிப்பை நல்கியுள்ளனர். இவர்களுக்கு முன்னோடியாக காரைக்கால் அம்மை யாரைக் குறிப்பிடலாம். நிலைபெற்ற சமண பௌத்த மதங்களை தமிழ் நாட்டிலிருந்து அகற்ற ஆழ்வார்களும், நாயன்மார்களும் திட்டமிட்டே இயங்கினார்கள் என்பதைப் பக்திப்பாடல்களை நுணுகக் கற்றோர் உணர்வர். வைதீக சமயங்கள் அருகிப் படிப்படியாக மறையுமென சமணர்கள் நம்பினர். இந்த நம்பிக்கை பொடிப்பொடியாக, சமண பௌத்தத்தை படிப்படியாக அழித்தொழித்த பெருமை ஆழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்களையும், நாயன்மார்களையும் சாரும். சமண மதத்திலிருந்து தமிழ் மக்களை மாற்று வதற்குப் பல கவர்ச்சியான பிரச்சார உத்தி களை பக்தி இயக்கக்காரர்கள் கையாண் டனர். பக்தி இயக்கம் பலம் பெற தமிழ் மக்களின் பலவீனங்களே ஆயுதங்களாகப் பயன்பட்டன.

எக்காலத்திற்கும் எந்தத் தேசத்திற் கும், மொழிப்பற்று பொதுவானதாகவும் மக்களை எழுச்சிகொண்டு ஒன்றிணைய வழிப்படுத்துவதுமாகும். தமிழ் மக்களுக்கு உரித்தானது வைதீகசமயம் என்று, சிவத் தமிழ் அறிந்த கடவுள் என பக்தி இயக்கத் தினர் வலியுறுத்திக் கூறினர். முத்தமிழ் வல்ல ஞானசம்பந்தர் பாடல் "கலை தமி ழோடு இசைபாடல் மறந்தறியேன்.", "தமிழ் துறைவாய் நுழைந்தனையோ இறைவா" போன்ற தொடர்கள் பல இடங்களில் இடம் பெற்றுள்ளன. எமது கடவுள், எமது மொழி எனப் பற்று மேலிட்ட மக்கள் அனந்தியக் கடவுள் அந்நியமொழி என்ற உணர்வு தூண்டப்பட்டமையால் சமண பௌத்தத்தை விட்டு சைவத்தின் பாற்சேர்கின்றனர். பக்தி இயக்கத்தினர் கையாண்ட உத்திகளிலே இவர்கள் பிரயோகித்த மொழிப்பற்று வெற்றி பெற்ற தென்றே கருதவேண்டும்.

மொழிப்பற்றுப் போலவே பக்தி இயக் கத்தின் வளர்ச்சிக்குப் பிரதேசப்பற்றினையும் கையாண்டனர். தமிழ் மக்களின் பிரதேசங் களில் இயற்கை வனப்பையும், செழிப்பையும் புகழ்ந்துபாடி இங்கேதான் இறைவன்



எழுந்து குடியிருக்கின்றார் என்று பாடி யுள்ளார்.

"மாவின் கனி தூங்கும் பொழில் மாதோட்டம்", "நிரைகடல் ஓரம் நித்திலம் கொழிக்கும் கோணமாமலை", "சிலமந்தி அலமந்து மரமேறிமுகில் பார்க்கும் திருவை யாறு" போன்ற ஆறயிரக்கணக்கான உதார ணங்களை சுட்டிக்காட்டலாம். எமது நாடு, எமது மண், எமது இறைவன் எனப்பற்றுக் கொண்டதமிழ் மக்கள் சமண பௌத்த மதங் களை அந்நியர்களாகவே கருதினர். இத னால் சமணத்திலிருந்து சைவத்திற்கு மாறு வது தவிர்க்கமுடியாததாகின்றது எனலாம்.

சமணமதம் இறுக்கமான கொள்கை களையும் கடுமையான துறவையும் கடைப் பிடித்து பக்தி இயக்கத்தினர் தமது மதங் களிலே இவ்விறுக்கப் பண்புகளை அகற்றித் தளர்த்தினர். குடும்ப வாழ்க்கை, திருமணம் செய்தல் முதலியவற்றை சமணம் விமர் சித்தது. சைவம் இறைவனையே குடும்பத் தலைவனாகவும், உலகறிய மணம் புரிந்த வனாகவும் நிலைநிறுத்தியது. "மாதர் பிறை கண்ணி யானை மலையான் மகளோடும் பாடியே" பக்தி இயக்கத்தினர் காட்டும் நெகிழ்ச்சியால் ஈர்க்கப்பட்டு பலர் சமண பௌத்த மதத்தினை விட்டு சைவத்தின்பாற் சேர்ந்தனர். பக்தி இயக்கம் பலவகை நெகிழ்ச்சியையும் சைவத்திற்குப் புகுத்தி யமை இன்று அதன் பலமாகவும் பலவீன மாகவும் காணப்படுகின்றது எனக் கருதலாம். சமணபௌத்த கருத்துக்களுக்கு மாறாக பக்தி இயக்கத்தினர் செய்த பிரச்சாரத்திற்கு பலவகையான உதராணங்களைச் சுட்டிக் காட்டலாம்.

சமணர் உயிர்க் கொலையை வன்மை யாகக் கண்டித்தனர். ஆனால் பக்தி இயக்கத் தினர் அதிலேயும் ஒருவித நெகிழ்ச்சியைக் கண்டனர். "ஆவுரித்து தின்றுழலும் புலைய ரேனும் கங்கைவார் சடைக் கரந்தார்க்கு அன்பராகில் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளரே" என பக்தி இயக்கத்தினர் பிர கடனப்படுத்தினர். சமணத்தின் பாற் சேர்ந்திருந்த பலரால் இந்நெகிழ்ச்சித் திட்டம் சமணத்திற்கு முழுக்குப் போட உதவி யிருக்கலாம் எனக் கருதியிருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாம் எடுத்த முயற்சியினை வெற்றி கரமாக முறியடிக்க பக்தி இயக்கத்தின் பல்வேறு வகையான அற்புதங்களையும் செய்து காட்டினர். அற்புதங்கள் மிகவும் இலகுவாக மக்கள் மனதைக் கவரக்கூடியன. ஆழ்வார்களினதும், நாயன்மார்களினதும் வாழ்க்கை வரலாற்றிலே அற்புதம் கலவாத பகுதியே இல்லை எனலாம். அற்புதங்களைக் கண்டு பலர் மதம் மாறினர். பக்தி இயக்கத் தினர் தமது நெறியினை வெற்றிகரமாக முன்னெடுக்க கலைகலாசார நிகழ்வுகளிலும் அவற்றை பேணுவதிலும் இறைவனோடு தொடர்புபடுத்துவதிலும் மும்முரமாக ஈடுபட் டனர். "நாடகம் சாராமை நன்று" என்று சமணம் போதிக்க இறைவனையே நாடக வேந்தன் என்று பக்தி இயக்கத்தினர் பாடினர். கலைகலாசார நிகழ்வுகளும் மக்கள் மனதை மாற்றி சமணத்தில் வெறுப்பை ஏற்படுத்தியது எனலாம். பொதுமக்களினையும் அவர்களது கலைபண்பாட்டம்சங்களையும் அங்கீகரித்து பலர் இலக்கியமாக்கி பக்தி இயக்கத்தூடாக தமது கருத்துக்களையும் நிறைவேற்றினர். நாட்டாரியல், நாட்டின் வரலாறு முதலிய வற்றை தமது பக்திப் பாடல்களிலே பயன் படுத்தினர். அம்மானை, ஊஞ்சல், தாலாட்டு, முதலிய நாட்டார் இலக்கிய வடிவங்களில் பக்தி இயக்கமும், பக்தி இயக்கத்தினரும் கையிலுயர்ந்தனர். சிறப்பான இலக்கியமாக மாறின. இத்தகைய பண்பிலே ஈர்க்கப்பட்ட சாதாரண மக்கள் சமண, பௌத்தத்தை விட்டு சைவத்தின் பாற் சேர்ந்தனர். எனக் குறிப்பிடலாம்.


பக்தி இயக்கத்தினை தமது எண்ணத்தினை, இலகுவாக மக்கள் மத்தி யில் பரப்ப மேற்காட்டிய வழிகளைக் கையாண்டனர். சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியோரின் பண்புகளால் அனைத்தையும் உள்வாங்கி மாணிக்கவாசகர் பக்தி இயக்கத் தில் மணி முடியாகத் திகழ்கிறார் எனலாம்.

தமிழ் மக்களின் வாழ்க்கை வரலாற் றிலே பண்டுதொட்டு நிலவிவந்த இலக்கிய பாரம்பரியம் முழுவதையும் அனுசரித்து அதன் உள்ளத்தைப் பேணித் தமது நோக் கத்தினை நிறைவேற்றியவர்களுள் மாணிக்க வாசகர் சிறப்பாகக் குறிப்பிடக்கூடியவர்.

"அம்மை நீ அப்பன் நீ அன்புடைய மாமனும் மாமியும் நீ" என்று சாதாரண மனித உறவு நெறியிலே சிவபிரான் அழைக்கப் பட்டபோதிலும் மாணிக்கவாசகரே தலை வனின் அன்பை ஏற்படுத்தும் தலைவியாகத் திகழ்கிறார். பக்தி இயக்கத்தின் உலகக் காட்சியினை இது காட்டுகிறது.

பெண்களைச் சமணம் இழித்துக் கூற, இறைவனை "பெண் சுமந்த பாகத் தன்" எனச் சிருஷ்டித்தமை பக்தி இயக் கத்தின் வெற்றியையே சுட்டிக்காட்டுகின்றது. இன்று வரை தமிழ் நாட்டில் சைவத்தை எதிர்த்து சமணமும் பௌத்தமும் மேற்கிளம்ப முடியாமல் இருப்பதற்கு பக்தி இயக்கத்தினரின் இடையறாத உழைப்பும், விவேகமும் காரணம் எனலாம்.

சி. சுசிகரன்
மாணவ முதல்வன் 2014-2015






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# "You All Can"

Leadership is a word that has been made popular and discussed by everyone these days. Everyone thinks that it is something related to high level. People think that it is a possession of political leader or something related to the business world. For students, it is a world with difficulties, which remembers them a commanding, voice or strict look of a prefect. Therefore, everyone just wants to escape from the particular wold of leadership as it has been portrayed, related with shouldering burdens and facing challenges, But it is completely wrong and it is the quality every human should possess and that is why I urged to write this essay just to express vividly that you all can!

Society is a formation of many interrelated groups. Anyway a human has to interact with the groups of people. Those ancient days gave opportunities to people to cultivate the quality of leading as they lived by colonies. The person who inbornly had the quality of dominating and commanding ruled others. The people of past, lived under the shadow of a man who was physically fit and mentally sharp. This was the situation a long ago. But, now the hectic world forces everyone to build up leadership qualities.

Whether it is good or bad, the globalization made people united together. It is the Information age where we live in. Hence everyone has to have relationships with others . The modern social theories never allow a human to be isolated or separated from others. To compete with this challenging world, and to match up to its speed, everyone has to build up them selves.

**"Here, I remember Ralph waldo Emersons words.**
**We are always getting ready to live but never live"**

But just think of its right ? Being possessed all resources and the sixth sense, as humans, can we live meaningless? We shouldn't….hence, every younger one must practice good leadership qualities from their school life… because.

***'That it will not come again***
***Does that make life so sweet'***

Emily Dickinson briefs my view. Let us peep into the matter. It is said that a leader should possess some special qualities or, those who possess some certain qualities become a leader. Sociologists have defined many theories for a leader. Balance theory of leadership says he must have balanced personality skills. A leader must have some features which the followers don't have says Uniqueness theory. According to In- sight theory of leadership a quick problem solver becomes as a leader, while the ability in disability Theory of leadership defines that one specializes in a certain field and becomes a leader to equalize his disability in another field.

Now, it is the time to know, what are the features of a leader. Generally a leader is an intellectual. It may be inborn or gained by reading wide range of books. Knowledge is not limited to theory level but also includes the power of thinking, ability of making conclusions and boldness. Here it is noticeable that Lyndon .B. Johnson says.

**"A president's hardest task is not to Do what is right, but to know What is right"**

Next, a leader has to have moral qualities. Honesty, trustfulness and non



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

selfishness are such. There is no doubt that no one will pay respect to those who behave wrongly. Then, a leader should have a good physical condition, as it is important for the health of mental condition. Hence, he will be able to be smart and steady. And he has to be mentally fit and never scare about to meet criticisms both appreciating and condemning.

The last but not least feature said by the sociologists is the guts of taking responsibility. It can be observed in today's school children how immensely they think and hesitate to take a responsibility.

But a leader must be prepared to shoulder any responsibilities and he must have a challenging mind.

With all of these, he needs little knowledge of common human psychology by either experience or practice, to understand others move. It is a must that a leader oughts to obey others feelings. And it is sure those will help him to preview and plan his activities.

Now let us turn our eyes on how to adopt above Charafteristics. It is not a hard thing to obtain above qualities.

Let the windows of your hearts be open, let the wind blow from all directions.'

Gandhiji directs the path

"It is not good to look ourselves on mirror continuously, but to open, the windows and to look at the world.."

Says Emerson.

Hence, it has been made clear that a good observation on our surrounding environment will bring us many distinctions, We can see from the biographies at the great people that they speak seldom and listen a lot.

Listen to everyone. Pick up the good things in elders words as they are pearls of experience.

Experiences are combs for a bold head hence, try hard to gather experience . Books are treasures, giving you massive knowledge untiringly. Zest on getting knows about novel things and never consoled thirst on pursuit as piration; zeal and enthusiasm in making new paths ; a good fluency in language those all will enlight you as a leader.

Do dream

Says Dr.A.P.J. Abdul Kalam says to youths. The main problem in today's younger people is that they quickly become weary and ill of defeats. They stragger to step their foot as they see everything disparately and frustrated. They must remember John. Fletchers words that there are no gains without pains They must face every defeat with Challenging mind. A positive and easy taking mind will break all the barriers and touch the victory post.

**Smile increases value of face;**
**Anger spoils beauty of soul;**
**Faith is force of life;**
**Confidence is companion of success.**

Hence, let your lips smile; Straight your shoulders; make your voice sweet but commanding and charming, then step your feet in the path of life steady and strong, as every one of you are the leaders of future; authors of the history; measons of tomorrow... but you must remember.

***"Angels can fly because they take themselves lightly...."***

G.K. Chesterton

N.Shanmugarajah
Prefect 2014- 2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அனலிலும் அரும்பிய அறிவாலயம்

**ஓர் வரலாற்றுப் பார்வை.**

யாழ்ப்பாணத்துப் பொதுசன நூலகம் 11.11.1933 அன்று உதயமாகி முதலில் ஒரு கொட்டிலில் தவழ்ந்து, பின்னர் ஒரு கடையில் எடுத்தடி வைத்து, இன்னோர் கடையில் சிறுநடை நடந்து, ஒரு வீட்டின் மாடியில் ஓடியாடித் திரிந்து, தற்போது ஒரு அழகிய மாடிக்கட்டத்தில் ஒளிவீசி உலகப் புகழ் பெறுகின்றது.

1842 ஆம் ஆண்டு பெரிய நீதிமன்ற காரியதரிசியாக இருந்த F.C.கிறீனியர் எனும் பெரியாரால் சிறிய நூலகம் ஒன்று உருவாக்கப்பட்டது. அப்போது அதை நூலகம் என்பதிலும் பார்க்க வாசகர்சாலை என்று கூறுவது பொருத்தமாக இருக்கும். இது காலப்போக்கில் வலுவிழந்து போனாலும், இவரது இச்செயற்பாடே இன்றைய யாழ்ப்பாண பொது சன நூலகம் எனும் பெருவிருட்சம் உருவாகுவதற்கு வித்தாக அமைந்தது.

சிறிது காலத்தின் பின்னர் அச்சுவேலியைச் சேர்ந்த க.மு.செல்லப்பா அவர்கள் யாழ் மாவட்ட நீதிமன்றத்தின் “சங்கடத்தார்” எனும் காரியதரிசி பதவியில் இருந்த போது தமிழருக்கு அறிவு புகட்டும் வகையில் நூல்நிலையம் ஒன்று அமைய வேண்டும் என எண்ணி 11.12.1933 இல் “யாழ்ப்பாணத்துக்கு ஒரு மத்திய இலவச தமிழ் வாசிகசாலையும் நூற்கழகமும்” என்ற தமிழ்த் தலைப்பிலும், “A Central Free Tamil Library in Jaffna” என்ற ஆங்கிலத் தலைப்பிலும் விண்ணப்பப் பத்திரங்களை யாழ் மக்கள் மத்தியில் தமிழிலும், ஆங்கிலத்திலும் வெளியிட்டார். மேலும் “இந்து சாதனம்” எனும் தமிழ்ப் பத்திரிகையிலும் “Ceylon Pre Press” எனும் ஆங்கிலப் பத்திரிகையிலும் விளம்பர வடிவில் விண்ணப்பித்திருந்தார்.

இங்கனம் விண்ணப்பித்திருந்த செல்லப்பா அவர்கள் 1934.06.09 சனிக்கிழமை பிற்பகல் 03.00 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் யாழ் மக்களின் பகிரங்கக் கூட்டம் ஒன்றைக் கூட்டினார். அக்கூட்டத்தில் முக்கிய நிகழ்வாக நூலக சபை ஆரம்பித்தலும், உத்தியோகத்தர் தேர்வும், அமைப்பாளர் செல்லப்பா அவர்களின் அறிக்கை படித்தலும், பெரியவர்களின் பேச்சும் நடைபெற்றன.

அந்த வகையில் நிர்வாக சபை உறுப்பினராக 1943, 1944 களில் யாழ் மத்திய கல்லூரியின் அதிபராகவிருந்த திரு.J.W.அருட்பிரகாசம், சென் ஜோன்ஸ் கல்லூரி அதிபர் A.M.K.குமாரசுவாமி, பரமேஸ்வராக் கல்லூரி அதிபர் நடேசம்பிள்ளை, மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் ப.வீரசிங்கம், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி உபஅதிபர் K.V.செல்லையா போன்றவர்கள் தெரிவு செய்யப்பட்டவர்களில் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

அன்றைய முடிக்குரிய புறொக்ரர் கனகசபை அவர்கள் வாசிகசாலை உருவாகுவதைப் பிரேரணை ஒன்றின் மூலம் முன்மொழிந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"That a Central Free Tamil Library Association be formed with the original Subscribers and Others who are present at this meeting as original members of the Association".

இப்பிரேரணையை நிர்வாக சபையினரான வட மாநிலக் கல்வியதிகாரி K.S.அருணந்தி அவர்கள் வழிமொழிந்ததால் பிரேரணை ஏகமானதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஆரம்பத்தில் மத்திய நூல்நிலைய சங்கத்தார் தங்கள் நூலகத்தை ஆஸ்பத்திரி வீதியிலுள்ள அகன்ற பெரிய வாடகைக் கடை ஒன்றில் 01.08.1934 இல் ஆரம்பித்தனர். இந் நூல்நிலையத்தை 01.01.1935 முதல் நகரசபையினர் (ஏபன் டிஸ்ரிக் கவுன்சில் - The Urban Distric Council - UDC) பொறுப்பேற்றுக் கொண்டனர்.

நூலகத்தை நகரசபையிடம் கையளித்தல் தொடர்பாக சபையினரிடம் இருந்து கருத்தறிவதற்கு கூட்டிய விஷேட பொதுக்கூட்டம் 20.12.1934 வியாழக்கிழமை மாலை யாழ் மத்திய கல்லூரியில் வணக்கத்திற்குரிய கலாநிதி தம்பையா தலைமையில் கூடியது.

அக்காலத்தில் நூலகத்தில் இருந்து நூல்களை வாசிப்பதோடு, தாம் விரும்பிய இரு நூல்களை இரவல் எடுத்துப்போகும் முறையும் நடைமுறைக்கு வந்தது. நூலகத்தில் அங்கத்தவராய் சேர்வதற்குரிய விண்ணப்பப் படிவத்தில் பெயர், இருப்பிட விபரத்துடன் நம்பிக்கைக்குப் பொறுப்பான ஒருவரும் நகரசபை எல்லையினுள் வீடு, நிலம் உள்ளவர் ஒருவரும் நற்சாட்சிகளாகப் பிணையொப்பம் இட்டால் ஒருவரின் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பெற்று அங்கத்துவ இலக்கம் வழங்கப்படும். அங்கத்துவம் பெற்றவர் ஒருமுறையில் இரு நூல்களை இரவல் எடுத்து 14 நாட்கள் படித்துப் பயன்பெறலாம். வேறொருவரிற்கும் அந்நூல் தேவைப்படாத விடத்து மீண்டும் 14 நாட்களுக்கு இரவல் எடுக்கலாம்.

நூல்களை இரவல் எடுப்பதும், மீளக் கொடுப்பதும் பெரிய ஏட்டில் பதியப்படும். இக்காலத்தில் நிலவிவரும் "Card" முறை அக்காலத்தில் நடைமுறைக்கு வரவில்லை.

நூலகம் 1981 ஆம் ஆண்டில் எரிந்த போது, அதில் நூல்களை இரவல் பெற்று பயன்பெறுவோர் தொகை ஏறக்குறைய 10,000 அளவில் இருந்தது.

நூலகத்தில் நூல்களை வாசித்தல், இரவல் எடுத்தல் என்பன 1938 பெப்ரவரி மாதம் வரை இலவசமாகவே நடைபெற்றன. பின்னர் ரூபா 3 ஐ செலுத்தி அங்கத்தவராக சேரவேண்டியிருந்தது.

நூலகத்தில் வங்காளத்தில் எழுந்த பெரும் இலக்கியங்களின் மொழிபெயர்ப்புக்களான விஷவிருட்சம், ஆனந்தமடம் போன்றவையும் தாகூரின் ஆங்கில நூல்களும், வணக்கத்திற்குரிய கலாநிதி தம்பையா அவர்களால் கிடைத்த இலக்கியம், சமயம், தத்துவம், மொழியியல் போன்ற பல விடயங்களை உள்ளடக்கிய 6000 நூல்களும், இலங்கை வாழ் இந்தியர்களால் வழங்கப்பட்ட மகாத்மாகாந்தியடிகளின் "சத்திய சோதனை" எனும் தொடரில் அமைந்த பெருந்தொகையான நூல்களும் வேறுபல இந்திய நூல்களும் இருந்தன.

இவ்வாறு நூலகம் படிப்படியாக வளர்ச்சியடைந்து செல்லுகையில் அரச நகர் நிர்மாண நிபுணர் திரு.வீரசிங்கா அவர்கள் யாழிற்கு வந்து நகரின் நான்கு மூலைகளையும் நன்கு ஆராய்ந்து நூலகம் நகரின் நடுவில் அமையவேண்டும் எனக்கூறி முனியப்பர் கோவிலுக்கு கிழக்கில் இருந்த அக்கால முற்றவெளியை நூலகம் அமைப்பதற்கு சிறந்த இடமாக தெரிவுசெய்தார்.

அந்த வகையில் நல்ல நேரத்தில் சைவாசார முறைப்படி அத்திவாரம் வெட்டி பத்திரிப்பு வரை கட்டியபின் அடிக்கல் நாட்டு விழா 29.03.1954 அன்று நடைபெற்றது.

நூல்நிலைய சங்கத்தலைவர் மாநகரசபை முதல்வர் சாம் சபாபதி அவர்கள், வணக்கத்திற்குரிய தந்தை லோங் அவர்கள், மாட்சிமை தங்கிய பிரித்தானிய ஸ்தானிகர் சேர் செசில் செயஸ் அவர்கள், மாட்சிமை தங்கிய அமெரிக்கத் தூதுவர் H.E.பிலிப்குறோவ் அவர்கள், மாட்சிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கிய இந்தியத் துணைத்தூதுவரின் முதற் செயலாளர் ஸ்ரீ சித்தார்த்த சாரி அவர்கள் ஆகிய ஐவரும் அடிக்கற்களைத் திறந்து திரை நீக்கம் செய்து வைத்தனர்.

இவ் அடிக்கல் நாட்டுவிழாவின்போது அமெரிக்க உதவியாக 22,000 டொலர் கிடைத்தது. இது அக்கால இலங்கை நாணய மதிப்பில் 104,000 ரூபாவாகத் திரண்டது. 1966 ஆம் ஆண்டில் அமெரிக்காவினால் 11,000 ரூபா உதவியாகக் கிடைத்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. மேலும் இந்தியாவின் நன் கொடையாக 10,000 ரூபாவும் இவ் அடிக்கல் நாட்டுவிழாவின்போது கிடைக்கப்பெற்றது.

அமெரிக்காவின் நன்கொடைப்பணம் தமிழிலும் ஆங்கிலத்திலும் நூலக வாசல் முகப்பில் தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளது.

"A generous gift of 104,000 by the Asian foundation formed the nucleus of the fund for the construction of this Library"

இந் நூல்நிலையக் கட்டடத்தை நிர்மாணஞ்செய்த கட்டிடக்கலை நிபுணர் நரசிம்மன் அவர்கள் தமிழ், இந்துப் பண்பாடு, நவீன பொறியியல் அமைப்பு ஆகியவற்றை மனதிற்கொண்டு 16.10.1950 இல் நூலகக் கட்டமைப்பை வடிவமைத்தார். தேவாலயம், வித்தியாலயம் போலவே நூலகமும் ஒரு ஆலயம் என்பது இவரது உளப்பிரதிபலிப்பு.

இந்நூலக கட்டடப்பணிக்கான நிதி யினை சேகரிப்பதற்காக 1952, 1954, 1959, 1963 ஆகிய ஆண்டுகளில் விநோத காணிவேல் விழாக்களும் களியாட்ட நிகழ்வு களும் நடைபெற்றன. அது மட்டுமல்லாது அதிஷ்ட இலாபச் சீட்டுக்களை விற்பனை செய்து நிதியினைப்பெற்றதுடன் அதிஷ்டப் பரிசில்களாக 3 புதிய கார்களையும் வழங் கினார்கள். மேலும் யாழ் மத்திய கல்லூரி மாணவர்களும், அயற்பாடசாலை மாணவ மாணவியரும் சேர்ந்து உண்டியல் குலுக்கி ஓரளவு தொகையை பெற்றுக்கொடுத்தனர்.

பழைய வகைக் கட்டத்திலேயே நடைபெற்று வந்த இந்நூல்நிலையம் 17.10.1958 முதல் யாழ்ப்பாணம் பொதுசன நூல்நிலையம் எனப் பெயர்பெற்றது. பழைய மாடியில் இடப்பற்றாக்குறை காரணமாக 11.10.1959 இல் குறிப்பிட்ட சில பகுதி கட்டி முடிக்கப்பட்டிருந்த புதிய கட்டிடத்திற்கு குடி பெயர்ந்து திறப்புவிழா கொண்டாடப்பட்டது. நூலகத்தை ஆல்பிறெட் தங்கராசா துரையப்பா அவர்கள் உத்தியோக பூர்வ மாக திறந்து வைத்தார். இச் சம்பவத்தின் நினைவுச்சின்னம் நூலகத்தில் பின்வருமாறு பொறிக்கப்பட்டுள்ளது.



"This Public Library was opened by Alfred. T. Durayappah J.P.U.M Mayor of Jaffna on the 11th of October 1959."

நூல்நிலையம் இடம்மாற்றப்பட்ட காலத்தில் ஏறக்குறைய 16,000 நூல்கள் அங்கு இருந்தன. இவற்றில் மிகவும் பழை மைவாய்ந்த நூல்களும், ஓலைச்சுவடிகளும் அடங்கியிருந்தன. அந்தவகையில் "பிலிப் புஸ் பல்டியஸ்" என்பவரால் 1672 இல் எழுதப்பட்ட ஒல்லாந்தர் கால இலங்கை வர லாறும், அவரிற்கு முன் 1660 இல் கண்டி மன்னரால் சிறைவைக்கப்பட்டிருந்த "றொபேர்ட் நோக்ஸ்" என்பவர் எழுதிய இலங்கை வரலாறும் இப் பொதுசன நூலகத் திற்கு எப்படியோ கிடைத்திருந்தன. இவை யாவும் முதற்பதிப்புடையன என்ற பெருமை யையும் பெற்றிருந்தன. இவைதவிர 1586 இல் எழுதப்பட்ட கத்தோலிக்கப் பெரியவர் களைப் பற்றிய வரலாற்றைக் கூறும் ஸ்பானிய மொழியில் தலையங்கத்துடன் கூடிய தமிழ் நூல் ஒன்றும் இங்கு இருந் துள்ளது. இவ்வாறான மிகப்பழைமை வாய்ந்த நூல்களுடன் வேறுபல 600 வரையான நூல்கள் நூலக உடனுதவும் பகுதியில் பாதுகாக்கப்பட்டிருந்தன. மேலும் தொல் காப்பிய உரைகள், பெரியபுராணத்திற்கு ஆறுமுகநாவலரின் உரை, சேர்.பொன். அருணாசலம் அவர்களின் அறிக்கைகள், அவர் பேசிய பேச்சுக்கள், பல மொழி பெயர்ப்பு நூல்கள், சேர்.பொன்.இராமநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களினுடைய பகவத்கீதை விளக்கம், சித்தாந்தமயமான உரை நுட்பம், செந்தமிழ் இலக்கணம், லேடி இராமநாதன் எழுதிய இராமாயண மொழிபெயர்ப்புக்கள், மகாகவி பாரதியாரின் நண்பர் நெல்லையப்பரின் நூல்கள், ஆங்கிலத்தில் அவ்வப்போது வெளிவந்த பிரித்தானியக் கலைக்களஞ்சியங்கள், அமெரிக்கக் கலைக்களஞ்சியங்கள் என மிக பழைமை வாய்ந்த அரிய நூல்கள் யாவும் இந்நூலகத்தில் அறிவுப்பசி போக்கிய வண்ணம் இருந்தன.

இந்தவகையில் அக்கால நூலகர் திருவாளர் வே.இ.பாக்கியநாதன் அவர்கள் உயர் வகுப்பு மாணவர்கள் தங்கள் மேற்படிப்புக்கு வேண்டிய அறிவைப் பெறுவதற்கும், உடனுதவும் நூல்களை வசதியாக அமர்ந்து படிப்பதற்கும் வாய்ப்பாகத் தனி மேசை கதிரைகளை தரமான தேக்கில் 45,000 ரூபா செலவில் நகரசபையைக் கொண்டு செய்வித்தார்.

நூல்களோடு நூல்களாக பழைய பனையோலை ஏடுகளும் நூலகத்தில் சேர்க்கப்பட்டிருந்தன. இவை சோதிடம், வைத்தியம், அறிவியல், வரலாறு, விவசாயம், புதைபொருள், சைவம், செந்தமிழ் ஆகிய விடயங்களின் முக்கியத் தன்மையை இவ்வுலகிற்கு பறைசாற்றி நின்றன.

08.10.1954 இல் நிர்வாகக் குழுக்கூட்டம் பாக்கியநாதன் தலைமையில் கூடியது. இதன்போது கொழும்பு மாநகரசபையின் நூலகம் அனுசரித்துவந்த "Card" முறையை இங்கும் நூல்களைக் கையாளுதல், இரவல் கொடுத்தல் முதலியவற்றிற்கு பிரயோகித்தல் வேண்டுமென்றும், நூலகத்தின் உத்தியோகத்தர் தொகையினை அதிகரித்தல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

அன்றுவரை நூலகர் ஒருவர், உதவியாளர் ஒருவர், இரு மேற்பார்வையாளர்கள், இரு காவலாளிகள், மூன்று தொழிலாளர்கள் என ஒன்பது பேர் மட்டுமே பணிபுரிந்தனர். இது வளர்ந்து வந்த வேலைப்பழுவிற்கு போதாமல் இருந்தது. இளைஞர்கள் நூல்களில் இருந்து முக்கியமான பக்கங்களை திருட்டுத்தனமாகக் கிழித்துச் செல்வதால் மேற்பார்வையாளர்கள் மேலதிகமாக நியமனம் பெறவேண்டிய அவசியம் இருந்தது.



மேலும் நூலகத்தை கையாளுவதற்கு ஆணையாளரிடம் மட்டுமே இருந்த அதிகாரங்கள் ஓரளவிற்கு நூலகரிடமும் வழங்கப்படவேண்டும் என்றும், சிறுவர் நூலகம் ஒன்று உருவாக்கப்படல் வேண்டும் எனவும், வேலை நாட்களில் ஒருநாளில் நூலகத்தை பூட்டிவைக்க வேண்டுமென்றும் இக்கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. அந்தவகையில் ஞாயிற்றுக்கிழமைகளில் திறந்து புதன் கிழமைகளில் மூடுவதற்குத் தீர்மானித்தனர். இத்தீர்மானம் நாளடைவில் திங்கட்கிழமைகளில் மூடுவதற்கு இணக்கங்கண்டது.

மற்றும் கட்டிமுடிக்கப்படாத நூலகத்தின் எஞ்சியபகுதி மிகவிரைவில் கட்டிமுடிக்கப்பட வேண்டுமெனவும், இரவல்பெற்ற நூல்களை அங்கத்தவர் இரு வாரங்களினுள் கையளிக்காவிட்டால் தண்டப் பணமாக 5 சதம் அறவிடப்படும் என்றும், நூலகத்திற்கு தேவையான தளபாடங்களை அதிகரிக்க மாநகரசபை ஆணையாளரிடம் விண்ணப்பிக்க வேண்டும் என்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

முன்னர் நாள்தோறும் நூற்றுக் கணக்கானோரால் பயன்படுத்தப்பட்டு வந்த நூலகம் நாளடைவில் ஆயிரக்கணக்கானோர் பயன்பெறுமளவில் பல்கிப், பெருகி, பெருவளம் பெறுவதாயிற்று. பல வர்ணப் பூக்களிடையே பல்லாயிரம் தேனீக்கள் தேன்பருகிய அமைப்பில் படிப்பார்வம் பெருகிய பலர் புத்தகங்களிலும், சஞ்சிகைகளிலும், பத்திரிகைகளிலும் மூழ்கியிருக்கத் தலைப்பட்டனர்.

அப்போது சில காலமாக யாழ்ப்பாணத்தின் 4 ஆம் குறுக்குத்தெருவில் அமெரிக்க அரசின் ஆதரவில் ஒரு நூலகம் நல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையில் இயங்கி வந்தது. இந்நூலகத்திற்கான நூல்கள், சஞ்சிகைகள் முதலியன அமெரிக்காவிலிருந்து பெருந்தொகையாக வந்து கொண்டிருந்தன. மேலும் தளபாடங்கள், உபகரணங்கள், படங்கள், படச்சுருள்கள், திரைப்படக்கருவிகள் போன்றன நல்ல முறையில் பயனளித்து வந்தன. வாசகர்கள் நூல்களை அங்கிருந்தே வாசிக்கவும் எடுத்துச் செல்லவும் ஏற்றவகையில் மிக விலையுயர்ந்த நூல்கள் அங்கு காணப்பட்டன. இந்நூலகத்தில் அறிவுத்துறை சார்ந்த திரைப்படக் காட்சிகள் வாரந்தோறும் காட்டப்பட்டன. இத்தகைய நூல்நிலையத்தை அமெரிக்க அரசு யாழ்மக்களிடமே கையளிக்க முடிவுசெய்த போது அதைத் தடுத்து கண்டி நகரத்திற்குத் தட்டிச் செல்வதற்கு சிலர் இரகசியமாகப் பெரும் முயற்சி செய்தனர். குறைந்தது 200,000 ரூபா மதிப்புள்ள தளபாடங்களை உள்ளடக்கிய இந்நூலகத்தை யாழ்ப்பாணத்திலேயே பயன்பெற வைத்துக் கொள்வதற்காக நூலகர் பாக்கியநாதன் மற்றும் விஷேட ஆணையாளர் மாணிக்கவாசகர் இருவரும் வெகுவாக முயன்று யாழ்ப்பாணம் பொதுசன நூல் நிலையத்தோடு ஒன்றிணைத்தனர். இவர்களின் பகீரதப்பிரயத்தனத்தால் பெருந்தொகையான விலைமதிப்பற்ற நூல்களுடன் தளபாடங்கள், படச்சுருள்கள், படங்காட்டும் கருவிகள், குழாய் விளக்குகள் (Tube Lights) முதலிய சாதனங்களும் பொதுசன நூலகத்திற்குக் கிடைத்தன.

இது இவ்வாறிருக்கையில்1981 ஆம் ஆண்டு மே 31 ஆம் திகதி யாழ் நாச்சிமார் கோவில் வீதியில் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் யாழ்.மாநகர முதல்வர் இராஜா விசுவநாதன் தலைமையில் நடந்து கொண்டிருந்த



சமயம், தேர்தலை ஆட்சேபித்து ஆயுதக் குழு ஒன்றினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தால் காவல்துறை உத்தியோகத்தர் ஒருவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட மேலும் இருவர் காயமடைந்தனர்.

**"அன்று இரவு 10 மணி அளவில் நூலகத்திற்குள் நுழைந்த கொடியவர்கள் காவலாளியைத் துரத்தியடித்துவிட்டு நூலகப் பெருங்கதவைக் கொத்தித் திறந்து உள்ளே புகுந்து அட்டூழியங்கள் புரிந்தனர். 98,000 கிடைத்தற்கரிய நூல்கள் மற்றும் ஓலைச்சுவடிகளுக்குப் பெற்றோல் ஊற்றிக் கொழுத்தி எரித்தழித்தனர். நூலகத்தினுள் சாம்பல் குவியல்களே எஞ்சிக் கிடந்தன. அந்தச் சாம்பல் குவியல்களுக்குள்ளே எரியாத நூல்கள் ஏதேனும் எஞ்சிக் கிடக்குமோ என்ற நப்பாசையில் நூலக உதவியாளர்கள் சு.யோ.இமானுவேலும், அ.டொன் பொஸ்கோவும், ச.கந்தையாவும் சாம்பல் குவியல்களைக் கிளறிக் கொண்டிருந்த நிலையைக் காண முடிந்தது. நூலகம் கருகிக் காரை பெயர்ந்து கிடந்தது. கயவர்கள் நூலகத்தையே புகைத்து விட்டார்கள்"**

தமிழர்களது விடுதலைப் போராட்டம் தீவிரம் பெற பல்வேறு காரணங்கள் இருந்தாலும் யாழ் நூலகம் எரிக்கப்பட்ட நிகழ்வானது முக்கிய இடத்தைப் பிடித்திருந்தது. கல்வித் தரப்படுத்தல் சட்டத்தை கொண்டு வந்து தமிழர்களது உயர்கல்வி வாய்ப்பிற்கு சாவுமணியடித்த சிங்கள இனவாத அரசு ஒட்டுமொத்தமாக தமிழர்களின் அறிவுக் கருவூலத்தை தீக்கிரையாக்கிய சம்பவம் தமிழர்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியிருந்தது.

இத்தகைய ஓர் பண்பாட்டுப் படுகொலை இத்தீவின் வரலாற்றில் முதல் நிகழ்வும் அல்ல! இறுதி நிகழ்வும் அல்ல!! கோட்டை இராசதானியின் மீது படையெடுத்து வந்தபோது நல்லூர் நாயன்மார் கட்டில் இருந்த யாழ்ப்பாண இராசதானியின் தேசிய சரஸ்வதி நூலகம், அது உள்ளடக்கியிருந்த அரும்பெரும் சித்த வைத்திய நூல்களுடன் தீயினால் முற்றாகப் பொசுக்கப்பட்டது. யாழ்ப்பாண இராசதானியின் வேந்தர்கள் சிறந்த சித்த வைத்திய நிபுணர்களாக விளங்கியதுடன், தாமே பல மருத்துவ நூல்களை எழுதியிருந்தும் தெரிந்ததே!

அது வரலாற்றில் முற்பட்ட நிகழ்வாக இருந்ததால், யாழ் பொது நூலகம் அழிக்கப்பட்டதன் பின் காஸா நகரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவிட்ஸ் மக்களால் அன்பளிப்பாகத் தரப் பட்டிருந்த “குளோப்” நூலகமும் அவ்வாறே அழிக்கப்பட்டிருந்தது.

மேலும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி நூலகம் 1984 ஆம் ஆண்டு செப்ரெம்பர் திங்கள் முதல் நாளில் அதன் நூற்றைம்பது வருடகால புத்தகச் சேர்வு களுடன் பாதுகாப்புப் படையினரல் தீயினால் அழிக்கப்பட்டது. (சென்னை “இந்து” பத்திரிகை யின் சிறப்பு நிருபர் ஜி.பார்த்தசாரதி தமது யாழ்ப்பாணச் சுற்றுப் பயணத்தின் பின் இதனை அதன் செப்டெம்பர் 28 ஆம் திகதி இதழில் அம்பலப்படுத்தியிருந்தார்.)

யாழ் நூலகம் எரிகின்றதென்ற தகவல் தெரிந்தும் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த காவல்துறையினரின் உத்தியோகப் பற்றற்ற ஊரடங்கு சட்டத்தையும் பொருட் படுத்தாது மாநாகர ஆணையாளர் சி.வி.கே சிவஞானம் மாநகர சபை ஊழியர்கள் சில ரையும் உதவிக்கு உடன் அழைத்துக் கொண்டு ஸ்தலத்துக்கு விரைந்தார். அங்கு நகர மண்டபம், சுப்பிரமணியம் பூங்கா, நூலகம் மற்றும் திறந்த வெளியரங்கிலிருந்த காவலர்களின் ஒத்துழைப்புடன் தீயை அணைப்பதற்கு பெரிதும் முயன்றார். ஆயி னும் காவல் துறையினரோ அதனை அனு மதியாது அவர்களை அங்கிருந்து விரட்டி விட்டனர். ஆகவே, வேறு வழியின்றி மாநகர ஆணையாளர் சி.வி.கே சிவஞானம் காரை நகர் கடற்படையினருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு உதவி கோரியிருந்தார். கடற்படையின் விரைந்து உதவிக்கு வந்தி ருந்தபோதும் அதற்குள் நூலகம் முழுமை யாகவே அழிந்துவிட்டது. “ஊர் வாயை உலை மூடியால் மூடும் ஓர் எத்தனம்” போன்று யாழ்ப்பாணத்தில் தாம் நிகழ்த்த விருந்த பண்பாட்டுப் படுகொலை குறித்த தகவல் செய்தி ஊடகங்களுக்கு எட்டாதிருக் கச் செய்யும் முற்காப்பு நடவடிக்கையாகவே “ஈழநாடு” பணிமனை முன்கூட்டியே தீக்கிரை யாக்கப்பட்டிருந்தது.

பாரிய பெருமையும் பெறுமதியும் வாய்ந்த யாழ்ப்பாணப் பொதுசன நூலகம் எரியும் போது அதனூடு 98,000 இற்கும் அதிகமான நூல்களும், பல நூற்றிற்கும் மேற்பட்ட சஞ்சி கைகளும், பத்திரிகைகளும் அரிய ஓலைச் சுவடிகளும், விலைமதிப்பற்ற தளபாடங் களும் எரிந்து சாம்பலாகிப்போயின. இது ஒரு தனி நூலகத்தின் இழப்பன்று. கல்வியை வாழ்வின் அடிநாதமாகக் கொண்டு உருவாகிவந்ததொரு சமூகத்தின் கலாசாரப் படுகொலையாகும்.


நூலகம் எரிகின்றதென்ற செய்தி யைக் கேட்டதுமே சென். பற்றிக்ஸ் கல்லூரி ஆசிரியரும், பன்மொழிப் புலவரும், தும் பளை தாவீது அடிகளார் என தமிழ் உலகில் அறியப்பெற்றவருமாகிய சங்.பிதா. கலாநிதி டேவிட் அவர்கள் இத்துயரைத் தாங்கிக் கொள்ள முடியாதவராய் மனமதிர்ந்து மார டைப்பினால் தன்னுயிரை நீத்தார். யாழ் பொதுசன நூலகத்துடன் நெருங்கிய தொடர் பைக் கொண்டிருந்த இப்பெரியாருக்கு அந் நூலகம் எரிகின்றதென்ற செய்தியைத் தாங் கும் சக்தியிருக்கவில்லை.

எரிந்துபோன யாழ். பொதுசனநூல கத்தை மீளக்கட்டியெழுப்ப வேண்டும் என் கின்ற ஒரேயெண்ணம் மக்களையெல்லாம் ஒன்றுபடுத்தியது. அறிஞர்கள், பொதுமக்கள், வெளிநாட்டில் வாழ்கின்ற இலங்கையர்கள் எனப்பலர் எடுத்துக்கொண்ட பெருமுயற்சி யின் பலனாக ஜனாதிபதி J.R.ஜெயவர்த்தனா அவர்களின் அரச உதவியாகப் பெறப்பட்ட 2,000,000 ரூபா நிதியுடன் இந்நூலகத்தின் புனர்நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இத்துடன் நூலக மாதிரிப் படத்தில் உள்ள வாறு மூன்றாம் கட்ட வேலையும் ஆரம்பிக் கப்பட்டது. இந்நிலையில் கொழும்பில் தேசிய பாதுகாப்புச்சபை கூட்டிய அவசர கூட் டத்தில் வடக்கின் வன்செயல்கள் ஆராயப்பட்டன.

மேலும் ஈழத்தமிழருக்கு எப்படி உதவ லாம் என்பதை ஆலோசிக்க 18.10.1981 இல் ஓர் அனைத்துக் கட்சி மாநாடு தமிழக முதல்வர் திரு. M.G.இராமச்சந்திரன் அவர் களால் கூட்டப்பட்டது. இதன்போது யாழ் நூலகத்திற்கு நூல்கள் வழங்குவதாக தீர் மானிக்கப்பட்டு பல லட்சம் பெறுமதி வாய்ந்த நூல்கள் M.G.R ஆல் அனுப்பி வைக்கப் பட்டன. 24.05.1982 இல் HNB வங்கி தமது நிதியுதவியாக 50,000 ரூபா காசோலையை நூலகரிடம் கையளித்தது. மேலும் பிரித் தானிய தமிழ் அகதிகள் மறுவாழ்வு நிறுவன மும் தம்மால் இயன்ற நிதியுதவியை வழங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இது இவ்வாறிருக்கையில் நூலகப் புனர்நிர்மாணப் பணிகளுக்காக பொறியியலாளர் திரு.ந.நடேசன் அவர்கள் முழு நேரப் பணியாளராக நியமிக்கப்பட்டு அதற்கான வேலைகளும் துரித கதியில் செயற்படுத்தப் பட்டது. புனரமைக்கப்பட்ட நூல்நிலையம் மீண்டும் மக்களின் பாவனைக்காக 1984 ஆம் ஆண்டு June மாதம் 4ம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

புனரமைக்கப்பட்ட நூலக சேவையை தொடர முடியாமல் மீண்டும் போர்ச்சூழல் இடையூறாகியது. 1985 இல் யாழ்ப்பாணக் கோட்டைப் பிரதேசம் யுத்தப் பிரதேசமானது. கோட்டைக்கு அண்மையில் அமைந்த நூலகமும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டது. இந்நிலையில் வாசகர் நலன் கருதி நூலக சேவை நாவலர் இந்துகலாசார மண்டபத்திற்கு மாற்றப்பட்டது. வாசகர்கள் அனைவருமே அங்கு சென்று பயனடைய முடியாமையினால் யாழ் நகரில் அங்காங்கே கிளை நூலகங்களும் வாசிகசாலைகளும் திறந்து வைக்கப்பட்டு, அவற்றிற்கு நூல்களும் வழங்கப்பட்டன. போர்ச்சூழலிலும் யாழ்ப்பாணத்தில் கல்வியின் நிலை வீழ்ச்சியுறாது வளர்ச்சி கண்டு வந்தது. இவ்வாறு கிளை நூலகங்களினூடாக வளர்ந்து வந்த நூலக சேவைக்கு மீண்டும் இடையூறு ஏற்பட்டது. 1995 இடப்பெயர்வினால் அனைத்து கிளை நூலகங்களும் அப்படியே கைவிடப்பட்டன. 1996 இல் யாழ்நகரிற்கு மீளத்திரும்பியபோது புதிதாக உருவாக்கப்பட்ட தளபாடங்கள், உபகரணங்களுடன் அனைத்து நூல்களும் சேதமாக்கப் பட்டும், காணாமாலும் போயிருந்தன. ஏறக்குறைய 29,000 நூல்களை இழந்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் பல உசாத்துணை நூல்களாகும், பெரும்பாலும் கலைக்களஞ்சியங்கள், அகராதிகள், பல்வேறு தொழிற்துறைசார் நூல்கள் என்பனவே இழக்கப்பட்டவையாகும்.

இக்காலகட்டத்தில்தான் யாழ்ப்பாணப் பொதுசன நூலகம் புனரமைக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி சந்திரிக்கா பண்டார நாயக்காவின் அரச உதவியாக 3,000,000 ரூபா வழங்கப்பட்டது. இந்நிதியினைக் கொண்டு கட்டிடம் திருத்தப்பட்டு அத்தியாவசியமாகத் தேவையான தளபாடங்கள் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. பல நூல்கள் இந்திய மத்திய, தமிழ் நாடு அரசு, ஆசியா பவுண்டேசன், பிரிட்டிஸ் கவுன்சில் போன்றனவற்றால் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

இவற்றையும் உள்ளடக்கி 1998.01.14 ஆம் திகதி தைப்பொங்கல் தினத்தன்று மீண்டும் நூலகம் இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்களான திரு.மங்கள சமரவீர, திரு.ரிச்சட் பத்திரான, திரு.பேட்டிலால் பிரேமரட்ண ஆகியோரால், பிரித்தானிய உயர் ஸ்த்தானிகர், பிரிட்டிஸ் கவுன்சில் பணிப்பாளர், முப்படைத் தளபதிகள், சமய குருமார்கள், யாழ் நூலக ஜனாதிபதிக்குழு உறுப்பினர் யோகேந்திரா துரைசுவாமி, திருமதி. பீற்றர் கெனமன் ஆகியோர்களால் காலையில் 09.00 மணிக்கு திறந்துவைக்கப் பட்டது. ஆனால் 1997 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட புனரமைப்புப் பணிகள் 70 கோடி ரூபா செலவில் 2003 ஆம் ஆண்டில் தான் முற்றுமுழுதாக முடிவடைந்தன. இந்த வகையில் 23.02.2004 இல் யாழ்நூலகம் முழுவதும் ஆடம்பரம் எதுவுமின்றி மக்கள் பாவனைக்கு திறந்து வைக்கப்பட்டது.

நூலக அபிவிருத்திக்காக பவுண் பவுண்டேசன் நிறுவனம் யுனெஸ்கோ நிறுவனத்தின் அனுசரணையுடன் 2,000,000 அமெரிக்க டொலர் மதிப்பில், 30 கணினிகளைக் கொண்ட வியர்லிங் நெற்வேர்க் திட்டமொன்றை அமைத்து 26.07.2004 மாலை 04.00 மணியளவில் கையளித்தது. மேலும் நடமாடும் நூலக சேவைக்கென பஸ் ஒன்று யுனெஸ்கோ அமைப்பின் பிரதம அதிகாரி R.P.பெரேரா அவர்களினால் 22.02.2005 அன்று கையளிக்கப்பட்டது. மற்றும் யாழ் பொதுசன நூலகத்தின் சிறுவர் பகுதி சிங்கப்பூர் அரசின் 3,000,000 ரூபா நிதியுதவியில் நவீனமுறைப்படுத்தப்பட்டு 29.07.2011 அன்று காலை 11.30 மணிக்கு முன்னாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவிவகார அமைச்சர் ஜார்ச் இஜோ தலைமையில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் K.N.டக்ளஸ் தேவானந்தா, சிங்கப்பூர் சர்வதேச நிதியத்தின் ஆளுநர் வினோத் குமாரசுவாமி ஆகியோர் முன்னிலையில் யாழ் மாநகர சபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசாவிடம் கையளிக்கப்பட்டது. மேலும் 24.03.2012 இல் நூலகத்தைப் புனரமைக்க 10,000,000 ரூபா நிதி வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் G.A.சந்திரசிறி அவர்களால் ஒதுக்கப்பட்டது. இவ்வாறு படிப்படியாக புனருத்தாரணம் பெற்று அறிவுப்பசி போக்கிக் கொண்டிருக்கும் இந்நூலகத்திற்கு 2012 இன் சிறந்த சேவைக்கான விருது கிடைக்கப்பெற்றது.

நூலகத்தினை நவீன வசதிக்கு உருமாற்றம் செய்வதற்காக பிரிட்டிஸ் கவுன்சில் கணினிகளையும் அவற்றிற்கான Internet வசதிகளையும் யுனெஸ்கோ அமைப்பு 20,000,000 பெறுமதியான தொழில்நுட்ப வசதிகள், களத்தொடர்பாடல் சேவைகளையும் வழங்கியது. மற்றும் ஏசியா பவுண்டேசன், பிரிட்டன் சபை, புக் எமிறோன் ஆகிய அமைப்புக்களுடன் I.T இசாற் நிறுவனமும் இணைந்து 10,000,000 பெறுமதியான நூல்களை இந்தியாவில் இருந்து தருவித்து உதவியது. மேலும் உசாத்துணைப் பகுதி 20,000,000 ரூபா செலவில் சீன அரசாங்கத்தால் புனரமைக்கப்பட்டு 27.03.2013 காலை 10.00 மணியளவில் கையளிக்கப்பட்டதுடன், தெகிவளை, கல்கிசை இலங்கை வங்கி ஓய்வூதியர் சங்கத்தினால் 12.07.2013 அன்று ஒரு தொகை நூல்கள் கையளிக்கப்பட்டன. பின்பு 26.07.2013 அன்று உலக சுகாதார அமையத்தின் இலங்கைக்கான பிரதிநிதி வைத்திய கலாநிதி “பெடோச் றுஸ்ரம்மேதா” அவர்களினால் நூல்கள், உபகரணங்கள் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் G.A.சந்திரசிறி அவர்களிடம் கையளிக்கப்பட்டதுடன், இதேதினத்தில் யாழ் பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறும் நிகழ்வுகளை மேலும் மெருகூட்டும்வகையில் உலக வங்கியின் நிதியுதவியின் கீழ் Digital Projector ஒன்றும் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

அந்தவகையில் 2013 ஆம் ஆண்டிற்கான அதிசிறந்த நூலகமாக யாழ்ப்பாணம் பொதுசன நூல் நிலையம் தெரிவுசெய்யப்பட்டதுடன் சிறந்த ஆவணவாக்கல் சேவை விருதும், சிறந்த வாசிப்பு மாத விருதும் தேசிய நூலக ஆவணவாக்கல் சபையால் வழங்கப்பட்டு நூலகம் தரமுயர்த்தப்பட்டது. (1981 இல் நூலகம் எரிக்கப்பட்டபோது அதிசிறப்பு நூலகமாகத் தரமுயர்த்தப்பட்டிருந்தது. தொடர்ந்து நாட்டில் ஏற்பட்ட யுத்த நடவடிக்கைகள் காரணமாகவும் நூலகத்தை மீண்டும் சிறப்பாக செயற்படுத்த முடியாத நிலையாலும் அத்தரத்தை தக்கவைக்க முடியாதிருந்தது. அந்த வகையில் மீண்டும் இதற்கான விருது 2013 இல் இலங்கை மன்றக் கல்லூரியில் வைத்து கல்வி சேவைகள் அமைச்சர் துமிந்த திசாநாயக்காவினால் வழங்கப்பட்டது.) இவற்றிற்கிடையில் நூலகம் எரிந்த பின்பு பல நூல்களை சேகரித்த ப.இராமசாமி அவர்களின் மரணமும் 24.09.2013 அன்று நடந்தேறியது.

ஏசியா பவுண்டேசன் நிறுவனத்தின் தலைவர் திரு.டேவிட் ஆனந் அவர்களால் 21.01.2014 மு.ப 10.00 மணியளவில் 1,200,000 ரூபா பெறுமதியான 284 புத்தகங்கள் வடமாகாண முதலமைச்சர் C. V. விக்கினேஸ்வரன் அவர்களிடம் கையளிக்கப்பட்டதுடன் 19.02.2014 இல் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் அவர்கள், தனது யாழ் விஜயத்தை நினைவுகூரும் பொருட்டு தன்னிடமிருந்த ஒருதொகுதி நூல்களை நூலகரிடம் வழங்கினார்.

இதுமட்டுமன்றி மலேசியா - இலங்கை அமைப்புக்களின் சம்மேளனத்தின் சார்பில் 26.03.2014 இல் 1500 புத்தகங்களுடன், 1,000,000 ரூபா நிதியும் நூலகத்திற்கென வழங்கப்பட்டது. இவ்வமைப்புக்களின் CORNER ஒன்றும் நூலகத்தில் அமைக்கப்பட்டு வழங்கப்பட்ட நூல்கள் அங்கு பராமரிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

தொடர்ந்து 04.04.2014 இல் சிங்கப்பூர் நாட்டின் உதவியாக நடமாடும் நூலகசேவை ஒன்றும், YOUTH CORNER ஒன்றும் 15000 டொலர்கள் மதிப்புடைய 10,000 இற்கும் அதிகமான நூல்களும் சிங்கப்பூரின் வெளிவிவகார அமைச்சர் K.சண்முகம் அவர்களால் அன்பளிப்புச் செய்து வைக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் எமது பாடசாலையின் பழைய மாணவரும் பிரபல நரம்பியல் நிபுணருமான வைத்திய கலாநிதி K.புவனேந்திரன் அவர்கள் 07.12.2013 அன்று சிங்கப்பூரிலிருந்து வருகைதந்து, கொழும்பில் உள்ள BMICH இல் வைத்து "The Curious Adventures of a Doctor from Jaffna" என்னும் நூலை வெளியிட்டதுடன் இதன் மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம் முழுவதையும் யாழ் நூலகத்திற்கு அன்பளிப்பாக வழங்கியதுடன் 22.04.2014 இல் 300,000 பெறுமதியான Computer, Printer தொகுதிகளையும் 1,000,000 ரூபா காசோலையையும் நூலகர் இமல்டா கருணாகரனிடம் கையளித்தார்.

இவ்வாறே 10.06.2014இல் வியட்நாம் குழுவினரால் ஒருதொகுதி நூல்கள் நூலகரிடம் கையளிக்கப்பட்டது.

முயற்சி திருவினையாக்கும் என்பது போல சாம்பல் மேடாக, கற்குவியலாக, சூனியப்பகுதியாக அழிவுகளையும் அனர்த்தங்களையும் சந்தித்த அறிவாலயம் தீயினால் அழிந்துபோகாது என்பதை எடுத்தியம்பும் ஒரு உதாரணச்சின்னமாக மீண்டு எழுந்து யாழ்ப்பாணத்தை அழகுறச் செய்வதோடு ஒரு லட்சத்திற்கும் மேலான நூல்களையும், பத்திரிகைகளையும், சஞ்சிகைத் தொகுப்புக்களையும் சுமந்து கல்வி ஒளி பரப்பிக்கொண்டிருக்கின்றது.

அந்தவகையில் இந்நூலகத்தின் நூற்சேர்க்கையை வளம்படுத்த பல நலன்விரும்பிகள், நல்லுள்ளங்கள் தங்களால் சேகரிக்கப்பட்ட நூல்களையெல்லாம் வழங்கிவருகிறார்கள். இதுபோலவே அரியநூல்களை வைத்திருப்பவர்கள் பிறரும் பயன்பெறும் வகையில் அவற்றை அன்பளிப்பாக வழங்க முன்வர வேண்டும். சிறிய விதையாக முளைகொண்டு இன்று ஆலமரம் போல் வியாபித்து நற்சேவையாற்றிவரும் யாழ்ப்பாண பொதுசன நூலகம் தடைகளைத் தாண்டி, விடைகள் சொல்லும் வரலாறாக, தமிழ் மக்களின் இருப்பை உணர்த்தும் குறியீடாக பாதுகாக்கப்படவேண்டும்.

மேலும் நாம் பெற்ற கல்விச் செல்வத்தை வருங்கால சந்ததியினரிடம் நிறைவளங்களுடன் ஒப்படைப்பது எம்மனைவரதும் தலையாய கடமையாகும்.

**உஷசாத்துணை நூல்கள்**


யாழ்ப்பாண நூல்நிலையம் - மூதறிஞர் கா.சி.குலரத்தினம்
பத்திரிகை வெளியீடு - திரு.ஜேசுதாஸ்
ஒட்டுப்புத்தகம் - யாழ் பொதுசன நூல்நிலையம்
ஆனந்த விகடன் (1981 Dec) - சுஜாதா (ஒரு இலட்சம் புத்தகங்கள்)
கிருதயுகம் - கவிஞர் சோ.ப
அயோத்தி நூலக சேவைகள் வெளியீடு - திரு.N.செல்வராஜா

**இணைய உதவி**

http://www.globalpeacesupport.com
http://www.eelamview.com
http://www.tamilnation.org
http://www.ifla.org
http://www.thenee.com



**"நினைத்ததை நடத்தி முன்னேறு**
**நிலைக்கட்டும் நமது வரலாறு"**


க.பகீரதன்
மாணவ முதல்வன் 2014-2015




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித வாழ்வியலில் சூழலின் முக்கியத்துவம்



இயற்கையைப் போற்றி பயன்படுத்திக் கொள்ள மனிதன் கற்றுக்கொண்டபோதே நாகரீகம் தொடங்கிவிட்டது. நாகரிகம் நாள் தோறும் வளர்ந்து கொண்டே இருக்கிறது. பண்பாடு. பழக்கவழக்கங்களும் மாற்றம் பெறுகின்றன. அதனால் இயற்கைச் சூழல் மாற்றம் பெறுவதனால் அதன் வளங்கள் குறைய ஏதுவாகிறது. இறையருள் கிடைத்த இயற்கையை மாற்றாமல் அதை உயிர் வாழ்வுக்கு ஏற்பப் பயன்படுத்திக் கொள்ளும் திறமைகளே அறிவியலாக விரிவடைகின்றன. அறிவியலும் நாகரிகமும் வளர்ந்தாலும் பண்பாடும் பயனும் என்றும் நிலைத்திருக்கப்படுவதே. இயற்கையோடு இணைந்த வாழ் வாகும். இயற்கைச்சூழல் கெட்டால் வளமான வாழ்வு கேள்விக்குறியாகிவிடும். காற்றும், நீர், நிலம், வான் வெளி மூலம் சமநிலை ஏற்படும் மனிதனின் வாழ்வில் முக்கியமாக காணப்படுகின்றது.

முதலில் காற்றினை எடுத்து நோக்குவோம். சூரியக்குடும்பத்தில் உயிர்கோள் பூமி. பூமியில் உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழல் உள்ளது. நாம் பூமியின் அமைப்பை "பஞ்சபூதம்" எனக் குறிப்பிடுகின்றோம். நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்றும் அவற்றின் கூட்ட அமைப்பில் தான் உயிர்கள் தோன்றி வாழ்கின்றன. உயிர்களின் வாழ்வுக்கு இன்றியமையாதது உணவு. எனினும் சுவாசித்தல் இல்லாமல் உயிர்கள் வாழமுடியாது. சுவாசித்தலுக்குத் தூய காற்று தேவை. ஆனால் இன்று காற்று அளவுக்கு அதிகமாக மாசு அடைந்து வருகின்றது. இதற்கு காரணம் தொழிநுட்ப வளத்தால் பெருகிய தொழிற் சாலைப் புகையும் வாகனப்போக்குவரத்தால் வெளியாகும் புகையுமே ஆகும். இப்புகை போதாதென்று வாயினாலும் சிலர் புகை விடுகின்றனர். புகை இலை பல்வகை தீமைகளை ஏற்படுத்தும். அதைப் பயன்படுத்துவோர் தம் நலனைக் கெடுத்துக்கொள்வதுடன் பிறர் நலத்தையும் அவர்கள் கெடுக்கிறார்கள். காற்று மாசில் கலந்துள்ள கரியைத் தாவரங்கள் பெரிதும் பயன்படுத்துகின்றன. தூய்மையான காற்றே உயிர்களின் நல்வாழ்வுக்குச் சிறந்த துணையாகும்.

அடுத்ததாக நீர் மாசுபடுவதை பார்ப்போம், "நீர் இன்றி அமையாது உலகு" என்றார் வள்ளுவர். தண்ணீர் மக்களுக்கு மட்டுமல்ல அனைத்து உயிர்களுக்கும் மிக மிக முக்கியமாகும். செடி, கொடி, மரவகைகள் வளரவும் தண்ணீர் தேவை. உலக உருண்டையில் முக்கால் பாகத்திற்கு மேல் நீரால் சூழப்பட்டிருந்தாலும் உயிர் வாழ்க்கைக்கும் பயிர்த்தொழிலுக்கும் பிற பயன்களுக்கும் தேவையான நல்ல நீரை மழை வாயிலாகத்தான் பெறமுடிகிறது. அதில் ஒரு சிறுபகுதியைத்தான் நாம் பயன்படுத்துகின்றோம். மிகுதி கடலில் கலந்து வீணாகிறது. இதற்கு மனிதன் காரணமாகின்றான். நன்னீர் பற்றாக்குறை நமக்கு ஏற்படுகிறது. இதை ஈடுசெய்ய நிலத்தடி நீரை ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து உறிஞ்சுகின்றோம். இதனால் நிலத்தடி நீர்வளம் வற்றிவிடுகிறது. கடல் நீர் அந்த இடத்தில் புகுந்து நிலந்தடி நீரை மாசுபடுத்துகிறது. இரத்ததானம் செய்பவர்கள் கூட ஓரளவுக்குத்தான் குருதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாம் கொடுப்பார்கள். அளவுக்கு அதிகமாக உறிஞ்சினால் என்னவாகும். மண்ணின் இயற்கைச் சமநிலை சிதைந்து ஒரு நாளில் நில நடுக்கம் கூட ஏற்படலாம். இவ்வாறு ஏற்படுவதற்கு மனிதன் காரணமாகின்றான். நீர் மாசுபடுவதிலும் மனிதன் முக்கியத்துவம் கொடுக்கின்றான்.

அடுத்ததாக நிலம் மாசுபடுவதில் மனிதனின் பங்களிப்பு பின்வருமாறு. நிலம் தான் நமக்குத் தேவையான உணவுப் பொருள்கள் உற்பத்தியைப் பெருக்க உதவுகிறது. மனிதன் தன் பேராசையினால் உரங்களைப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்கினால் விளைவாக நிலம்தான் கெட்டது. விவசாய உற்பத்திகளுக்குத் துணை நின்ற நுண்ணுயிர்கள் அழிந்து போயின. மண்புழுக்கள் இன வளர்ச்சி இல்லாமல் அழிந்தன. மகரந்தச் சேர்க்கைக்கு உதவும் வண்டு வகைகளும் பறவை இனங்களும் அழிந்தன. போதாதற்கு தொழிற்சாலைகளையும் பெரிய பெரிய மாட மாளிகைகளையும் கட்டியதால் நல்ல விளை நிலங்களை இழந்து நிற்கின்றோம். அத்துடன் பெரும் குப்பை கூழக்கழிவும் நீர்க் கழிவும் எஞ்சியுள்ள நிலத்தையும், ஆறுகளையும் மாசுபடுத்தி உயிர்வாழ்வைக் கேள்விக் குறியாக்கி விட்டன. மாசுபடாதிருக்கக் கடலை கூட நாம் விட்டு வைக்கவில்லை. ஏரி குளங்களில் வாழ்ந்த மீனினமும் பறவை இனமும் காணமலே போய்விட்டன. குடலிலும் இதன் பாதிப்பு தெரியத் தொடங்கியுள்ளது.

சூரிக்கதிர் வீச்சிலிருந்து உலக உயிர்களைக் காத்துவரும் ஓசோன் படலம் சிதைந்து வருகிறது. இதற்கு யார் காரணம், நாம் தான் மனிதன் நாகரீகத்தின் பெயரால் தன் வாழ்க்கைக்குப் பயன்படுத்தும் பல்வேறு சாதனங்கள் வெளிவிடும் நச்சு காற்று ஓசோன் படலத்தைச் சிதைக்கிறது. காற்றில் கலந்துள்ள கரிப்புகை சூரியனின் கதிர் வீச்சால் பூமிக்குள் புகும் வெப்பம் திரும்பிச் செல்லாமல் தடுக்கிறது. ஆகவே பூமியின் வெப்பநிலை கூடுகிறது. இதனால் துருவப் பகுதிகளில் உள்ள பனிப்பாறைகள் உருகுவதால் கடலின் நீர் மட்டம் உயரும், பூமியின் நிலப்பகுதிகள் சில கடலுக்குள் மூழ்கும். புனிப்பாறைகள் நகர்வதால் பெரிய விபத்துக்கள் ஏற்படலாம், பருவ நிலைகள் மாற்றம் அடையும் அதனால் உரிய காலத்தில் வெப்பச் சூழல் தாறுமாறாகக் கடலின் இயற்கை சிரம நிலையைச் சிதைக்கும்.

இவ்வாறாக விவசாயத்தின் பண்டைக் காலப்போக்கில் இயற்கை உரத்தையும் பூச்சி கொல்லிகளையும் பயன்படுத்தினர். கால்நடை வளம் பெருக வழிவகைகளை உடனே கையாளவேண்டும். அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு என்பதை நாம் இன்று அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். இதை பற்றி இயற்கையான, எளிமையான வாழ்வைப் பெற்று உய்யும் இயற்கையோடு இணைந்த இனிய வாழ்வுக்கு நாம் தம்மைத் தயாரித்துக் கொள்ள முயற்சி மேற்கொள்வோமாக! நாமும் வாழ்ந்து நம்மைச் சார்ந்துள்ள பறவைகள், விலங்கினங்கள் செடி, கொடி மர வகைகள் முதலியவற்றைப் பாது காத்து வாழச்செய்வோம்.

ந.தனுபதன்
மாணவ முதல்வன் 2014-2015





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிநுட்ப ஆய்வாளர் தோமஸ் அல்வா எடிசன்



எடிசன் அமெரிக்கா ஐக்கிய நாட்டில் ஏகியோ மாநிலத்திலுள்ள மிலான் நகரில் 1847 இல் பிறந்தார். குழந்தைப் பருவத்தி லிருந்தே அவருக்கு எதையும் அறியவேண் டும் என்ற ஆசை இருந்தது. சிறுவனாக இருந்தபோது அவர் ஒருநாள், "தோட்டத்தில் உட்கார்ந்திருக்கிறேன் தாய் வாத்து அடை காத்தால் குஞ்சு பொரிக்கிறது போல, நானும் அடை காத்தால் குஞ்சு பொரிக்குமா என்று பார்க்கிறேன்" என்று கூறினாராம்.

அவரது ஆராயும் குணத்தைப் பற்றி வேறொரு கதையுமுண்டு. ஒரு நாள் ஒரு சிறுவனுக்கு சீட்லிட்ஸ் உப்பு கொடுத்து சாப் பிடச்செய்தாராம். அது வாயுவை உண்டாக் கும் என்று பார்த்துக் கொண்டிருந்தாராம்.

பதினான்காம் வயதில் ரயில் வண்டியில் புதினப் பத்திரிகை விற்று பணம் சம்பாதிக்கத் தொடங்கினார். அப்பணத்தை கொண்டு பழைய அச்சு இயந்திரம் ஒன்றை வாங்கி Weekly Herald என்று சிறு செய்தித் தாளை அச்சிட்டு விற்கலானார். மிகுதி நேரத் தில் தந்திக் கருவியை செப்பஞ்செய்யும் வழியைப் பற்றி ஆராய்ச்சி நடத்தி வந்தார்.

இருபதாம் வயதில் அவருக்கு நல்ல வேலை கிடைத்தது. தந்திக் கம்பனியொன் றில் சில இயந்திரங்கள் திடீரென்று கெட்டுப் போயின. அச்சமயத்தில் வேலை தேடிச் சென்ற எடிசன் அவ்வியந்திரங்களைப் பழுது பார்த்து ஒழுங்காக அமைத்துக்கொடுத்தார். உடனே கம்பனிக்காரார் அவரை வேலை யில் அமர்த்திக் கொண்டார். தந்திக்கருவி களை எவ்வகையில் செவ்வியதாக செய்யக் கூடும் என்று ஆய்வு செய்து வந்தார். ஒரு சமயம் தந்திச் செய்தியைக் குறைந்த செலவில் அனுப்புவதற்காக ஒரு கருவியைக் கண்டு பிடித்தார். உடனே கம்பனிக்காரர் பெருந்தொகை கொடுத்து அதை விலைக்கு வாங்கிக்கொண்டார். அப்பணத்தைக் கொண்டு ஆய்வாளர் எடிசன் நியு ஜேர்னி மாநிலத்திலுள்ள மென்லோபார்க் என்னு மிடத்தில் ஓர் ஆய்வு நிலையத்தை அமைத்து, திறமை வாய்ந்த உதவியாளர் களையும் நியமித்துக்கொண்டார்.

தோமஸ் அல்வா எடிசனின் முதல் கண்டு பிடிப்பு (21 வயதில்) மின்வாக்குப் பதிவுக் கருவியாகும். அடுத்ததாக இருப்புக் கணக்கு குறியீட்டு முறையைக் கண்டுபிடித்தார். 1877 இல் ஒலிப்பதிவுமுறை இசைப்பெட்டியை கண்டுபிடித்து, அதன்மூலம் "கிரமபோன்" என் னும் பேச்சுப் பெட்டியையும் நிருமாணித்தார்.

1879 இல் இவர் கண்டுபிடித்த வெண் அடர் ஒளிவீதி என்னும் விளக்குக் குமிழ் மிகப் பயனுள்ளதாக அமைத்தது. 1882 இல் இவர் கண்டுபிடித்த முக்கியமான அறிவியல் கண்டுபிடிப்பொன்று குறிப்பிடத்தக்க மாறுதல் களைக் கொண்டுவந்தது. இது எடிசனின் விளைவு என அழைக்கப்பட்டது. இதன் அடிப் படையிலேயே வெற்றிடக் குழல் உருவாக் கப்பட்டது. அத்துடன் மின்னியல் தொழில் உருவாக்கத்திற்கும் இது வழிவகுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியூயோர்க் நகரிலுள்ள வீடுகளுக்கு மின் விசையைக் கொண்டு செல்லக்கூடிய முதலாவது வழங்கீட்டு நிறுவனத்தை 1882 இல் நிறுவினார்.

புகையிரத வருகை அபாய அறிவிப்பு மணியைக் கண்டுபிடித்தார். இது எடிசன்பெல் எனப்பட்டது. கினிடொஸ்கோப் என்னும் இயந்திரத்தின் மூலம் பேசும் படங்களை இயக்கினார். திரைப்பட நிழற்படக் கருவிகள், திரைப்பட ஒளிரும்படிக் கருவிகள் ஆகியவற்றை மேம்படுத்துவதில் எடிசன் பெரும் பங்கினை வகித்தார். தொலைபேசி, தந்திப் பொறி, தட்டச்சுப்பொறி ஆகியவற்றிலும் பெரும் மாறுதல்களைச் செய்தார். உரைப் பதிவுப்பொறி படி எடுப்புப் பொறி சேமிப்புக் கலம் ஆகியவற்றையும் கண்டு பிடித்தார்.

எடிசன் ஒரே ஒரு கண்டுபிடிப்பைச் செய்ததுடன் மட்டும் நின்றுவிடாமல் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கண்டுபிடிப்புக்களைச் செய்தார்.

இந்தக் காரணத்திற்காகவே குக்லியல் மார்க்கோனி, அலெக்சாண்டர் கிரஹாம் பெல் போன்ற புகழ்பெற்ற விஞ்ஞானிகளுக்கு



முன்னதாக எடிசனுக்கு சிறப்பான ஒரு பெரும் பெயர் உண்டு என்பதை உலகிலுள்ள எந்தவொரு விஞ்ஞானியாலும் மறுக்க முடியாது.

மக்களின் அளப்பரிய நன்மைகளுக்காக தனது வாழ்நாளைக் கழித்த சாதனை வீரன் தோமஸ் அல்வா எடிசன், நியூ ஜேர்சி மாநிலத்தில் வெஸ்ட் ஒரேஞ் என்னுமிடத்தில் 1931 ஆம் ஆண்டு காலமானார்.

எடிசன் மறைந்த போதும் அவர் நிலை நாட்டிச் சென்ற மக்களுக்கான நன்மைகள் உலகம் உள்ள வரையில் மறக்க முடியாதவையாகும்.

ஸ்ரீ. சிந்துர்ஜன்
மாணவ முதல்வன் 2014-2015

வெற்றி பெற மூன்று வழிகள்
ஒன்று.. மற்றவர்களை விட அதிகமாக தெரிந்து கொள்ளுங்கள்.
இரண்டு.. மற்றவர்களை அதிகமாக பணியாற்றுங்கள்.
மூன்று... மற்றவர்களை விட குறைவாக எதிர்பாருங்கள்.

- வில்லியம்ஸ் ஷேக்ஸ்பியர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறியாமை என்னும் இருட்டு

"இருட்டைக் கண்டால் பயம் உண்டா கிறதே அது ஏன்" அதாவது ஆதிகால வாழ்க் கையில் தொற்றிக்கொண்ட பயம் இது. வேரூன்றி இருக்கின்றது. இன்னும் போக வில்லை. மனிதனுடைய எல்லாப் பணத்தை யும் சேர்த்து மொத்தமாக ஒரு மனம் உண்டு. இந்த மொத்த மனத்தில் இருட்டு பற்றிய பயம் பதிந்து நீடிக்கின்றது என்கிறார் அவர். இருட்டிலிருந்து வெளிச்சத்துக்கு வராத மனி தர்களும் இன்று அதிகம் பேர் உண்டு.

இருட்டைப் பற்றி அறியாதவர்கள் பல் வேறுபட்டவர்கள் உள்ளனர். உதாரணமாக ஒரு நாள் ஒரு மனிதன் ஆற்றுக்குள் மீன் பிடிக்கச் சென்றான். இன்னும் விடியவில்லை விடியும் வரை என்ன செய்வது என்று தெரியமால் கரையிலிருந்து காலாட்டிக் கொண்டிருந்தான். அப்போது காலில் ஒரு சின்ன மூட்டை ஒன்று தட்டுப்பட்டது. ஆனால் அவனுக்கு இருட்டில் அது என்ன மூட்டை என்று சரியாகத் தெரியவில்லை. அவன் அந்த மூட்டையைப் பிரித்துப் பார்த்த போது மூட்டைக்குள் சின்ன சின்ன கற்கள் நிறைந்திருந்தன. அவன் விடியும்வரை சும்மா பொழுது போக வேண்டும் என்பதற்காக மூட்டைக்குள் இருந்து ஒவ்வொரு கல்லாக எடுத்து ஆற்றில் வீசிக்கொண்டிருந்தான்.

கிழக்கே மெதுவாக வெளிச்சம் தெரிய ஆரம்பித்தது. பொழுது விடியத் தொடங் கியது. அதற்குள் அந்த மூட்டையிலிருந்த எல்லாக் கல்லையும் எறிந்துவிட்டான். கடை சியாக ஒரே ஒரு கல் மட்டும் தான் எஞ்சி யிருந்தது. வெளிச்சம் வந்ததும் அந்தக கல் லைப் பார்த்தான் அப்படியே திகைத்துப் போய் விட்டான். அவன் கையில் இருந்து வெறும் கல் இல்லை. விலையுயர்ந்த இரத் தினக் கற்கள்.

இருட்டில் என்னவென்று புரியாததால் மூட்டையில் இருந்த எல்லா இரத்தினக் கற் களையும் ஆற்றில் வீசி எறிந்திருக்கின்றான். இப்பொழுது அவனுக்கு அழுகையே வந்து விடும் போல் இருந்தது. வாழ்க்கையை வசதி யாக்கிக் கொள்ளும் வாய்ப்பு இருந்தும் இருட்டில் அதை இழந்துவிட்டான். ஒரு வகை யில் அவனுக்கு கொஞ்சம் அதிஷ்டம் இருந் திருக்கிறது. அதனால் தான் அந்தக் கடைசிக் கல்லை எறிவதற்கு முன் வெளிச் சம் வந்துவிட்டது. இதன் மூலம் அவனுடைய அறியாமை எனும் இருட்டு விளங்குகின்றது.



ஆனால் பலபேருக்கு இந்த அளவுக்குக் கூட அதிஷ்டம் இருப்பதில்லை வாழ்க்கை என்பது ஒரு பெரிய புதையல். அதைப் புரிந்து கொள்ளாமலே மனிதன் அதை வீசியெறிந்து கொண்டிருக்கிறான். சிலபேருக்கு புரிந்து கொள்ளும் நேரம் இருப்பதில்லை. சிலருக்கு புரிந்துகொள்ளும் நேரம் வரமுன்பே வாழ் நாளெல்லாம் ஓடிப்போய்விடும்.

இவ்வாறு மனித வாழ்க்கை இருட்டைப் பற்றித் தெரியாமல் உள்ளது. நாம் இருட் டிலும் வெளிச்சத்தைப் பயன்படுத்தி எத் தனையோ வேலைகளைச் செய்கின்றோம். ஆனால் அறியாமை எனும் இருளைப் போக்க முயற்சி எடுப்பதில்லை.

கு.மோஜனன்
மாணவ முதல்வன் 2014-2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE IMPORTANCE OF ENGLISH



English is used by a vast majority of people all over the world today. It is said that over 80 percent of the world's population use English in their day to day activities.

English is the mother tongue of the people of England, America and Australia. Even it is very widely spoken in many countries in the world, some countries show a keen interest in learning English and is the much preferred foreign language out of variety of about 32 languages.

Many years ago the British ruled our country.The language that was used to govern was English. The tradition of learning and teaching this language has been in existence since then, they opened schools in main towns with the help of the government. The children who studied in these schools studied all the subjects in English. Those who knew English were able to get good jobs, there fore the English language got a very important place in SRILANKA. In addition, English is also the most common international language in the Asian continent due to historical reasons mentioned earlier. So it is the international language that is most convenient to us.

Anyway, English is very useful to us. English is one of the most dominant and widely used languages in the world. We use this language to communicate with other countries of the world.

And also it is used as a link language. There are many ethnic groups such as Sinhalese, Tamils, Muslims and burghers, living in various parts of SRILANKA. These people use English to communicate with other ethnic groups. English is used as a language or mass communication.

In recent times there has been a great revolution in the fields of information and education with the advancement of television. We use this language in modern modes of international communication such as fax, telex, computer, internet and other techniques.

It is used as language of trade. It will also help the people to seek employment in abroad. In the 21st century, most of the house wives move away from the traditional methods of cooking and home making to quicker and easier methods of food preparation and others are written in international language. Also in farming and agriculture more and more people are interested in new technology. These people need modern and scientific knowledge in the selection of seeds, control of pests, and weeds. All these in formations are received through an International language.

Therefore learning English is very important. If one knows English very well he can reach the top rank of the profession with less effort and he can get better results in any field of study. Now all the subjects in the university are taught in English. The Knowledge of English will give the students an added advantage to acquire the best and the latest information in their fields of study. All they need to know what is happening around the world through an international language. So, everyone must learn English. We must read many books. Because many books on science, commerce, law and Arts written in English. Moreover we can read world famous books and poems. Thus learning English helps to enrich our lives in many ways. That is why we should learn English.

*N.Nilaxshan*
*Prefect 2014- 2015*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காப்புறுதியின் வணிகத்திற்கும் வாழ்க்கைக்குமான முக்கியத்துவம்



காப்புறுதி என்பது இடர்களை ஏற்றுக் கொள்ளும் சேவை யாகும். இடர்கள் என்பது நட்டத்தோடு தொடர்புடைய நிகழ் தகவாகும். காப்புறுதியானது இருதரப்பினருக் கும் இடையில் ஏற்படுத்தப்படும் ஒரு ஒப்பந்த மாகும். இங்கு இரு தரப்பினராக காப்புறுதி யாளரும் காப்புறுதி நிறுவனமும் காணப்படு கின்றன. இது காப்புறுதியாளர் ஒரு குறித்த தொகையினை அல்லது மாதாந்தக் கொடுப் பனவு ஒன்றை செலுத்துவதன் மூலம் தமது ஆயுளுக்கு அல்லது தமது ஆதனத்திற்கு ஏற் படக்கூடும் எனக் கருதும் இடர்நிகழ் தகவினை மாற்றுகின்ற செயற்பாடாகும். காப் புறுதியாளர் குறித்த கட்டணத்தை செலுத்த வேண்டும் என்பதோடு காப்புறுதி நிறுவனம் குறிப்பிட்ட இடர் ஏற்படின் அதற்கான இழப் பீட்டுக் தொகையினை செலுத்த வேண்டும்.

காப்புறுதி சேவையானது ஒழுங்கான முறையில் இடம்பெறுவதற்கு சில காப்புறுதி தத்துவங்கள் அவசியமானவையாகும். அந்த வகையில் காப்புறுதி உரிமை அல்லது ஆயுள் தொடர்பான உரிமை காப்புறுதி செய் வோரிடம் காணப்பட வேண்டும். அதாவது காப்புறுதி செய்யும் ஆளுக்கு அல்லது ஆத னத்திற்கு ஏற்படும் இடரானது காப்புறுதி செய்வோருக்கு நிதி ரீதியான இழப்பை ஏற் படுத்த வேண்டும் என்பதாகும். காப்புறுதி ஒப் பந்தம் ஒன்றை ஏற்படுத்தும் போது உச்ச நம்பிக்கையுடன் அவ்வொப்பந்தத்தில் ஈடுபட வேண்டும். காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றில் ஈடு படும் போது அது தொடர்பான அனைத்து முக்கிய விடயங்களையும் காப்புறுதி நிறு வனத்திற்கு காப்புறுதி செய்வோர் வெளிப் படுத்த வேண்டும்.

காப்புறுதித் தத்துவத்தில் இழப்பீட்டுத் தத்துவம் குறிப்பிடுவது யாதெனில், காப் புறுதி ஒப்பந்தம் ஒன்றில் இலாபம் உழைக்க முடியாது. காப்புறுதி செய்வோருக்கு ஏதேனும் நட்டம் ஒன்று ஏற்படும்போது அங்கு நட்டம் ஏற்பட முன் அவர் இருந்த நிலைக்கு காப்புறுதி நிறுவனமானது அவரைக் கொண்டு வருவதற்கு அவருக்கு இழப்பீட்டி னைச் செலுத்த வேண்டும். இங்கு இழப்பு முழுமையாக வழங்கப்படுகின்றதே ஒழிய இலாபம் வழங்கப்படுவதில்லை.

மேலும் ஒரு ஆதனம் தொடர்பில் ஒன் றுக்கு மேற்பட்ட காப்புறுதி ஒப்பந்தங்களை ஏற்படுத்த முடியும். இவ்வாறு மேற்கொள்ள முடியாது என்று எவ்வித தடைகளும் கிடை யாது. ஆயினும் ஒன்றுக்கு மேற்பட்ட காப்பு றுதி ஒப்பந்தங்களை செய்யும் போது குறிப் பிட்ட காப்புறுதி நிறுவனம் தாம் உடன்பட்ட அளவிற்கு விகித சமனாக இழப்பீட்டினை வழங்க வேண்டும். இங்கு ஒன்றுக்கு மேற் பட்ட நிறுவனங்கள் ஒப்பந்தம் செய்யப்பட்டி ருப்பின் இவை இழப்பீட்டினை தமக்குள் விகித சமனாக பகிர்ந்து வழங்குகின்றன. இதனை பங்களிப்புத் தத்துவம் விளக்கு கின்றது.

பதிலாள் வைப்புத் தத்துவமானது வெளி யக கட்சிக்காரர் ஒருவரினால் காப்புறுதி செய்யப்பட்டிருக்கும் நிறுவனத்திற்கு ஏதே னும் இழப்பு ஏற்படுத்தப்படும் எனின் அது தொடர்பான இழப்பீட்டினை காப்புறுதி நிறு வனம் வழங்கிய பின்பு அவ்வெளியக கட்சிக் காரர் தாம் விளைவித்த இடருக்காக செலுத் தும் தொகையினை பெறமுடியாது. இனி இக்கொடுப்பனவு காப்புறுதி நிறுவனத்தையே சாரும் என்பதை எடுத்துக் காட்டுகின்றது.

அண்மைகாரணி தத்துவமானது காப்புறுதிச் சொத்துக்கு ஏற்படும் இழப்பு காப்புறுதி ஒப்பந்தத்தில் கூறப்பட்டிருக்கும் இழப்பிற்கு அண்மித்ததாக காணப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது மாத்திரமே அதற்கான இழப்பீடு வழங் கப்படும். அதாவது காப்புறுதி ஒப்பந்தத்தில் இடர்களாக எவை குறிப்பிடப்பட்டுள்ளனவோ அவ்விடர்கள் ஏற்படின் மாத்திரமே இழப்பீடு வழங்கப்படும் என்பதை விளக்குகின்றது. இங்கு காப்புறுதி நிறுவனமானது இடர் ஒன்றை நிதி அடிப்படையிலேயே அனுமானிக் கின்றது. அந்த வகையில் எதிர்காலத்தில் ஏற்படப் போகும் இழப்பானது நிதி ரீதியாக அளவிடக்கூடியதாகவும் ஏனைய இழப்புக்க ளோடு தொடர்பற்றதாகவும், ஏற்பட்டிருக்கும் இடருக்கான காரணம், இடம், நேரம் என்பவற்றை நிச்சயித்துக் கூறக்கூடியதாகவும் இருந்தால் மாத்திரமே காப்புறுதிக்கான இடராக நிச்சயிக்கப்படுகின்றது.

பொதுவாக காப்புறுதியானது ஆயுள் காப்புறுதி, சாதாரண காப்புறுதி என இரு வகையாக காணப்படுகின்றது. ஆயுள் காப்பு றுதியானது நபர் ஒருவரின் ஆயுளுக்கு ஏதேனும் இடர் ஏற்படும் சந்தர்ப்பத்தில் அதற்காக மேற்கொள்ளும் காப்புறுதியாகும். இங்கு உயிர் ஒன்றிற்கே காப்புறுதி செய்யப்படு கின்றது. ஆயுள் காப்புறுதியில் மரணத்திற்கு மற்றும் வாழ்க்கையின் ஏனைய சந்தர்ப்பங் களிற்கு காப்புறுதி செய்யப்படுவதோடு செலுத்தப்படும் காப்புறுதி கட்டணத்தை மீளப் பெற்றுக் கொள்ள முடிவதோடு ஆயுள் காப்பு றுதியில் தாம் விரும்பிய தொகைக்கு காப் புறுதி செய்யவும் முடியும்.

சாதாரண காப்புறுதியானது சொத்துக் களுக்கு ஏற்படும் இழப்பிற்காக நட்டஈட்டினை வழங்கும் முகமாகவே வழங்கப்படுகிறது. இங்கு ஆதனம் மீதே காப்புறுதி செய்யப்படு கின்றது. இடர் நிகழ்ந்தால் மாத்திரமே இழப் பீடு வழங்கப்படும். தீ அபாயம், மோட்டார், தனிநபர் சடுதி விபத்து போன்ற இடர்களுக்கு இழப்பீடு வழங்கப்படும்.

காப்புறுதியின் வணிகத்திற்கும் வாழ்க் கைக்குமான முக்கியத்துவத்தினை நோக்குவோமானால், காப்புறுதியதானது வணிகருக் கான மிகப்பிரதான துணைச் சேவையாகும். அதே போன்று வணிகங்களிற்கும் தனிநபர் களுக்கும், இடர்களுக்கான இழப்பீட்டினை வழங்குகின்றது. பொருளாதாரம் ஒன்று முன் னோக்கிச் செல்ல நாடொன்றின் உற்பத்தி யினையும் வருமானத்தையும் உயர்வடையச் செய்ய வேண்டும். இவ்வாறு அதிகரிக்க முனையும் போது நிறுவனங்கள் பாரிய நட்ட அச்சத்தினை எதிர்நோக்க வேண்டி ஏற்படும். நிறுவனங்கள் தமது இயலுமையை அதி கரிக்கும் போது நட்ட அச்சமும் நேரடியாக அதிகரிக்கும். இந்த நட்ட அச்சத்தினை வேறு ஒருதரப்பு ஏற்கும் போது குறித்த நிறுவனம் புத்தாக்கம் ஏற்பட்டு பாரிய பொருளாதார விருத்தி ஏற்படமுடியும். அந்தவகையில், புதிய வணிகங்கள் தோற்றம் பெறல், புத்தாக் கங்கள் ஏற்படல் புதிய தொழில்நுட்பங்கள் கண்டுபிடிக்கப்படல். புதிய வாய்ப்புக்கள் ஏற் படல், பொருளாதாரத்தில் தனி நபர்களின் உற்பத்தி திறன் அதிகரித்தல், வாழ்க்கைத் தரம் விருத்தியடைதல். வெளிநாட்டு சந்தை களிலும் செயற்றிட்டங்களிலும் பங்கு கொள்ள முடிதல் போன்ற சூழ்நிலைகளை உருவாக்க காப்புறுதி உந்துசக்தியாக அமைகின்றது.

மேலும் இடருக்கான நட்டஈடு காப் புறுதி நிறுவனத்தினால் வழங்கப்படுவதால் காப்புறுதி செய்வோருக்கு பண நெருக்கடி அற்றுப் போகின்றது. ஆயுள் காப்புறுதியை பொறுத்தமட்டில் இழப்பீடு வழங்கப்படுவ தோடு இது ஒரு நல்ல முதலீடாகவும் காணப் படுகின்றது.

அதேபோன்று காப்புறுதி துறை நிதித் துறையோடு தொடர்புறுவதால் நிதிநிலை உறுதிக்கு முதலீடுகளை வழங்குகின்றது. முதலீட்டு உருவாக்கத்துறையாகவும் காப் புறுதி பொருளாதாரம் ஒன்றில் பெரும்பங்கு வகிக்கிறது. இதனால் காப்புறுதி நாடொன் றின் பொருளாதார அபிவிருத்திக்கு பாரியபங் களிப்பினை செய்கின்றது என கூறமுடியும்.



த.சரண்ராஜ்
மாணவ முதல்வன் 2014-2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத காவலரண்



இலங்கையின் வடபாகத்தின் தலையாக அமைந்திருக்கின்ற யாழ்ப்பாண குடாநாட்டின் அழகினை விபரிக்க முடியாது. தன்னகத்தே பல்வேறு வரலாற்றுப்பதிவுகளை கொண்டுள்ள யாழ்ப்பாணத்தில் எஞ்சி நிற்கின்ற வரலாற்றுக் கட்டமைப்புக்களும், பண்பாட்டு விழுமியங்களும் யாழ்ப்பாணத்தின் தனித்துவத்தினை இன்றும் பறைசாற்றுகின்றன. இவற்றுள் யாழ்ப்பாணத்தின் தென்கரையோரத்தில் யாழ்ப்பாணக் கடனீரேரியை அண்மித்து சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த யாழ்ப்பாணக் கோட்டை அமையப்பெற்றுள்ளது.

ஒல்லாந்தரால் அமைக்கப்பட்ட இக்கோட்டையானது கட்டமைப்பில் மிக அற்புதமானதாகும். கீழைத்தேசத்திலுள்ள கோட்டைகள் யாவற்றிலும் யாழ்ப்பாணக்கோட்டை மிகப்பலமானதும், பாதுகாப்பானதும் என அனைத்து கட்டிடக்கலை விற்பன்னர்களாலும் விதந்துரைக்கப்பட்டது. யாழ்ப்பாணக் கோட்டை அமைக்கப்பட்ட காலத்தில் இந்து சமுத்திர நாடுகள் பலவற்றிலும் பலமான கோட்டைகள் கட்டப்பட்டிருந்தன. ஆனால் அவை எதுவும் யாழ்ப்பாணக் கோட்டையின் முழுமைக்கும், நிறைவுக்கும் தொழில்நுட்பத் திறனுக்கும் நிகராகாது என பலரும் போற்றியுள்ளனர்.

வடமாகாணத்தின் தலைநகரமாக விளங்கும் யாழ்ப்பாணத்தின் தெற்குபகுதியில் யாழ்ப்பாண கடனீரேரியைச் சூழ யாழ்ப்பாணக் கோட்டை அமைந்துள்ளது போக்குவரத்திற்கு ஏதுவான கடனீரேரி, அருகில் அமைந்துள்ள கொழும்புத்துறை, அலுப்பாந்தித்துறை, அகழிக்கு நீர்தரக்கூடிய கடல், பகைவர்களின் தாக்குதலில் இருந்து பாதுகாப்பு வழங்கக்கூடிய யாழ்ப்பாண கடனீரேரியின் வடிவம் என்பன கோட்டை இவ்விடத்தில் அமைய முக்கிய காரணிகள் ஆகும். கோட்டையானது ஆரம்பத்தில் போர்த்துக்கேயராலேயே அமைக்கப்பட்டது. பின்னர் ஒல்லாந்தரால் மீள் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட நிலையினையே பார்க்கின்றோம்.

## போர்த்துக்கேயர் காலம்

இலங்கையில் ஆட்சி நடத்திக்கொண்டிருந்த போர்த்துக்கேயர்கள் 1620ம் ஆண்டு யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றினர். அப்போது நல்லூரில் சமதரையில் கிளர்ந்தெழும் தமிழர்களுக்கு மத்தியில் தாம் தங்கியிருப்பதிலுள்ள பாதுகாப்பின்மையை போர்த்துக்கேயத் தளபதி "பிலிப்தே ஒலிவேறா" புரிந்து கொண்டார். அடுத்து தானும் தனது படை வீரர்களும், பறங்கிகளும் தங்கியிருப்பதற்காக பாதுகாப்பான ஓர் கோட்டையை அமைக்க தீர்மானித்தார். அதற்கான இடமாக ஆரம்ப காலத்தில் முஸ்லீம்களின் சிறிய வர்த்தக சாலைகள் அமைந்துள்ள பகுதியை (தற்போதைய பண்ணை) தேர்வு செய்தனர் .

நல்லூர் கோவிலை இடித்து பெறப்பட்ட கற்கள் முதற்கட்டமாக கோட்டை அமைப்பதற்கு கொண்டுவரப்பட்டன. முருகைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்கள், சுண்ணாம்புக் கற்கள், செங்கல் கட்டிகள் என்பன பாரிய கூடார வண்டிகளில் ஏற்றப்பட்டும், மனித சங்கிலிகள் மூலமும் பண்ணைக்கு கொண்டு வரப்பட்டன. மற்றும் வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு முதலான தீவு களை சேர்ந்தவர்கள் கோட்டை அமைப்பதற் கான முருகைக் கற்களை வழங்கியிருந் தனர். இத்தகைய வளங்களைக் கொண்டு அகழிகள் சூழ நாற்சதுர வடிவ கோட்டையை போர்த்துக்கேயர் அமைத்துக் கொண்டனர்.

## ஒல்லாந்தர் காலம்

போர்த்துக்கேயரின் ஆட்சி இலங்கை யில் நிலவிக் கொண்டிருந்த காலப்பகுதியில் 1658ம் ஆண்டு ஒல்லாந்தர் கொழும்பினை தமது ஆதிக்கத்தின் கீழ்கொண்டு வந்தனர். மார்ச் மாதம் 9ம் திகதி ஒல்லாந்தப்படை யாழ்ப்பாணத்தை வந்தடைந்தது. மார்ச் மாதம் 16ம் திகதியில் இருந்து யூன் மாதம் 21ம் திகதி வரை ஒல்லாந்தரின் முற்றுகை தொடர்ந்தது. போர்த்துக்கேயரின் பலம் வாய்ந்த யாழ்ப்பாண கோட்டையின் நான்கு பக்கங்களையும் சுற்றிவளைத்து ஒல்லாந்த படைகளின் முற்றுகை 107 நாட்கள் தொடர்ந் தன. கோட்டைக்குள் இருந்த உணவுப் பொருட்கள் தீர்ந்து போன நிலையில் கோட் டைக்குள் இருந்தவர்களுக்கு கோட்டைகுள் ளிருந்த நாய்களும், பூனைகளும் இரை யாகின. 1658ம் ஆண்டு யூன் 21ம் திகதி யாழ்ப்பாண கோட்டைக்குள் இருந்த போர்த் துக்கேயரின் கொடி இறக்கப்பட்டு ஒல்லாந்த ரின் கொடி ஏற்றப்பட்டது. ஒல்லாந்தரினால் அமைக்கப்பட்ட கோட்டை கட்டமைப்பில் மிக உன்னதமானதாகும்.

*"கீழைத்தேச இந்து சமுத்திரப் பிராந்தியத் தில் ஒல்லாந்தர் காலத்தில் பல கோட்டைகள் இராணுவ முக்கியத்துவத்துடன் விளங்கியிருந்தன. ஆனால் அவற்றில் எதுவும் யாழ்ப்பாண கோட்டையின் நேர்த்திக்கும், முழுமைக்கும் ஈடாகாது"*

*-டபிள்யூ .ஏ. நெல்சன் -*

## ஒல்லாந்தர் அமைத்த யாழ்ப்பாண கோட்டையின் சிறப்பியல்புகள்

யாழ்ப்பாண கோட்டையானது ஐந்து கொத்தளங்களைக் கொண்டிருந்தது. கடனீ ரேரி பக்கமாக இரண்டு கொத்தளங்களை யும், நிலப்புறமாக மூன்று கொத்தளங்களை யும் கொண்டிருந்தது. இந்த ஐந்து கொத் தளங்களிற்கும் ஒல்லாந்தர்கள் தெளிவாக பெயரிட்டிருக்கிறார்கள், கோட்டையின் வட புறக்கொத்தளம் ''உற்றெச்'' என அழைக்கப் பட்டது. வடகிழக்குப்புற கொத்தளம் ''ஹெல்டர்லாந்து'' என்றும், தென்கிழக்கு புறக்கொத்தளம் "ஒல்லாந்து" என்னும், தென் மேற்குப்புற கொத்தளம் ''சீலாந்து'' என்றும், வடமேற்குப்புற கொத்தளம் ''பிறிஸ்லாந்து'' என்றும் அழைக்கப்பட்டன. இந்த ஐந்து கொத்தளங்களும் நெடும் மதில்களினால் இணைக்கப்பட்டிருந்தன. கொத்தளங்களை இணைக்கின்ற மதில் ஒவ்வொன்றினதும் நீளம் ஏறக்குறைய 554 அடிகளாகும். கொத் தளங்களின் சுற்றளவை தவிர்த்து சுற்று மதிலின் மொத்த நீளம் 3960 அடிகளாகும் முக்கோண வடிவினதான கொத்தளங்கள் ஐந்தினையும் உள்ளடக்கியதாக உள்கோட் டையின் சுற்றளவு 6300 அடிகளாக அமைந் துள்ளது.

யாழ்ப்பாண கோட்டையின் மதில் உச்சி 20 அடி அகலமானதாகும், அடித்தளத்திற்கு அது 40 அடி வரை அகன்று விரிந்து செல்லு மாறு வெகு அற்புதமாக அம்மதில்களை அமைத்துள்ளனர். மதிலின் வெளிப்புறம் ஏறத்தாழ 6 அடி அகலத்திற்கு முருகைக் கற் களினால் கட்டப்பட்டுள்ளது. உட்பக்கம் 4 அடி அகலக் கட்டமைப்பை கொண்டுள்ளது. இவ்விரு கட்டுக்களுக்கும் இடைப்பட்ட பரப்பு மண்ணால் நிரவப்பட்டுள்ளது. இம்மதிற் கற் கள் அகழி மட்டத்திலிருந்து ஏறத்தாழ 30 அடிகள் கம்பீரமாக உயர்ந்து நிற்கின்றன. உண்மையில் இவை பலமான அரண்களே. எவ்வளவு வலிமை வாய்ந்த பீரங்கிகளினா லும் தகர்த்தெறிய முடியாத மதிற்சுவர் களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள் கோட்டையை சுற்றி அமைந்துள்ள சுரியும், நீரும் கொண்ட அகழி அற்புதமான அழகும், பாதுகாப்பும் கொண்டது உயர் கொத்தளப்பகுதியில் அகழியின் அகலம் 132 அடிகளாகும். மதிலின் அடிப்பகுதியிலிருந்து நோக்கும் போது அகழியின் அகலம் 158 அடிகளாக இருப்பதைக் காணலாம். 3960 அடிகள் நீளமான இக்கோட்டையின் சுற்று மதிலைச் சூழ்ந்து 6400 அடிகள் நீளமான அகழியின் வெளிச்சாய்வுச்சுவர் அமைந் திருக்கின்றது.

அகழியின் வெளிமதிற் சாய்சுவரோடு 4 தாழ் கொத்தளங்கள் அமைந்துள்ளன. இத் தாழ்கொத்தளங்கள் கோட்டை மதில் ஒவ் வொன்றின் நடுப்பகுதிக்கு நேரெதிரில் அக ழிக்கு அப்பால் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவை வடிவில் சிறிய கோட்டை வடிவினை ஒத்திருப்பதனால் இவற்றினை சின்னக்கோட் டைகள் எனவும் கூறுவர். முற்றவெளியில் முனியப்பர் கோயில் அருகே இத்தாழ் கொத் தள கோட்டை உள்ளது. வடக்கே வீரசிங்கம் மண்டபத்தை நோக்கியும், மேற்கில் பண்ணை பொலிஸ் விடுதியை நோக்கியும் சின்னகோட்டைகள் எனும் தாழ்கொத்தளங் கள் அமைக்கப்பட்டுள்ளன. இன்னொரு தாழ் கொத்தளம் பிரதான வாயிலின் நுழைப்பகுதி யில் அமைக்கப்பட்டிருக்கின்றது. இத்தாழ் கொத்தளங்கள் முருகைக்கற்களினால் கட்டப்பட்டு உட்புற ஒடுங்கிய பாதைகளை கொண்டனவாகவும், முருகைகற்களால் மூடப்பட்ட கூரைகள் கொண்டனவாகவும் உள்ளன.

தாழ் கொத்தளங்களில் ஒவ்வொரு காவலரண் கூடுகள் உள்ளன. உயர் கொத் தளங்களில் முக்கோணத்தின் முனைகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொன்றாக மூன்று காவலரண்கள் இருந்தன. ஆக மொத்தம் 19 காவலரண்கள் இருந்தன. அகழிவெளிச் சுவரின் மத்தியில் முற்றவெளியில் அமைந்த பாதுகாப்பற்ற தாழ் கொத்தளங்கள் எதிரியின் வருகையை முதலில் தடுக்கும் நிலை களாகும். இத்தாழ் கொத்தளங்களினால் எதி ரிப்படையை தடுக்க முடியாவிடில் உயர் கொத்தளங்கள் அடுத்து செயற்படும். தாழ் கொத்தளங்கள் நிலமட்டத்தோடு அமைந் தவை. உயர்கொத்தளங்கள் அகழிக்கு அப் பால் 30 அடி உயரத்தில் பாதுகாப்பாக அமைக்கப்பட்டிருப்பவையாகும். இவற்றை விட மதிலில் 10அடிக்கு ஒரு பீரங்கி பொருத் தக்கூடிய இடைவெளி அமைக்கப்பட்டி ருந்தது.

போர்த்துக்கேயரினாலும், ஒல்லாந்தரி னாலும் கட்டப்பட்ட கோட்டைகள் உண்மை யில் பலம் வாய்ந்தவை. பெரும்பாலான கோட்டைகள் முருகைக்கற்களினால் கட்டப் பட்டவையாகும். முருகைக்கற்களை தாம் விரும்பிய வடிவத்திற்கு கற்தச்சர்களால் வெட்ட முடிந்தது. முருகைக்கற்கள் இலகு வில் நொருங்கும் தன்மையற்றது. அழுத்த நெகிழ்ச்சி கொண்டது. முருகைகற்களை சுவர்களாக கனவடிவில் வெட்டுவதற்கு இலகுவாக இருந்தது. இக்கற்கள் பின்னர் சுவர்களில் பொருத்தப்பட்டன. இவர்களால் அமைக்கப்பட்ட கோட்டைகள் அனைத்தும் கடற்கரையோரங்களில் அமைந்திருந்தன. யாழ்ப்பாணக் கோட்டை, ஊர்காவற்றுறை கெமன் ஹீல் கோட்டை, காங்கேசன்துறை கோட்டை, வெற்றிலைக்கேணி பாஸ் பைல் கோட்டை ஆகியன கடற்கரையோரங் களிலும் இயக்கச்சி பெஸ் சுட்டர் கோட்டை, ஆனையிறவு, பூநகரிக்கோட்டை என்பன பாதைக் கடவைகளிலும் அமைந்திருந்தன. இத்தகைய முக்கியத்துவத்தினால் கடலிருந் தும், தரையிலிருந்தும் வரும் எதிரிகளின் தாக்குதலை எதிர்கொண்டு முறியடிப்பது இலகுவாக இருந்துது.

யாழ்ப்பாணக் கோட்டை சுண்ணக்கற் களாலும், முருகைகற்களாலும் அடுக்கி கொத்தளங்கள், அரண்சுவர்கள், அரண்சுவர் களிலிருந்து இறங்கும் படிகள் அனைத்தும் கட்டி முடிக்கப்பட்டது. ஐங்கோண வடிவில் யாழ்ப்பாணக் கோட்டை கம்பீரமாக எழுந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றது. இராணுவ பாதுகாப்பிற்கும், நிர்வாக நடவடிக்கைகளுக்கும் உரிய கட்டிடங்கள் யாழ்ப்பாணக் கோட்டைக்குள் அமைந்திருந் தன. ஒல்லாந்தரின் வதிவிட நகரமாகக் கோட்டைக்கு வெளியே பறங்கித்தெரு அமைந்திருந்தது.

கோட்டையின் வாயிற்கதவு 6 அங்குலத் திற்கு மேல் தடிப்பான மரக்கதவு ஆகும் அதில் போர்யானைகள் முட்டி பிளக்காதி ருக்க கூரான ஈட்டி முனைகள் பொருத்தப் பட்டிருந்தன. அவ்வளைவான வாயிற்கடவை யிலிருந்து அகழியைக் கடப்பதற்கு தொங்கு பாலம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. இக் கதவில் கோட்டை கட்டிமுடிக்கப்பட்ட ஆண்டாக 1680 எனக் குறிக்கப்பட்டி ருந்தது. அத்துடன் ஒல்லாந்தக் கம்பனியின் "VOC" யோடு கூடிய சின்னமும் பொறிக் கப்பட்டிருந்தது. கோட்டையின் வெளிச்சுவர் வேலைகள் 18ம் நூற்றாண்டு ஆரம்பத்தி லிருந்து கட்டமைக்கப்பட்டு 1972 ல் முடி வடைந்தது.

கோட்டைக்குள் ஒல்லாந்தர் லெப்ரி னண்ட் கவர்னர்களின் பங்களா பின்னர் ராணி மாளிகை அமைந்த இடத்தில் கட்டப் பட்டது. போர்த்துக்கேயரின் கத்தோலிக்க தேவாலயம் ஒல்லாந்தரால் புதுப்பிக்கப்பட்ட துடன், சதுரங்க பலகை வடிவத்தையும் பெற்றது. இத்தேவாலயம் கோட்டையின் வடபகுதியில் காணப்பட்டது. சிறைக்கூடங் கள், அதிகாரிகளின் நிர்வாகப்பகுதிகள் என்பன கோட்டையினுள் அமைந்திருந்தன. கோட்டையின் மையம் ஏறத்தாழ 4 ஏக்கர் பரப்பினைக் கொண்ட மைதானம் ஆகும். அது படையினரின் பயிற்சிக்கும், நடை பவனிக்கும் உதவியது.

கோட்டை இரண்டு வாயில்களை கொண்டிருந்தது ஒன்று நீர்வழி, மற்றையது நிலவழி. கோட்டையின் தென்மதிற்சுவரில் நீர்வழி அமைந்திருந்து. கடனீரேரியூடாக வரும் ஒருவர் கோட்டையின் மதிலருகில் சிறு கலத்தினை நிறுத்திவிட்டு காவலர்கள் அனு மதித்தால் கோட்டைக்குள் நுழைய முடியும். நிலவழியானது. தொங்குபாலத்தினூடாக இணைக்கப்பட்ட பிரதான வாயிற்புறமாகும். ஒல்லாந்தர் அப்பாலத்தை உள்மதிலோடு தூக்கி பாதையை துண்டிக்கவும், தேவை யான போது பாலத்தை இறக்கி இணைக்க வும் ஏற்ற வசதிகளை கொண்டிருந்தனர். வாயிற் சுவரின் மேல் மணிக்கோபுரம் ஒன்று கட்டப்பட்டிருந்தது. அதில் பிணைக்கப்பட்டி ருந்த காண்டாமணி தேவாலய வழிபாட்டு நேரத்தையும், காலநேரத்தையும் ஒலி யெழுப்பி அறிவித்து வந்தது. கோட்டைக்குள் இருந்த சதுரங்கவடிவத்தேவாலயம் "குருய்ஸ் கேர்க்". இது சமஅளவான பக்கங் களைக் கொண்ட கிரேக்க சிலுவை வடி வினது. இக்கிரேக்க சிலுவை வடிவினை "குருய்ஸ் கேர்க்" என்பர். கோட்டையின் தென்கிழக்கு பகுதியில் இத்தேவாலயம் அமைந்திருந்தது. இதன் பிரதான வாயில் மேற்குப்பகுதியில் அமைந்திருந்தது. வடக்கு வாயிலூடாகவும், தெற்கு வாயிலூடாகவும் ஆலயத்தினுள் பிரவேசிக்க முடியும். தேவா லயத்திற்குள்ளே 1660ம் ஆண்டுக்குரிய கல்லறைக் கற்களை காணலாம். ஆனால் பிரதான வாயிலில் இந்த ஆலயம் கட்டி முடிக்கப்பட்டது 1706 ஆம் ஆண்டிலேயே எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த தேவா லயம் "அடம் வன்டேர் டுயின்" என்ற கம் மாந்தர் காலத்தில் கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. இருபாலையில் இதற்கென அரியப்பட்ட செங் கற்களை பயன்படுத்திக் கட்டப்பட்டதாகவும் இச்செங்கற்களுக்கு ஆயிரத்து மூன்றரைப் பணம் கொடுக்கப்பட்டதாகவும் ஆவணங்கள் குறிப்பிடுகின்றன. இத்தேவாலயத்தில் இரு பாரிய மணிகள் பொருத்தப்பட்டிருந்தன. அவை போர்த்துக்கேய காலத்தவை என் பதற்கு அவற்றில் குறிக்கப்பட்டிருக்கும் "N.S. Dos Milagres De Jaffna Patao 1648" என்ற எழுத்துக்கள் சான்றுபகர்கின்றன.

ஒல்லாந்தரால் அமைக்கப்பட்ட அற்புத மான யாழ்ப்பாணக் கோட்டை வாயிலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒல்லாந்தர் கம்பனியைக் குறிக்கும் "VOC" என்ற எழுத்தோடு கூடிய யாழ்ப்பாண கம் மாந்தரின் ஆள் புலத்துக்குரிய கேடயச்சின் னம் பொருத்தப்பட்டிருந்தது. அந்தக் கேட யச்சின்னத்தில் யாழ்ப்பாணப் பிரதேசத்தின் கற்பகத்தருவான பனைமரம் வரையப்பட்டி ருந்தது. இது இந்த ஆள்புலத்தின் சரியான குறியீடாக விளங்குவதை 17ம் நூற்றாண்டில் இந்த மண்ணில் கால்பதித்து நிலைகொண்ட ஒல்லாந்தர் உணர்ந்திருந்தன.

## ஆங்கிலேயர் காலம்

பிரித்தானியர் ஆட்சி, யாழ்ப்பாணத்தில் 152 ஆண்டு காலம் நீடித்தது. இக்காலத்தில் யாழ்ப்பாணம் முன்னெப்பொழுதும் இல்லாத வகையில் சமூக, பொருளாதாரம் மற்றும் பௌதீக வளர்ச்சிகளை பெற்றது எனலாம். தற்காலத்தில் யாழ்ப்பாணக் கல்வி மேம் பாட்டுக்கு அச்சாணியாக விளங்கிய பாடசா லைகள் அனைத்தும் இக்காலத்தில் உரு வாக்கப்பட்டவையே ஆகும். யாழ்ப்பாண நகரத்திலிருந்து குடா நாட்டின் பலபகுதி களை இணைக்கும் வீதிகள் அமைக்கப் பட்டன. அத்துடன் யாழ்ப்பாணத்துடன் கண்டி, கொழும்பு போன்ற தென்னிலங்கை நகரங்களுக்கான வீதிகளும் உருவாகின.

1798ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 28ம் திகதி யாழ்ப்பாணக்கோட்டை ஆங்கி லேயரால் முற்றுகையிடப்பட்டது. கோட்டைக் குள் இருந்த 39 ஒல்லாந்தரும், 98 இந்தியச் சிப்பாய்களும் வெள்ளைக்கொடி ஏந்தி வந்து ஆங்கிலேயருடன் சரண் புகுந்ததாக வரலாறு கள் கூறுகின்றன. யாழ்ப்பாணக் கோட்டை யானது ஆங்கிலேயர் ஆட்சியில் யாழ்ப்பாண வரிசேகரிப்பு பிராந்தியத்தின் நிர்வாக மையமாக மாறியமை குறிப்பிடத்தக்கது. ஒல் லாந்தரின் படை வீரர்கள் தங்கியிருந்த பாசறை வீடுகள் ஆங்கிலேயர் காலத்தில் சிறைச்சாலைக் கட்டிடமாக மாற்றியமைக் கப்பட்டன. 1937 ஆம் ஆண்டு விக்டோரியா மகாராணியின் 60வது ஆட்சி நிறைவு யாழ்ப்பாண கோட்டையில் கொண்டாடப் பட்டது. 1940ம் ஆண்டு கோட்டையின் அரண் சுவர்களில் பொருத்தப்பட்டிருந்த பீரங்கிகள் நீக்கபடாமல் இருந்தது. இவர்களது ஆட்சி காலத்திலேயே ஞானப்பிரகாசர்சுவாமிகள் யாழ்ப்பாணக் கேட்டை சமையலறைக்கு மாடு ஒன்றை கொடுக்க விரும்பாது தமிழகம் தப்பிசென்றார் பின்னர் 1948ம் ஆண்டு காலப்பகுதியில் ஆங்கிலேயரின் கொடியிறக் கப்பட்டு அவ்விடத்தில் இலங்கை இராணுவ ஆதிக்கக்கொடி ஏற்றப்பட்டது.

## ஈழயுத்த காலப்பகுதி

யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து இலங்கை இராணுவத்தினை வெளியேற விடாது தமிழ் போராளிக்குழுக்களால் மேற் கொள்ளப்பட்ட முற்றுகை ஈழயுத்தத்தின் திருப்புமுனையாக அமைந்தது.

உலகப்போராட்ட வரலாற்றிலே மிக நீண்ட கால முற்றுகையாக இது அமைந் திருந்தது. மூன்று வருடங்கள் இருபத்தி மூன்று நாட்கள் இலங்கை இராணுவத் தினரை கோட்டைக்குள் முடக்கி முழுமை யான முற்றுகைக்குள் தமிழ்ப் போராளிக் குழக்கள் வைத்திருந்தன. தமிழீழ விடு தலைப்புலிகளுடன் இணைந்து 1984ம் ஆண்டு புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப் போன்ற விடுதலை இயக்கங்களும் இந்த முற்றுகைப் போராட்டத்தில் பங்கெடுத்தன. 1984 ஆம் ஆண்டு ஜூலை மாதம் தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ் மாவட்ட தளபதி கிட்டு தலைமையில் யாழ்ப்பாணக் கோட்டை முற்றுகைக்குட்படுத்தப்பட்டது. 1987ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இந்திய அமைதிகாக்கும் படை யாழ்ப்பாண கோட்டைக்குள் பிரவேசிக் கும் வரை இந்த முற்றுகையை இலங்கைப் படையினரால் முறியடிக்கவே முடியவில்லை. கொட்டடி, காங்கேசன்துறை வீதி, முனியப்பர் வீதி, நூல்நிலைய வீதி ஆங்காங்கே அரச கட்டிடங்கள் போன்றவற்றில் நிலை கொண்டிருந்த சுமார் 450 ஈழப்போராளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும், அவர்களால் கோட்டைச் சூழலில் விதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகளும் இலங்கை இராணுவத்தினரை வெளியேற விடாமல் தடுத்துக்கொண்டிருந்தன. 1984 தொடக்கம் 1985 வரையான காலகட்டப் பகுதியில் இலங்கை இராணுவத்தினரை முகாம்களுக்குள் முடக்கும் முயற்சியில் தமிழீழ விடுதலைப்புலிகள் ஈடுபட்டனர். இதன் ஒரு கட்டமாக கோட்டை, பலாலி முகாம்களை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர தொடர் முயற்சிகளை மேற் கொண்டனர். யாழ்ப்பாணக் கோட்டையி னால் எண்ணிலடங்கா வேதனைகளையும் மன உளைச்சல்களையும் தமிழ் மக்கள் அனுபவித்த காலம் அது. 1986 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26ம் திகதி கோட்டையில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினரை வெளியேறக்கோரி வர்த்தகர்கள் கடை யடைப்புப் போராட்டங்களில் ஈடுபட்டனர். மாணவர்கள் குழுக்களாகச் சென்று கோட்டை வாயிலில் மகஜர்களைக் கைய ளித்ததுடன். இராணுவத்தினரை வெளியேறக் கோரி மாணவர்கள், ஆசிரியர், பொதுமக்கள் தொடர் போராட்டங்களிலும் ஈடுபட்டனர்.

கோட்டை முகாமை அகற்றுவதே இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வாகும் என்ற கருத்தை வலியுறுத்தியும், காலநேரமின்றி மேற்கொள்ளும் ஷெல்வீச்சினை சுட்டிக் காட்டியும் இரண்டு லட்சம் மக்கள் கையெழுத் திட்டு கோரிக்கை ஒன்றையும் இலங்கை அரசிடம் விடுத்தனர். எனினும் எந்த தீர்வும் எட்டப்படவில்லை ஆங்காங்கே இடம்பெற்ற தொடர் ஷெல்வீச்சுக்களால் யாழ்ப்பாணத் தில் உயிர்ப்பலிகள் சர்வசாதரணமாகிக் கொண்டிருந்தன. மருத்துவமனை, பாட சாலைகள், ஆலயங்கள், பொதுக்கட்டி டங்கள் என்ற பேதமின்றி ஷெல்வீச்சு தொடர்ந்து கொண்டே இருந்தது. கோட்டை யிலிருந்து 1986 ஆம் ஆண்டு யூன் மாதம் 6 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலால் குருநகர் பகுதியில் 30 மீன வர்கள் பரிதாபமாக பலியாகினர். மேலும் 1986 ஒக்டோபர் 30 ஆம் திகதி கோட்டை வாயிலில் இருந்து வெளியேறிய சராமாரி யான துப்பாக்கிச் சன்னங்களினால் யாழ்ப் பாணம் மத்தியகல்லூரி மாணவ முதல்வன் அமரர்.பொன்.விபுலானந்தன் பலியாயிருந் தமை இங்கு நினைவு கூரத்தக்கது. 1987 ஜூலை மாதம் கோட்டையிலிருந்து மண்டை தீவு பகுதியை நோக்கி மேற்கொள்ளப்பட்ட பயங்கர ஷெல்தாக்குதலால் அப்பகுதி கடற் கரையோர மக்கள் பெருமளவில் உயிரிழந் தனர். இதனை விரிவாக விளக்கும் வகை யில் “கோட்டை- மண்டைதீவு ஷெல் உரு வாக்கிய யாழ்ப்பாண அகதிகள்” என்ற கட்டுரையை ஈழநாடு பத்திரிகை தொடர்ச்சி யாக பிரசுரித்தது.

யாழ்ப்பாணக் குடா நாட்டில் இருந்து இராணுவத்தினரை விரட்டியடிக்கும் திட்டம் கோட்டையை கைப்பற்றி விட்டால் சாத்திய மாகிவிடும் என புலிகள் நம்பினர். இந்த எண் ணத்திலேயே 1990 ஆம் ஆண்டு யாழ் கோட்டை விடுதலைப்புலிகளால் முற்று கைக்கு உள்ளானது. இராணுவத்தினர் தொடர்ந்து ஷெல்தாக்குதல்களையும், வெகு தூரம் சென்று தாக்கும் ஆட்லரி ஷெல் தாக்குதலையும் மாத்திரமின்றி பொம்மர் குண்டு வீச்சு, விமானத்தாக்குதல்களையும் மேற்கொள்ள பதிலுக்கு புலிகள் ரொக்கட் தாக்குதல்களை மேற்கொள்ள சுற்று வட்டாரத்திலிருந்த பலர் உயிரிழந்தனர்.

இராணுவத்துக்கான உணவு விநியோகம் ஹெலிகொப்டர்களின் மூலம் நடந்தது. மாலை வேளைகளில் உணவுப்பொருட் களை காவிவரும் ஹெலிகள் அரைவாசி உணவைக் கடலிலேயே போட்டன. இறுதி யில் கோட்டைக்குள் இருந்த இராணுத்தினர் பிரித்தானியர் காலத்தில் பாதுகாப்பாக அடைத்து வைக்கப்பட்டிருந்த நீர் வளியின் ஊடாக மண்டைதீவிற்கு தப்பி சென்றனர் அதன்பின்னர் கோட்டை தமிமீழ விடுதலை புலிகள் வசமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## தற்காலம்

யுத்தத்தினால் சேதமடைந்துள்ள சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த யாழ் கோட்டையை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வரும் வகையில் புனரமைப்பு பணிகள் தற்போது இடம்பெற்றுவருகின்றன. வரலாற்றுச் சின்னங்களை பாதுகாக்கும் செயற்றிட்டத்தின் ஒரு பகுதியாகவே யாழ்ப்பாணக் கோட்டை புனரமைக்கப்பட்டு வருகின்றது. இதன் புனரமைப்பு பணி நெதர்லாந்து அரசாங்கத்தின் நிதியுதவியுடனும், வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தின் உதவியுடனும், யாழ் நகரில் நிலை கொண்டுள்ள 51வது படையணித் தளபதியின் மேற்பார்வையின் கீழும், யாழ் பல்கலைக்கழகத்தின் மேற்பார்வையின் கீழும் மேற்கொள்ளப் படுகின்றது.

1681ம் ஆண்டு யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி போர்த்துக்கேயர் யாழ்ப்பாணக் கோட்டையை அமைத்தனர். அதன் பின்னர் 1658ல் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய ஒல்லாந்தர் இக்கோட்டையை மேலும் விஸ்தரித்து புனரமைத்தனர். 1990ம் ஆண்டு இலங்கை இராணுவத்தினரிடமிருந்து இக் கோட்டையை விடுதலைப்புலிகள் மீட்கும் முயற்சியில் ஈடுபட்டவேளை யாழ் கோட்டை பெருஞ்சேதத்துக்குள்ளானதுடன் அதனுள் இருந்த புராதன நினைவுச் சின்னங்களும் சேதமாகியமை குறிப்பிடத்தக்கது.

தற்போது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இக்கோட்டையைப் பாதுகாத்து உல்லாசப் பயணிகளைக் கவரும் இடமாக மாற்றியமைக்கும் நோக்கில், இப்போது புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பாதுகாப்பு தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. டச்சு அரசாங்கத்தின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்பட்டு வரும் இதன் புனரமைப்பு பணிகளின் 60 சதவீத மானவை பணிகள் தற்போது நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன. துரித கதியில் புனரமைக்கப் பட்டு வரும் யாழ்.கோட்டையின் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்தவுடன், இதனை நாட்டின் பிரத்தியேகமான கலாசார பொக்கிசங்களில் ஒன்றாகவும், பாரம்பரிய தளங்களில் ஒன்றாகவும் இணைத்துக் கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

க.நிமல்
மாணவ முதல்வன் 2014-2015






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையர்க்கு ஈ – டொக்ரர்



இலங்கையில் வைத்தியர்களின் நேரடி தொடர்பு என்பது ஒரு முக்கிய அம்ச மாகும். சில வருடங்களுக்கு முன் சமூக வலையமைப்பின் ஊடாக வைத்தியர்களை அணுகுவது ஒரு கனவாகவே கருதப்பட்டது. ஆனால் இன்று இது நனவாகியுள்ளது. www.edoctor.lk அர்ப்பணிப்பான ஒரு வைத் தியர்கள் குழுவினரால் கடந்த ஆரம்பிக்கப் பட்டது. இவ்வைத்தியக் குழுவினரின் பொறுப் புக் கூறலும். அர்ப்பணிப்பான சேவையுமே இணையத்தள www.edoctor.lkக்கான வழியை சமைத்துக்கொடுத்தது. இது ஒரு சாதனை மாத்திரமன்றி. குறுகியகாலத்தில் இலங்கையின் சமூக வலையமைப்பில் மிக மிக பிரசித்தமாகியுள்ளமை குறிப்பிடத்தக் கது.

எனவே மக்கள் வீணாக நேரத்தை கழிக்கும்போது சில விநாடிகள் இவ்வாறான சுகநல துளிகளை தாங்கிய விளம்பரங்களை வாசித்து தமது அறிவை தற்காலப்படுத்தி கொள்வதோடு, இன்றைய சுகநல விளைவு கள் தொடர்பான சுகாதார நிபந்தனைகளை யும் அறிந்து கொள்ள முடியும். வாராந்தம் வெளியிடப்படும் செய்தி மடல்கள் இளைஞர் களை கவர்ந்திழுப்பதோடு இவற்றை வாசிப் பதன் மூலமாக சுகநல விழிப்புணர்வை இளம் சமுதாயத்தின் மத்தியில் கட்டியெழுப்ப முடியும். www.edoctor.lk இணையத்தள மானது பெறுமதிமிக்க சுகாதாரம் சம்பந்த மான கட்டுரைகளை கொண்டுள்ளதோடு இக் கட்டுரைகளின் நுழைவானது மிகவும் பிரபலமாகிக் கொண்டு வருவதாக அலக்ஸ் இணையத்தள புள்ளிவிபரங்கள் கூறு கின்றன.

இலங்கை பொது மக்கள் இதனை பதிவிறக்கம் செய்யாமல் நேரடியாகவே இணையத்தில் வாசித்து அறிந்துகொள்ள முடியும். இக்கட்டுரைகள் பிரசித்தமான சமூக தொடர்பாடல் இணையத்தளங்களுக்கும் பகிரப்பட்டுள்ளது. எனவே இளம் தலைமுறை யினர். இக்கட்டுரைகளை பார்வையிட்டு அறிந்து கொள்வதற்கு நல்லதொரு சந்தர்ப் பம் வாய்ந்துள்ளது. தற்போது மிகக்குறை வாகவுள்ள முறையான சுகாதாரக் கல்வி பற்றிய தெளிவை அவர்களிடம் ஏற்படுத்தக் கூடியதாக உள்ளது. சிறந்த நாளைய தினத்திற்கான ஆரோக்கிய வாழ்வு ஆரோக் கியமான சமுகத்தை கட்டியெழுப்புவதே இவ் வலைத்தளங்களின் இறுதி இலக்காகும்.

இலங்கையர் மத்தியில் உலகமய மான சுகாதார இணையத்தளங்கள் பிரபல்ய மாகவுள்ளன. ஆனால் அவை இலங்கை மக் களின் வாழ்க்கை முறைக்கும் சுகநலதேகா ரோக்கியத்திற்கும் பொருத்தமானவையல்ல. E-DOCTORக்கு நன்றி, எங்களுக்குச் சொந்தமான தமிழ் மொழியிலான இணையத் தளம் www.edoctor.lk இருக்கும்போது இலங்கையர்கள் வெளிநாட்டு இணையத் தளங்களை பார்வையிடத் தேவையில்லை.




ச.பவித்ராம்
மாணவ முதல்வன் 2014-2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போக்குவரத்துச் சாதனமும் நாமும்.



இன்று உலகம் உள்ளங்கையளவு என்று மற்றவர்கள் கூறக்கேட்டிருக்கின்றோம். அதற்கு காரணம் யாதென நோக்கின் போக்குவரத்தும் தொடர்பாடலுமே ஆகும். அவ்வகையில் போக்குவரத்துத் தொடர்பாக நாம் ஆராய்வோமாக இருந்தால், ஆதியில் தானே நடந்தும் பின்னர் மிருகங்கள் மீதும் பயணம் செய்த மிகப் பெரும் புரட்சிதான் சக்கரத்தை (சில்லு) கண்டுபிடித்தமை. இதன் மூலம் ஆரம்பத்தில் வண்டிகளில் தொடர்ந்த அவனது பயணம் தான் இன்று வேற்றுக் கிரகம் வரை மட்டுமல்ல, அதை தாண்டியும் தொடர்கிறது. ஆம் தனது திறமைகளால் மனிதன் இன்று தரையிலும் நீரிலும் ஆகாயத்திலும் பறந்து செல்கிறான் என்றால் பொருந்துகிற அளவிற்கு மின்னல் வேகத்தில் செல்லும் போக்குவரத்து சாதனங்களை கண்டறிந்து தனது தேவைகளை இலகுவில் நிறைவேற்றிக் கொள்கிறான்.

இனி போக்குவரத்து சாதனங்களின் விளைவுகள் பற்றி பார்ப்போமாக இருந்தால், மக்கள் தமது தேவைகளை நிறைவேற்ற ஓரிடத்தில் இருந்து பிறிதொரு இடத்திற்குச் செல்லுதல், ஒரு நாட்டில் இருந்து தொழில் தேடி பிற நாடுகளிற்குச் செல்லுதல், கண்டம் விட்டுக் கண்டம் செல்லுதல் என பலவழிகளில் போக்குவரத்து உதவுகிறது. இதற்கு பேரூந்து, சொகுசுக்கப்பல்கள், புகையிரதங்கள் மற்றும் விமானங்கள் என்பன பயன்படுத்தப்படுகின்றன. இவற்றில் அதிகளவான பயணிகள் ஒரே சமயத்தில் செய்வதனால்

- இனங்களுக்கு இடையிலான நட்புறவு
- பிற மதங்களுக்கு இடையிலான புரிந்துணர்வு
- விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு
- சகிப்புத்தன்மை
- ஏனையவருக்கு உதவுதல்

என்பன அனுகூலங்களாக கிட்டுகின்றன.

இதுமட்டுமல்லாது குறைந்த கட்டணத்தில் விரைவாக நாம் விரும்பிய இடத்திற்கு போய் வரவும் முடிகிறது. அது மட்டுமல்லாது ஓரிடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு பார ஊர்திகள் மூலமாகவும், சரக்குக்கப்பல் மற்றும் விமானங்கள் ஊடாகவும் பொருட்களை ஏற்றவும் இறக்கவும் முடிவதனால் உலகின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகவும் இப்போக்குவரத்துச் சாதனங்கள் திகழ்கின்றன. அதே போல் பல்வேறு நாடுகளின் மொழி கலாசாரம், பண்பாடு ஆகியவற்றை பிற நாட்டவரும் அறிந்து கொள்வதற்கு இவை வாய்ப்பாக அமைகின்றன எனலாம்.

இவ்வாறான நன்மைகள் எல்லாம் கொண்ட போக்குவரத்து சாதனங்களினால் தீமைகளும் ஏற்படத்தான் செய்கின்றன அவற்றிலே மிக முக்கியமானதாக விபத்துக்களை குறிப்பிடலாம். இன்று பத்திரிகைகளை திருப்பினால் விபத்தில் மரணம் என்ற செய்தி இல்லாத பத்திரிகையே இல்லை என்னும் அளவிற்கு விபத்து நிறைந்துள்ளது. வீதிகளில் மட்டுமல்லாது கப்பல்கள், விமானங்கள் கூட இன்று விபத்துக்குள்ளாகும்போது சாரதிகளினதும், ஓட்டுனர்களினதும் கவனயீனத்தை வார்த்தைகளால் சொல்லத் தேவையில்லை. இது ஒரு புறம் இருக்க வீதியெங்கும் பெருகியுள்ள வாகனங்களில் இருந்து சூழலுக்கு ஏற்படும் தீங்கை எவ்வாறு விபரிப்பது? எமது பூமிக்கு மேல்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியனில் இருந்து வரும் புறஊதாக்கதிர் களின் மூலம் ஏற்படும் பாதிப்பைத் தடுக்கும் ஓசோன் படையானது காணப்படுகிறது. இந்த ஓசோன் படையையே ஓட்டை போடும் வல்லமை கொண்டவையாக இந்த வாகனங் களில் இருந்து வரும் புகை அமைகிற தென்றால் அதனால் மனிதன் அடையும் தீங்கை எண்ணிப் பார்க்கவே உள்ளம் பட படக்கிறது. இன்று வானை கிழித்துச் செல் லும் மிகை ஒலி யுத்த விமானங்களால் மனி தனும் உலகும் செவிடாகிப்போகும் துர்ப்பாக் கிய நிலையை சொல்லத் தேவையில்லை.

இவை ஒரு புறம் இருக்க பேருந்துகள், விமானங்கள் முதலான பிற போக்குவரத்து சாதனங்களிலும் அதிகள வான பயணிகள் ஒரே நேரத்தில் செல்வதால் கொடிய தொற்று நோய்கள் முதலியனவும் ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத் திற்கோ செல்லும் அபாயமுண்டு. அதுமட்டு மல்லபோதைவஸ்து கடத்தல் ஆட்கடத்தல் முதலான தீய செயல்களுக்கும் இப் போக்கு வரத்து சாதனங்கள் துணை போகின்றன. இவ்வாறு பல தீமைகளைக் கொண்டிருந் தாலும் போக்குவரத்து சாதனங்களால் ஏற் படும் நன்மைகளைக் கருத்திற் கொண்டு தீமைகளை விடுத்து அனைவரும் பொறுப் புணர்வுடன் நடந்து நன்மை பெறுவது அவசியமாகும்.

நா.செந்தூரன்
மாணவ முதல்வன் 2014-2015






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சித்தர்கள் தந்த
# சித்த மருத்துவம்


மருத்துவ படிப்புகள் இல்லாத காலத்திலேயே நம் சித்தர்கள் நமக்கு வரும் நோய்கள் பற்றியும் அவற்றை எவ்வாறு இயற்கை முறையில் சரி செய்து கொள்வது பற்றியும் ஓலைச் சுவடிகளில் பதிந்து விட்டு போயிருக்கிறார்கள். ஆங்கில ஆதிக்கம் நமது பாரம்பரியத்தில் ஏற்படுத்திய தாக்கத்தில் அழிந்து போன அல்லது அழிந்துகொண்டு வருவன வற்றில் நமது சித்த வைத்தியமும் அடங்கும். எதற்கு எடுத்தாலும் ஆங்கில மருத்துவமனைகளுக்கு ஓடகிறோம். காரணம் நமது பாட்டி வைத்தியம் எனப்படும் சித்த மருத்துவத்தை அடுத்த தலைமுறைகளுக்கு எடுத்துச் செல்லாததால் வந்த நிலைமை ஆகும். ஆனால் சித்த வைத்தியர்களாகிய சேலம் சிவராஜ், பாக்கியராஜ், நாராயணன், திரு.இராமச்சந்திரன், அருண் சின்னையா ஆகியோரால் இன்றும் சித்த மருத்துவம் பேணப்படுகிறது.



